வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க விதி, கொழும்பு 12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 மாசி திங்கள் 25-ம் நாள் (8—3—1964) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வா 22 | இதழ் 41

# சிங்களத்தில் காசோலை இனி இல்லை

## ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் வெற்றி

கிழக்குமாகாண ஆசிரியர்கள் சிங்களக் காசோலையை எதிர்த்து நடாத்திய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகளுக்குப்பதில் வழக்கம் போல் ஆங்கிலத்தில் காசோலை வழங்கும்படி கிழக்குப்பிராந்திய கல்வி அதிபருக்கு கல்வி அமைச்சு கட்டளை பிறப்பித்திருப்பதாக அறியப்படுகிறது.

பெப்ரவரி மாதத்துக்கான ஆசிரியர்களின் வேதனத்துக்குரிய காசோலைகளையும் கிழக்குமாகாண வித்தியாதிபதி சிங்களத்தில் அனுப்பி வைத்தார். இதனை ஆட்சேபித்து கிழக்குமாகாண ஆசிரியர்கள் பெரும்பான்மையோர் காசோலைகளைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள். ஆசிரியர்களின் இக் கட்டுப்பாடான எதிர்ப்பிற்கு கல்வி அமைச்சு இணங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

1963 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டது போல், அடுத்த அறிவித்தல் வரை காசோலைகளை ஆங்கிலத்திலேயே வழங்கும்படி கல்வி அமைச்சு கிழக்குமாகாண வித்தியாதிபதிக்குக் கட்டளை பிறப்பித்திருப்பதாக, கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி, தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களிடம் கூறியுள்ளார் என்று தெரிகிறது. திரு. இராசமாணிக்கம் அவர்கள், சிங்களக் காசோலை பற்றி நிரந்தரக் காரியதரிசியுடன் விவாதித்தாரென்றும் அறியப்படுகிறது. இது பற்றி டாக்டர் இ. மு. வ.

(9-ம் பக்கம் பார்க்க)

## இறக்குமதி தடை

மிக அவசியமானபொருட்களின் இறக்குமதிஅடியோடு தடைப்பட்டு விடுமோ என்று வர்த்தக வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

கப்பல் கம்பெனிகள் கொழும்புத் துறைமுகத்துக்குச் சரக்கு ஏற்றிச்செல்லும் கப்பல்களின் கட்டணத்தை 50 சத வீதம் உயர்த்தி விட்டதின் விளைவாக, சுமார் 9 கோடிரூபாய் இலங்கை மேலதிகமாகச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம். இந்தப் பணமும் ஸ்டர்லிங்காக செலுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள தகவல் வெளிநாடுகளும் அறிய வந்திருப்பதால், உலகசந்தையில் வர்த்தகர்கள் இலங்கைக்கு கடனுக்கு சாமான்விற்கமறுத்து விட்டனரென்றும், உடனடியாகப் பணம் செலுத்தினுலன்றி உலகச் சந்தையில் இலங்கை பொருட்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும் அறியப் படுகிறது.

இந்த நெருக்கடியான நிலைமை இன்னும்சில மாதங்களுக்குநீடிக்குமாயின் இலங்கைக்கு மிக அவசியமான பொருட்களின் இறக்குமதி கூட தடைபட்டுவிடுமென்று வர்த்தகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சட்ட விதி தயாரிக்க முடிவு

தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கும் பொருட்டு நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தின் கீழ் அவசியமான விதிகளை விரைவில் தயாரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த விதிகள் மூலம் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்துக் கிடைக்கலாமென்றும், எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இவ்விதிகள் அமையுமென்றும் கூறப் படுகிறது.

உத்தியோக மொழிச் சட்டம், நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் ஆகியவை பற்றி காலஞ் சென்ற பிரதமர் என்ன கருத்தைக்கொண்டிருந்தாரோ, அந்தக் கருத்துக்கமைய இச் சட்ட விதிகளைத் தயாரிக்குமாறு பிரதம மந்திரி உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

## மீண்டும்..

ஐந்தாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து நாடெங்கிலும் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று அமைச்சரவை செய்து கொண்ட முடிவைத் தொடர்ந்து நாட்டின் ஆளுனர் நாயகம் விசேடச் செய்தி படல் மூலம் இதை அறிவித்துள்ளார்.

பொது சனப் பாதுகாப்பையும், அத்தியாவசிய சேவைகள் நடைபெற வேண்டியதையும் கவனத்திலெடுத்து அவசரகாலம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஆளுனர் நாயகம் அறிவித்துள்ளார்.

### செய்தி தணிக்கை

அவசரகாலச் சட்ட விதிகளின் பிரகாரம், தகவல், ஒலிபரப்புப் பகுதி இயக்குனர், உதவி இயக்குனர், ஆகியோர் நாடு முழுவதற்கும், அரசாங்க அதிபர்கள் ஒவ்வொரு நிர்வாகப் பிரிவுக்கும் பத்திரிகைகள், பிரசுரங்களைப் பொறுத்த வரையில் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

..அவசரகாலம்

மட்டக்களப்பு தமிழ் ஆசிரிய கலாசாலையை

## சிங்கள மயமாக்க முயற்சி?

## எதிர்த்துப் போராட அறிவிப்பு

மட்டக்களப்பிலுள்ள அரசினர் தமிழ் ஆசிரியர் கலாசாலையில் சிங்கள ஆசிரிய பயிற்சிப் பகுதி ஒன்றினை ஆரம்பிப்பதுபற்றி கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரி திரு. முணசிங்க ஆலோசனை நடாத்திவருவதாகத் தெரிகிறது. இத் திட்டத்தை எதிர்த்து தீவிரமான போராட்டம் ஒன்றை நடத்த தமிழ்பேசும் மக்கள் தயங்கமாட்டார்கள் என்று ஒரு ஆசிரியர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கிழக்குமாகாணத்தில் அனேக சிங்களப் பாடசாலைகள் இருக்கின்றனவாம். இப் பாடசாலைகளில் பயிலும் சிங்கள மாணவர்களுக்கு ஆசிரிய பயிற்சி அளிக்க மட்டக்களப்பு தமிழ் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கான கட்டிடங்களையே பாவிப்பதுபற்றி கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரி திரு. பி. வி. ஜி. முணசிங்க ஆலோசனைகள் நடாத்திவருவதாகச் செய்தி கிடைத்துள்ளது.

மட்டக்களப்பிலுள்ள தமிழ் ஆசிரிய கலாசாலையில் இப்பொழுது கல்வி பயிற்றப்படும் ஆசிரியர்கள் தொகையை கல்வி அமைச்சு வெகுவாகக் குறைத்துவிட்டது. இதன் காரணமாக கட்டிடங்களின் பெரும்பகுதி எதுவித பாவனைக்கும்இல்லாமல் இருக்கின்றதாம். கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களிலுமுள்ள சிங்கள மாணவர்களை சிங்களத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக்குவதற்கு இக் கட்டிடங்களைப் பாவிப்பதுபற்றி திரு முண

(9-ம் பக்கம் பார்க்க)

## கட்சிக் கிளைகளை அமைக்க தமிழரசு தீர்மானம்

தமிழரசுக் கட்சிக் கிளைகள் இதுவரை அமைக்கப்படாத இடங்களில் ஏப்ரல் மாதத்துக் கிடையில் கிளைகளை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளது.

மன்னார் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அமைப்பு விதிகளுக்கமைய வடக்குக்கிழக்கு மாகாணங்களிலும் வேறு பல பகுதிகளிலும் தமிழரசுக் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டன. ஆனல் வேறு பல பகுதிகளில் இதுவரை புதிய அமைப்பு விதிகளுக்கமைவாக கிளைகள் ஆக்கப்படவில்லை.

ஏப்ரல் மாதத்திற்குள்ளாக அகில இடங்களிலும் கிளைகளை அமைத்து விடவேண்டுமென்று தமிழரசுக் கட்சி செயற்குழு அண்மையில் கூடிய போது தீர்மானித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிளைகளை அமைக்கும் பொறுப்புகள் வட்டுக் கோட்டை பிரதிநிதி திரு. அமிர்தலிங்கத்திடமும், திரு. த. நடராசாவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்புப் பகுதி கிளை அமைப்புக்கான பொறுப்பு செனட்டர் மு. மாணிக்கம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கட்சிக் கிளைகள் முறைப்படி இயங்கவில்லையானல், புதிய அமைப்பு விதிகளுக்கமைய வருடாந்த மாநாடு கூடுவதற்கும் முடியாது. ஆங்காங்கே உள்ள கிளைச் செயலாளர்கள் உடனடியாகக் கட்சி நிர்வாகச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு நிர்வாகச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(9-ம் பக்கம் பார்க்க)

சீனப் பிரசாரத்திற்கு

## பாரிஸ் தளமாகிறது

'புரட்சி' எனும் பெயர் கொண்ட தமது திங்கள் இதழின் விநியோகத் தலைமையகத்தை லூசேனிலிருந்து, பாரிசுக்குச் சீன மாற்றிக் கொண்டிருக்கிறது. இதன் அடுத்த இதழ் பிரெஞ்சுத் தலைநகரில் அச்சாகக் கூடும். தமது பிரசார வெளியீடுகளை ஐரோப்பாவில் நிலையாக இருந்து விநியோகிப்பதற்கு அதிபர் டிகாலேயின் அரவணைப்பைச் சீன பயன்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

'தற்போது திங்கள் தோறும் அச்சிடப்படும் 40 ஆயிரம் பிரதிகளில் 10 ஆயிரம் பிரதிகள், மேற்கு ஆபிரிக்கா முழுவதிலும் விநியோகிக்கப்படுவதற்காக முன்னையப் பிரேஞ்சு கினிக்கு விமான மூலம் அனுப்பப்படுகின்றன' என்று 'சண்டே டெயிலிகிராப்' இதழின் அரசியல் நிருபர் மதிப்பிட்டுள்ளார்.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மேலிட மட்டத்தில் புதிதாகக் களையெடுப்புப் படலம் விரைவில் மேற்கொள்ளப்படக்கூடும் என்று கிழக்கு ஜெர்மனி தூதரக வட்டாரத்தினருக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருகிறது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் இராணுவக் கவுன்சில்களிலும் ரஷ்ய ஆதரவாளர்களாக இருந்து கொண்டு, கட்சித் தலைவர் மா-சே-துங்கின் கொள்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயரை வியப்பிலாழ்த்திய இந்திய வானம்பாடி கலையரசி சரோஜினி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

1930ம் ஆண்டில் காந்தி அடிகள் தொடக்கிய உப்பு சத்தியாக்கிரகத்தில் சரோஜினி நாயுடு ஆற்றிய பணி வியத்தகு பணியாகத் துலங்கியது. பெண்குலத்தின் தனிப் பேராற்றல் இவர் வாயிலாக அன்றுவெளிவந்தது. இச் சத்தியாக்கிரகத்தில் மகாத்மா முதலில் சிறையிடப்பட்டார். அவரின் இடத்தை அபாஸ் தியாபியி (Abbas Tyabji) ஏற்ருர். அவரும் சிறைப்பட்டபோது அந்த இடத்தைக்கவிக்குயில் ஏற்றுத் தலைமை தாங்கிய செயல்—வீராங்கனையாக மாறிய காட்சி வரலாற்றில் நிலையான இடம் பெறும் கண்கொளாத காட்சி அவர் அன்று மக்களுக்கு விடுத்த அறிவுரை-வீரவுரை எம் நெஞ்சில் என்றும் எழுச்சியூட்டியபடியே இருப்பது உறுதி. இதோ அவர்மொழிந்தவை: "Gandhi's body is in jail but his soul is with you. India's prestige is now in your hands. You must not use any violence under any circumstance. You will be beaten but you must not resist; you must not even raise a hand to ward off blows" (காந்தியின் உடல் சிறையில்; ஆனல் அவரின் ஆன்மா உங்களிடையே உண்டு. இந்தியாவின் மதிப்பு உங்கள் கையிலேயே தங்கியிருக்கிறது. ஆதலால் எந்த நிலையிலும் வன்முறைக்கு இடம் கொடாதீர்கள். நீங்கள் தாக்கப்படுவீர்கள் ஆனல் நீங்கள் அதை எதிர்க்க வேண்டாம். உங்கள் மீது விழுகின்ற அடிகளில் இருந்து தப்புவதற்குக் கூடக் கைகளை உயர்த்த வேண்டாம்)

இவ் வீராங்கனையின் நெஞ்சத் துணிவின் நேர்மைத் திறனின்—மான உணர்ச்சியின் காட் பங்குவாகுதல் ஈழம் வாழ் தமிழ் பேசும் இனத்திற்கோ அதன் தலைவர்க்கோ இருப்பின் சிங்கள இனவெறிக்கு அஞ்சி அஞ்சிச் சாகின்ற—உலகம் எள்ளிநகையாடுகின்ற இழிநிலை எமக்கு ஏற்பட்டிராது. மாருக ஈழமண்ணில் தமிழ் அரசை நிறுவி, தனிக் கொடி ஏற்றி தலை நிமிர்ந்து விடுதலை வீரராக ஏறு நடை போட்டபடியிருப்போம். எம்மை யாம் நோவதை விட வேறு யார் மீது இப்பழியினை யாம் ஏற்றுவது?

### காலத்தோடு வளர்ந்தார்

சில தலைவர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து காலத்தோடு வளர்கிருர்கள். வேறு சிலர் கால வெள்ளத்துள் அமிழ்ந்து மறைந்து விடுகிருர்கள். ஆனல் சரோயினி அவர்கள் காலத்தின் போக்கை உணர்ந்து பணியாற்றியதினல் இவரின் பணி மக்களுக்குப் பல வழிகளில் தேவைப்பட்டது. 1931ம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் அண்ணல் காந்திக்குப் பக்க துணையாக இருந்து பணியாற்றினர். அத்துடன் காங்கிரசின் முக்கிய கூட்டங்கள்—

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**ஈழவேந்தன்**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

முடிபுகள் அனைத்திற்கும் இவரின் வளம்மிகு மூளை பயன்பட்டது. இறுதியில் விடுதலை பெற்ற இந்தியாவின் மேற்கு வங்காள ஆளுநராகவும் சிறப்புறப் பணியாற்றினர்.

### சரோயினியின் நகைச் சுவை நயம்

சரோயினி அவர்கள் சிறந்த கவிஞர், எழுச்சியூட்டும் பேச்சாளர், நாட்டுப் பற்றுளர் (தேசபக்தர்), கணவர் கருத்திற்கமைய ஒழுகிய அன்பு மனைவி, தான் பெற்றெடுத்த குழந்தைகளை தாய்மை உணர்ச்சியுடன் பேணிய தாய். இவை அனைத்திற்கும் மேலாக அவரிடம் ஊறிக் கிடந்த ஒரு உணர்ச்சியை இங்கு குறிப்பிட்டே யாக வேண்டும். அதுதான் அவரிடம் பொங்கி வழிந்த நகைச்சுவை உணர்ச்சி. இடுக்கண் ஏற்பட்ட காலமெல்லாம் "இடுக்கண் வரின் நகுக" என்று கூறும் முறையில் நகைச்சுவையோடு அவர் பொழிந்த நகைச்சுவைத் துணுக்குகள் பலரின் மனச் சோர்வைப் போக்கின. காந்தி அடிகளின் கவலைகள் பலவற்றைத் தீர்த்த மாமருந்து சரோயினி அம்மையாரின் 'நகைச்சுவை மருந்து. இவ்வுண்மையை காந்தி அடிகளே பலதடவை குறிப்பிட்டுள்ளார். தலைவர்களைக் கூட இவர் நகைச்சுவையோடு கிண்டல் செய்யத் தயங்கியதில்லை. காந்தியை Mickey Mouse (சுண்டெலி) என்றும் நேருவை Prince Charming (கவர்ச்சிமிக்க இளவரசன்) என்றும் பட்டேலை Bardoli Bull (பாடோலி எருது) என்றும் பலதடவை கிண்டல் செய்து இவர் மகிழ்வதுண்டு. இவரின் நகைச்சுவை பற்றியே ஒரு தனிக் கட்டுரை வரையலாம். அதனை வாய்ப்புள்ள போது பயன் படுத்துவோம்.

### மறைவும் நேருவின் புகழ் மாலையும்

சுருங்கங் கூறின் இப்படி பல்துறையில் புகழோடு வாழ்ந்த சரோஜினி அம்மையார் 2-3-1950ல் தனது 70 வது அகவையில் "என் வாழ்வின் பணி முடிந்து விட்டது" என்று உலகிற்கு கூறுவதுபோல் அவர் வாழ்வும் முடிவுற்றது. ஆனல் அவரின் உயர் பண்பினை உணர்ந்த உலக மக்கள் மொழி—இனம்—நாடு என்ற நிலை கடந்து முடிவிலாத் துயரில் மூழ்கி, ஆற்ருது கண்ணீர் சிந்தினர். இந்திய துணைக் கண்டத்தின் முதல் அமைச்சர் நேரு அவர்கள் தனக்கே உரிய தனி முறையில் அவருக்குப் பின் வருமாறு புகழ்மாலை சூட்டினர்.

"சரோயினி நாயுடு கவிஞராக வாழ்வைத் தொடங்கினர். ஆனல் பிற்காலத்தில் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவரைத் தேசிய போராட்டத்தில் ஈர்த்த போது அதில் மிகத் தீவிரமாகப் பங்குபற்றினர். அதனல் அவர் தாளிலே பேனு கொண்டு பல கவிதைகள் எழுதியதல்ல. அவரின் முழு வாழ்வே கவிதையாக மாறியது. அத்தோடு ஒரு வியத்தகு செயலும் செய்தார். அதுதான் எம் தேசிய இயக்கத்திற்குக் கலை உணர்வினையும் கவிதை உணர்ச்சியையும் ஊட்டினர். எப்படி "எங்கள் நாட்டின் தந்தை" மகாத்மா அறவடிவினையும் ஒழுக்க உயர்வினையும் எம் விடுதலை இயக்கத்திற்கு ஊட்டினரோ அது போல் சரோயினி நாயுடுவும், கலையையும் கவிதைகளையும் வாழ்விற்கு ஒளியையும், எந்த நெருக்கடியான நிலையிலும் எதையும் தாங்கும் இதயப் பண்பினையும் பெற்று, உதட்டில் ஒரு பாவைப் பாடி முகத்தில் புன்முறுவலோடு விளங்கச் செய்தார்."

இதற்குமேல் இக் கட்டுரையை விரிக்க முயலின் மேற் குறித்த மேன்மை உரைக்கு இழுக்குத் தேடுவதாய் அமையும். ஆதலால் "இந்தியாவின் வானம்பாடி"யாகிய சரோயினி தேவியே எம் நெஞ்சில் என்றும் நீ வாழ்வாயாக வென வாழ்த்தி இனிது முடிப்பாம்.

# காலத்தின் குரல்

பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் மூன்ருவது வெளியீடான 'காலத்தின் குரல்' சிறுகதைத் தொகுப்புவெளியீட்டு விழா மிக அண்மையில் நடைபெறவிருக்கிறது. இத் தொகுப்பில் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், சுக்கிரி, அங்கையன் ஆகியவர்கள் உட்பட பல் கலைக் கழக மாணவர்கள் ஒன்பதின்மரின் சிறுகதைகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகிறது. இந்நூல் வெளியீட்டு விழாவில் கிழக்கிலங்கைஎழுத்தாளர்சங்கப் பிரமுகர்திரு எஸ். பொன்னுரையும், செல்வி. பவானி ஆழ்வாப்பிள்ளையையும் [illegible] அறியப்படுகிறது.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர்: 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

# என்ன செய்யும்?

—புலவர் தமிழ்மாறன்—

மக்களிடம் குடையிருக்க மாமழைதான்
  என்செய்யும் வெயில்தான் என்செயும்?
தக்கதொரு அறவாய்தம் தமிழர்க்கு
  இருக்கையில் அரசுதான் என்செயும்?
மிக்கதொரு கப்பலினை மேவுமலை
  என்செய்யும்? மிகுபுயல் என்செயும்?
திக்கனைத்தும் உலவிவரு தீந்தமிழை
  திசைமொழியாம் சிங்களம் என்செயும்?

திடமுள்ள பெண்ணுக்குத் தீயவன்பலம்
  என்செய்யும்? அவன்மொழிதான் என்செயும்?
திடமுள்ள தமிழனுக்குத் துப்பாக்கி
  என்செய்யும்? தூக்குமேடை என்னசெயும்?
மடங்காத மலைதன்னை மூடுமுகில்
  என்செய்யும்? மூடுபனி என்செயும்?
மடங்காத தலைவர்களை மடக்குசிறை
  என்செய்யும்? மாற்ருள்படை என்செயும்?

உரிமையிதழாம் 'சுதந்திரன்' இருக்க
  உளவாளி கூட்டம் என்செயும்?
சிரித்துரைக்கும் 'செல்வா' இருக்க
  'சிறிமாவோ' அரசு என்செயும்?
எரிமலைபோல் குமுறும் இதயம்
  இருக்கையில் சட்டம் என்செயும்?
பரணிபாடும் புலவர் இருக்கப்
  பகைவரின் பழிமொழி என்செயும்?

ஆண்டவனைப் பார்த்து ஐயர்கள்
  உரைத்திடும் மந்திரம் என்செயும்?
மாண்டதமிழ் அரசை மாட்சியிலார்
  தூற்றிடும் மொழிகள் என்செயும்?
ஆண்மையை அச்சம் என்செயும்?
  உண்மையைப் பொய்தான் என்செயும்?
ஆண்டதமிழ் இனத்தை அரசாங்கம்,
  என்செய்யும்? அதன்பலம் என்செயும்?

உரிமையைப் பறித்தாலும் உத்தியோகம்
  பறித்தாலும் உதவி மறுப்பினும்
எரிகின்ற நெருப்பிலிட்டு எம்மறிவைப்
  பொசுக்கினலும் நீக்கிரோ ஆக்கினும்
எருமைகளின் ஆட்சியினை உருவாக்கும்
  அரசாங்கமே! இவைகள் எல்லாம்,
சரித்திரத்துத் தமிழர்களின் சாம்பரைத்தான்
  என்செய்யும்? எனஉணர் வாயே.

# தமிழ் என்றேன்; சுவை தந்தாள்

—மணியம்—

"தேன்நிலவே!" என்றழைத்தேன் 'தேய்ந்துபோகும்
  சிறுகுணத்தாள் எனநினைத்தாவிட்டீர்' என்ருள்
"வான்காற்றே!" என்றழைத்தேன் 'காலமாற்றில்
  வரும் புயலாய் விடுவேனு?' எனச்சினந்தாள்
"மானினமே" என்றழைத்தேன்' பிறர்நாவுக்கு
  வாய்த்த நல்லுணவாக்கினுயோ?, என்ருள்
"தேன்தமிழே!" என்றழைத்தேன் திரும்பிவந்து
  தெவிட்டா நல்லிதழ் தந்தாள்;இன்பம் கொண்டாள்.

"புத்தமுதே!" என்றழைத்தேன் 'புசித்தபின்னர்
  போக்கிவிடும் கழிபொருளா' எனச்சினந்தாள்
"சித்திரமே!" என்றழைத்தேன் 'சிலநாட்செல்ல
  சிதைந்தழியும் பொருளாக்கிவிட்டாய்' என்ருள்
"முத்தழகே! என்றழைத்தேன் 'பிறர்கழுத்தில்
  மின்னுகின்ற பேறெனக்கா போங்க' என்ருள்
"முத்தமிழே!" என்றழைத்தேன் முகம்மலர்ந்து
  மொழிதவழும் இதழ்தந்தாள்;இன்பம் கொண்டாள்

"பூங்குயிலே!" என்றழைத்தேன் 'பிறர்விரும்பாப்
  பொல்லாத கரிவடிவா' எனஅழுதாள்
"மாங்கனியே!" என்றழைத்தேன் 'காக்கை கொத்தும்
  பொதுவுடமை ஆக்கிவிட்டாய்' எனச்சினந்தாள்
"செங்கருபபே!" என்றவுடன் 'செக்கிலிட்டுத்
  திரித்திடும் பொருளாக்கிவிட்டாய்' என்ருள்
"பைந்தமிழே!" என்றவுடன் இறுகணைந்து
  பழரச இதழ்தந்தாள்; இன்பம் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அம்பலவாணர்,**
**காரைநகர்**

கே: குயுக்தியார் அவர்களே! இந்தியாவிலே இந்தித் திணிப்பை எதிர்த்து, தி. மு. கழகத்தின் அங்கத்தவர் சின்னசாமி என்பவர் தன்னைத் தானே தீ மூட்டி எரித்தார். ஆனால் இங்கே சிங்களத் திணிப்பை எதிர்த்து ஒருவரும் தற்கொலை புரியவில்லையே, இதன் மர்மம் என்ன?

ப: இலங்கையில் சிங்களத் திணிப்பை எதிர்ப்பவர்கள் சத்தியாக்கிரகிகள். எரிமூட்டி உயிர்த் தியாகம் செய்வது சத்தியாக்கிரகிகளுக்கு உகந்ததன்று.

ஃ

**ஆ. கணேசமூர்த்தி,**
**திருக்கோயில்**

கே: திரு. குயுக்தியார் அவர்களே! தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் வந்தால் தமிழ் மாணவர்களின் கதி என்னவாகும்?

ப: வரக்கூடாது. வந்தால் படிப்பிக்கப் பிள்ளைகள் கிடைக்காமல் பார்த்துக் கொள்வது தமிழ் மாணவர்கள் பொறுப்பு.

ஃ

**ஏ. தங்கராசா,**
**சூரியகனப்பத்தனை**

கே: நான் தமிழரசுக் கட்சியாற்றான் தமிழருக்கு முன்னேற்றமுண்டு என்னும் போதெல்லாம் என்னை ஒரு நண்பன் நையப் புடைக்கிறான். அவனின் நோக்கத்தைக் கூறும் பார்ப்போம்?

ப: நன்றாகப் புடைக்கட்டும்—அதில் தேறினால்தான் நீங்கள் தமிழர் முன்னேற்றத்துக்காகத் தியாகம் செய்யத் தகுதிவாய்ந்தவராவீர். அந்த நோக்கத்துடன் தான் நண்பன்......

கே: அடுத்த தேர்தலில் தமிழரசுக்கட்சி கேட்கும் ஸ்தானங்கள் அத்தனையும் கிடைக்கும் என்னும்போது அதே நபர் அதை எதிர்க்கிறது மட்டுமன்றி ஒரு ஸ்தானமும் கிடையாது என்கிறார். ஏன்?

ப: அப்படிச் சொன்னால் தான் கட்சியின் வெற்றிக்காக நீங்களும் களத்தில் இறங்கி தீவிரமாகப் பாடுபடுவீர்கள் என்பதற்காக...

கே: ஓய்.... குயுக்தியாரே...... தமிழரசுக்கட்சி தமிழை வளர்க்கக் கருதுகிறதா? அல்லது சிங்களத்தை முழுமூச்சுடன் எதிர்க்கிறதா?

ப: சிங்களத்தை எதிர்ப்பது கட்சியின் நோக்கமல்ல. அது நம் சகோதர இனத்தின் தாய் மொழியல்லவா? தமிழ் மொழியின் வளர்ச்சியைச் சிங்களம் குறுக்கிட்டுத் தடுப்பதால், அந்தக் குறுக்கீட்டையும், தடுப்பையும்தான் கட்சி எதிர்க்கிறது. இல்லையேல் தமிழ் மொழி அழிந்துவிடும்.

கே: 17-2-64 மொழிப் போராட்ட எதிர்ப்பு ஏன் பின் போடப்பட்டது?

ப: சமரசப் பேச்சு நடைபெறும் போது யாராவது போராடிக்கொண்டிருப்பார்களா?

ஃ

**க. சுப்பிரமணியம்,**
**கோவில்குளம்**

கே: ஆரப்பற்றையில் இருக்கும் எனது பாடசாலையில் ஜீ. சி. ஈ. வகுப்பு மாணவ, மாணவிகளுக்குப் பாடம் படிப்பிற்கும் ஆசிரியர்கள் கரும்பலகை இல்லாத காரணத்தால் சுவர்களில் எழுதிப் படிப்பிக்கிறார்கள். இது பற்றி உங்களுடைய நோக்கம் என்ன?

ப: உஸ்! வெளியே சொல்லாதீர்கள். "கரும் பலகை வேண்டாம். சுவற்றிலேயே எழுதிப் படிப்பியுங்கள். அவற்றில் சித்திரம் எழுத முடியுமென்றால், ஏன் எழுத்து எழுதக் கூடாது?' என்றெல்லாம் கல்வி மந்திரியிடமிருந்து தமிழாசிரியர்களுக்குச் சுற்றறிக்கை வந்துவிடப்போகிறது!

**ஏ. அலித்தம்பி,**
**அக்கரைப்பற்று**

கே: நானும் எனது நண்பனும் ஒரு சிறு விஷயத்திலாவது போட்டியிடாமல் இருந்ததில்லை. இதனால் இருவருக்குமிடையில் மனத்தகராறு ஏற்படுகிறது இப்போட்டி ஏற்படாமல் இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

ப: வாழ்வில் முன்னேறப் போட்டி தேவை! தகராறு ஏற்படாத வகையில் தொடர்ந்து போட்டியிடுங்கள். போட்டியில்லையேல் முன்னேற்றம் தடைப்படும்.

ஃ

**என். பி. அரிராம்,**
**சித்தங்கேணி**

கே: நீங்கள் இலங்கைப்பிரதமராக வந்தால்.........?

ப: வந்தால் எனது மந்திரிசபையில் உங்களுக்கு நிச்சயம் இடம் கிடைக்காது. மனப்பால் குடிக்க வேண்டாம்.

ப: சிறுபான்மை மக்களின் உரிமைகள் பறிபோகக் கூடியதாக அரசியற் திட்டம் தீட்டிவிட்டு, வனமிருகங்களின் உரிமைகளைக்காப்பதில் அக்கறை கொண்டுள்ள 'பிரபுக்களைச் சந்திப்பதில் எனக்கு அக்கறை கிடையாது.

கே: உங்களுக்குப் பிடித்த தமிழ்ப் புத்தகம் எது?

ப: அரிவரிப் புத்தகம்.

ஃ

**ஏ. பி. டேவிட் பெரேரா,**
**பண்டாரவளை**

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன், அவளும் என்னைக் காதலித்தாள். ஆனால் எங்களின் காதல் எனது தாய் தந்தையருக்கும் அவளுடைய தாய் தந்தையருக்கும் தெரியாத விஷயமாய் இருந்தது. தற்சமயம் அவள் தமிழ் நாடு சென்றுவிட்டாள். என்னுடைய மனம் அவளையே நாடுகிறது. அவளுடைய மனம் எப்படி இருக்குமோ! இதற்கு நான் என்ன செய்வது? (நான் சிங்களவர்)

ப: காதலுக்கு இனம் தடையன்று. இருவரின் தாய் தந்தையர்களினதும் அரசாங்கத்தினதும் அனுமதியைப் பெற்று, அப்பெண்ணை அழைத்து வந்து மணம் செய்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**திருவேங்கடம்,**
**ஆ.பி-எல**

கே: என் சிநேகிதன் ஒருவன் அடிக்கடி பேப்பர் சாப்பிடுகிறான். இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: உங்கள் சிநேகிதர் கழுதையா பேப்பர் சாப்பிட?

ஃ

**ஆ. சுப்பையா,**
**பலாங்கொடை**

கே: குயுக்தியாரே! நீங்கள் கேள்விக்குப் பதிலளிக்கும் தொழிலிலிருந்து லீவு பெறும் பொழுது அத்தொழிலை என்னிடம் தருவீர்களா?

ப: கேள்வி கேட்பவர் பதிலளிக்கும் வேலையை மேற்கொண்டால், கேள்வி கேட்பது யார்? நானா?

**காரைவண்ணன்,**
**காரைநகர்**

கே: தற்பொழுது நடைபெறும் உயர் பரீட்சைகளிலே ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகச் சித்தியடைகிறார்களே. இதன் மர்மம் யாது?

ப: படித்தும் வேலையில்லை-பட்டம் பெற்றும் உத்தியோகமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டதால் ஆண்கள் படிப்பில் அசந்துவிட்டார்கள்.

ஃ

**எஸ். மலர்விழி,**
**சின்னக்கிண்ணியா-2**

கே: நான் கவிதையொன்று எழுதி வைத்துள்ளேன். அதை அனுப்பினால் உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பீர்களா?

ப: நிபந்தனைக்குட்பட்டு கவிதைகளை ஏற்றுக்கொள்ளும் பத்திரிகையல்ல சுதந்திரன். கவிதையை அனுப்பி வையுங்கள். தகுதியானால் பிரசுரிப்பார்கள்.

ஃ

**வே. இராஜேஸ்வரி,**
**இடைக்காடு**

கே: காதல்-கலியாணத்திற்கு முன்பா, பின்பா தோன்றி வளர்ச்சியடைகிறது?

ப: முன்பு.

கே: மொழிப் பிரச்சினையே இல்லை என்று சொல்லிய அரசாங்கம்இப்போது சர்வகட்சி மகாநாடு கூட்டுவது எதனால்?

ப: மறியல் போராட்டம் தொடங்கப்படுமென அறிவித்ததின் எதிரொலியே இந்தச் சமரசப் பேச்சு. நடந்த சத்தியாக்கிரகத்தில் கற்ற படிப்பினை இதற்கு மற்றொரு காரணம். சத்தியாக்கிரகம் தோல்விகாணவில்லை என்று நாம் அன்று கூறியது உண்மை என்பது இன்று தெரிகிறதல்லவா?

ஃ

**க. பாலகிருஷ்ணன்,**
**பம்பலப்பிட்டி**

கே: ஆங்கிலப் பத்திரிகையொன்று அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தும், சிறுபான்மை மக்களை ஆதரித்தும் எழுதுகிற வேளையில், சிறுபான்மை மக்களுக்காகப் போராடும் தமிழரசுக் கட்சியைத் தாக்குவதன் நோக்கமென்ன?

ப: தமிழ் பேசும் மக்களைத் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரித்துவிடக் கையாளும் மிக நுட்பமான உபாயம் இது.

கே: வட-கிழக்கு மாகாண மக்களுக்கு மொழியுரிமையைக் கூட இன்னும் பெற்றுக் கொடுக்காத தமிழரசுக்கட்சியை மலையக மக்கள் நம்பக் கூடாது என்கிறார்களே தொண்டமான்கள். ஐயகோ! இவர்கள்தான் சாதித்ததென்ன?

ப: எதையும் செய்யத் திராணியற்றவர்கள்தானே அப்படிக் கூற முடியும்? இம்மாதிரியான நபர்களால் தான் மலைநாட்டு மக்கள் பிரஜாவுரிமை பெற முடியவில்லை.

கே: மலையகத்து மக்களிடையே உரிமைக் கிளர்ச்சியை வளர்த்து வரும் இ. தொ. கழகத்தின் செய்திகளை வெளியிட பின் வாங்குகிறதே ஒரு தமிழ்த் தினசரி.

ப: காசோலைகளுக்காக மலையகத் தமிழர்களின் உரிமைகளைக் காட்டிக் கொடுக்கும் பத்திரிகை அது,

ஃ

**எஸ். ஏ' என். ஆபிரகாம்,**
**கல்பொட**

கே: சில காலமாக இங்குள்ள ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் இந்தியாவுக்குப் பாதகமாகவும் சீனா, பாகிஸ்தானுக்குச் சாதகமாகவும் எழுதி, அவ்விரு நாடுகளிலிருந்துவரும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதேன்?

ப: இலங்கை-இந்தியப் பிரச்சினையில் இப்பத்திரிகைகள் இந்தியா மீது கோபம் கொண்டுள்ளன. எனவே இந்தியாவின் விரோதிகளை ஆதரிக்கின்றன.

# நவீன "பெண்மை"

—அளவெட்டி:-மு. திருநாவுக்கரசு—

பெண்மையென்பது யாதெனில் ஆண்மகனை
அடக்கி ஒடுக்கும் திறன்.

காலை எழாள் கடிமனையைத் தான் கருதாள்
வேலைக்குச் சென்றடைதல் வேண்டி.

தாலியது கட்டில் தணிந்து விடும் மதிப்பென்று
சேலையதால் தான் மறைப்பள் சினந்து.

கொன்னை யொடு தமிழைக் கொச்சையாய்ப் பேசிவிடில்
பண்புடனே பலர் மதிப்பர் பணிந்து.

எட்டடிக்க முட்டைக் கோப்பியுடன் தானெழுந்து
ஆறடிக்கக் கண்அயர்வாள் அலுத்து.

மேக்கப்பில்லாத, மெல்லியரைக் கண்டாடவர்கள்
ஓடிடுவர் ஒதுங்க இடம் தேடி.

உண்டி பெருத்து உடல் வேலையற்றமையால்
வண்டி கொண்டு வருத்த மடைவாள்.

பெண்மையுடையாள் பேயெனவே உருவெடுப்பாள்
அன்னவள் ஆண்மகனைச் சாகடிக்கும் பிசாசு.

ஓரிரண்டு மகவிற்கு மேலாகப் பெற்றுவிடில்
சீரழியும் பெண்மை யெனும் சிறப்பு.

சீறிச் சினப்பாள் சிரித்து முக மலராள்
வீறுகொண்டு செஞ்சினங் கொள் வேண்டி.

**எம். எம். மர்ஜினா,**
**கிண்ணியா**

கே: ஒரு தொழிலாளர் சங்கத்திற்கு பௌத்த பிக்கு ஒருவர் தலைவராயிருக்கின்றாரே, இது பௌத்த மதத்திற்கே முரணல்லவா?

ப: முரண்தான் — ஆகையால்தான், இலங்கையில் பௌத்தம் தேய்ந்து வருகிறதென்று வெளிநாட்டுப் பெரியார் ஒருவர் அண்மையில் கூறினார்.

ஃ

**தி. மதுரம், அளவெட்டி**

கே: கல்வி கற்கும் தமிழ்ச் சிறார்களின் வருங்காலம் வளம் பெறுமா? சிதையுமா?

ப: அரசாங்க நிருவாகத்தில் 'தமிழ் இடம் பெறுமானால் அவர்களின் வருங்காலம் வளம் பெறும்.

கே: சோல்பரி பிரபு தம்பதிகள் இலங்கைக்கு [illegible] திருக்கிறார்களாமே, [illegible] சந்தித்தீர்களா?

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்[illegible] எடுக்கப்படும்.


**பாட்டரி ரேடியோ பாவிப்பாளருக்கு ஓர் நற்செய்தி!**

ஜேர்மனியில் செய்யப்பட்ட
'கிரன்டிக்' ரேடியோ பாட்டரிகள்
இப்பொழுது கிடைக்கும்.

**90 வி. எச். றி. * 1.5 எல். றி.**

**450 தொழிலாற்றும் மணித்தியாலங்களின் வாழ்நாளுக்குச் சமம்.**

விபரங்கள்
உங்கள் பட்டணத்திலுள்ள 'கிரண்டிக்'
விற்பனையாளரிடமிருந்து

அல்லது

'கிரண்டிக்' ஏக விநியோகஸ்தர்கள்:-

**சென்ற் அந்தனீஸ்**
**ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,**
516, ஸ்கின்னர்ஸ் றோட் தெற்கு,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. கழகத்தின் வெற்றி இந்தி எதிர்ப்புக்கு வெற்றி

## நகராட்சி தேர்தல் முடிவு பற்றி அமிர்தலிங்கம் கருத்து

(சுதந்திரன் நிருபர்)

தமிழ் நாட்டு நகராட்சி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள், இந்தித் திணிப்புக்கு எதிராக மக்களின் ஆதரவு தினம் தினம் பெருகிவருகிறதென்பதைத்தெளிவாக எடுத்துககாட்டியுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டிருந்த போதிலும், கழகத்தின் தொண்டு மனப்பான்மையை மக்கள் உணர்ந்துவருகிறார்கள். இந்தியை எதிர்த்து முறியடிக்கும் ஆற்றல் தி மு. கழகத்திடம் உண்டு என்பதைத் தேர்தல் முடிவுகள் வெளியுலகிற்கும் தெரியப்படுத்தியிருக்கின்றன.

தமிழக உள்ளூராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல முடிவுகள் பற்றி வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களிடம் நமது நிருபர் வினவியபொழுது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



திரு. அ. அமிர்தலிங்கம்

மேலும் நமது நிருபரிடம் அவர் கூறியதாவது:-

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மக்கள் காட்டும் ஆதரவுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளூராட்சி மன்றங்களில் பெற்றிருக்கும் வெற்றி. ஏற்கனவே கழகம் பெற்றிருந்த இடங்களிலும் பார்க்க இம்முறை கழகம் வெற்றிபெற்றிருக்கும் இடங்களின் எண்ணிக்கை குறிப்பிடக்கூடிய அளவு அதிகமாக உள்ளது. எனவே, கழகத்தின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைமேலும்வலுப்பெற்று வருகிறது என்பது தெரிகிறது.

### கம்யூனிஸ்டுகளுக்கு நல்ல பாடம்

'தி. மு. கழகத்தைத் தலையெடுக்க விடமாட்டோம், வேரோடு களைந்தெறியப் போகிறோம்' என்று கம்யூனிஸ்டுக் கட்சியினர் தேர்தல் காலத்தில் வீராப்புப் பேசியதாகப் பத்திரிகைவாயிலாக அறிகிறேன். ஆனல் தேர்தல் முடிவுகளைப் பார்க்கையில் நிலைமை மாறுபட்டு அமைந்திருக்கிறது. தேர்தல் முடிவுகள் கம்யூனிஸ்டுகளின் முடிவு காலத்தை முன்னறிவிப்பதாக அமைந்திருக்கின்றன. நாட்டையும், இனத்தையும் காட்டிக்கொடுக்கும் கம்யூனிஸ்டு துரோகக்கும்பலுக்கு, இத்தேர்தல் முடிவு நல்ல பாடமாகும்.

### படித்தவர்கள் ஆதரவு

இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் கலந்துகொண்டு மறியலில் இருக்கும் சில தி. மு. க. தொண்டர்கள் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடக்கூடியது. கழகத்தின் வெற்றி பெரும்பாலும் படித்தவர்கள் வாழும் பகுதியிலேயே அமைந்திருக்கிறது. இந்தித் திணிப்பின் பயங்கரத்தைப் படித்தவர்களால் மட்டுமே உணரமுடியும். வருங்காலத்தில் கழகத்தின் பிரசாரம் கிராமப்புறத்திற்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அப்பொழுது தான் இந்தித்திணிப்பை முறியடிக்க முடியும்.

# இலங்கை மீது படையெடுப்பா?

"உடனே புறப்படுங்கள்"! என்ற உத்தரவு கேட்டுத் துள்ளியடித்து ஆயத்தமாகி இலங்கைப் பட்டாளத்தின் இராணுவ வீரன் ஒருவன் மற்றொரு வீரனிடம் "என்ன நடந்தது" என்று கேட்டானும்.

"ஞ என் லாய் விஜயத்தை முன்னிட்டு இந்தியா நம் மீது படையெடுத்து விட்டதாம்—பாரதத் துருப்பு வீரர்கள் இரத்மலானை விமான நிலயத்தில் வந்து இறங்குகிறார்களாம்" என்று நடுங்கியபடியே பதில் கூறினானும் மற்றவன்.

"இருக்கிற ஆயுதங்கள் உள்ள கவச மோட்டார்கள் முதலாகப் போருக்குப் புறப்பட்டனர். இந்த இராணுவ வீரர்கள் படலையைத் தாண்டு முன்னரே உடையெல்லாம் வேர்வையால் நனைந்து விட்டது. இரத்மலானையை நெருங்க நெருங்க நாடியும் ஒடுங்கி விட்டது. நெஞ்சே நின்றுவிடும் போலிருந்தது" என்று திங்கள் இரவு நடந்த நிகழ்ச்சியை என்னிடம் வர்ணித்தான் ஒரு சிங்களப் பட்டாள வீரன்.

"ஆனல்......" என்று இழுத்தான். "இரத்மலானையில் நின்றது ஒரே ஒரு சிறிய விமானமும் மூன்று இந்திய சீக்கிய வீரர்களும் மட்டுமே. இதைக் கண்ட மாத்திரத்தில் எல்லோரும் ஒரு பெருமூச்சு விட்டனர்," என்று தொடர்ந்தான்.

ஒரு விமானமும் மூன்று வீரர்களும் தானே நிற்கிறார்கள் என்று தெளிவானதும் இராணுவக் கெடுபிடி மிகவும் வலுவடைந்ததாம். "துப்பாக்கிகள் எல்லாம் மூன்று இந்திய வீரர்களை நோக்கிய வண்ணம் நின்றும் அவர்கள் பயப்பட்டதாகத் தெரியவில்லை" என்றும் கூறினன்.

மின்சார இணைப்புகளில் ஏதோ பழுது ஏற்பட்ட இவ்விமானம் முதலில் கட்டுநாயக்காவுக்குப் போனதாகவும், அங்கு இறங்க வசதி இல்லாததாலேயே இரத்மலானை நிலயத்திற்கு வந்ததாகவும், விமான நிலயத்தினர் இறங்க உத்தரவு மறுத்து ஓடுபாதை வெளிச்சங்களை அணைத்து விமானம் இறங்காமற் செய்ய முயலவே இருட்டில் விமானம் இறங்கி, வேறு எதிலாவது மோதிவிடாதிருக்க உடனடியாக 'பிரேக்' போட்டு நின்றதால் அதன் டயர்கள் வெடித்தன என்றும் பேச்சடிபட்டதாக இந்த நபர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்த முழு இராணுவ பலமும் இந்த மூன்று வீரர்களைப் பார்த்துச் சீறியதாம். அங்கு வந்த உயர்தர இராணுவ அதிகாரி ஒருவர் முன் சென்று விமானத்தைப் பரிசோதிக்கப் போவதாகக் கூறினராம். விமானிகள் சர்வதேசச் சட்டப்படி இந்தியத் தூதுவராலய ஆட்களின்றி பரிசோதிக்க அனுமதிக்க முடியாது என்று கூறினராம். "இல்லை, நான் பரிசோதிப்பேன்" என்று கர்ச்சித்தார் அந்த அதிகாரி. "எம் உயிருள்ளவரை நடவாது" என்று கூறிய இந்திய வீரர்கள் மூவரும் தங்கள் ஆயுதங்களைத் தூக்கியபடி ஆயத்தமாகினராம்.

(13-ம் பக்கம் பார்க்க)

# விலைவாசி உயர்வு

## தடுக்க சில யோசனைகள்

விலைவாசிகளின் உயர்வைத் தடுப்பதற்கான சில ஆலோசனைகளை, மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. ஸி. எச். எம். நூகுலெப்பை, விலைவாசிகள் மீதான உப குழுவிடம் சமர்ப்பித்துள்ளார். அவர் கூறும் சில யோசனைகளாவன:

போக்குவரத்துச் சாதனங்கள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். தெருக்களைத் திருத்தியமைத்தல், லொறிகளுக்கான உபகரணங்களை இறக்குமதி செய்ய வசதிகள் அளித்தல் ஆகியன கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களுக் கிடையேயுள்ள போக்குவரத்தைச் சீர்திருத்த முடியும்.

புத்தளத்தில் சிமெந்து தொழிற்சாலை நிறுவப்பட்டதும், இந்தியாவிற் போல் இங்கும் விசாலமான தெருக்கள் அமைக்கப்படலாம். எல்லா இறக்குமதி, ஏற்றுமதி அலுவல்களையும் கொழும்புத் துறைமுகத்திலேயே செய்து, நெருக்கடியையும் வீண் செலவையும் உண்டாக்காது. அவற்றில் சிலவற்றை காலி, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற துறைமுகங்களுக்குத் திருப்பி விடவேண்டும்.

திருக்கோணமலை, காலி, மட்டக்களப்பு, காங்கேசன் துறைஆகிய துறைமுகங்களை ஏற்றுமதி. இறக்குமதி வர்த்தகத்துக்குத் திறந்து விடுவதன் பயனக, கொழும்புத் துறைமுகத்து நெருக்கடியினல் ஏற்படும் வீண் செலவும், தொல்லையும் நீங்கும். அத்துடன் கொழும்பிலிருந்து இத்துறைமுகங்களுக்குப் பண்டங்களைக் கொண்டு செல்லும் செலவும் அற்றுவிடும்.

வர்த்தகத்துறையில் ஈடுபட முன்வரும் புதிய அங்கத்தவர்களுக்கு, ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸ், அதிக விதிகளின்றி இலகுவாக அளிக்கப்படல் வேண்டும். இது, ஓரளவுக்கு வேலையில்லாப்பிரச்சினையையும் தீர்க்க உதவும்.

# சந்தியில்....

வெளிநாட்டு ஆத்தி குறைந்து விட்டது, நாணயத்தின் மதிப்புப் போய் விட்டது என்றெல்லாம் கூறிக்கொண்டு இறக்குமதிக் கட்டுப்பாட்டை அரசு விதித்தது. இதனல் உண்டாகியிருப்பது என்ன? பொது மக்கள் பாவிப்பதற்கு எப் பொருட்களும் கிடைக்கவில்லை.

பொருட்கள் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டால் உடனடியாக விலைகளையும் கட்டுப்படுத்த வேண்டும். அதைச் செய்யாததால் 200, 300 வீதம் பொருட்களின் விலைகள் ஏறிவிட்டன.

இறக்குமதி வியாபாரிகள் பலரிடம் அம்மானின் ஒற்றர்கள் மகத்தான உண்மைகளைக் கேட்டு அறிந்துள்ளார்கள். இதோ ஒரு வியாபாரியார் கூறிய அதே வார்த்தைகள்:-

"நாங்க என்ன செய்யிறது? இங்கே இருக்கும்......பொருளுக்கு இறக்குமதி செய்ய 'பெர்மிட்' எடுக்க மேலதிகமாக ஐம்பதாயிரம் ரூபாய் வரை செலவாச்சுது. அப்ப அந்தக்காசைஇந்த...பொருளை வித்துத்தானே சரிக்கட்ட வேணும். அதுமட்டுமில்லை. முன்னெல்லாம் எத்தனையோ பொருட்களையெல்லாம் வரவழைச்சு வியாபாரம் பண்ணினேம். இப்ப வரும் பொருளும் குறைவு. அதவச்சிட்டு வியாபாரம் நடத்தினல் கட்டுப்படியாகுமா? கொஞ்சமாகப் பொருள் இருந்தாலும் கூடிய விலைக்கு வித்தாத்தான் செலவுக்கெல்லாம் சரியாகும்."

வேலியே பயிரை மேய்வது போல் சட்டத்தையும் கட்டுப்பாட்டையும் மீறி மேலிடத்தோரே ஊழல்களுக்கு வழிவகுத்து விடுகின்றனர். திடீர் பணக்காரர்களும் பலர் தோன்றி விடுகின்றனர். கட்டுப்பாடுகளால் பொது மக்களுக்கே மாபெரும் கஷ்டங்களே தவிர வியாபாரிகளுக்கோ மேலிடத்தாருக்கோ அல்ல.

★

காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஊழல்கள் பெருகிவருவதாக அம்மானுக்கு தகவல் கிடைத்துள்ளது. சிங்கள மொழித் திணிப்புக் கெடுபிடி இங்கு வலுவாகவிருப்பதால், தமிழ் மக்கள் தங்கள் ஒப்பந்தங்களை வாபஸ் பெறுகிறார்களாம்.

ஏராளமான பணம் தினசரி புரளும் இத்தாபனத்தில், பிரதிநிதிகளுக்கே வேலைக்குச் சம்பளம், கழிவு முதலியன கொடுக்கப்படுவதில்லை என்றும் தெரிகிறது.

★

9-2-64 சந்தியில் யாழ்ப்பாண சிங்களப் புத்தகக் கடை நிர்வாகி ஒருவர் சுதந்திர தினவிழாக் கொண்டாட்டங்களுக்காக முயற்சித்ததாகக் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? தான் அப்படியான செயலில் ஈடுபடவில்லை என்று ஒருவர் நமக்கு கடிதம்எழுதியிருக்கிறார்.

★

நாவியிலுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சுதந்திர தினவிழாவன்று விசேட பூசை நடாத்த முயற்சிகள் நடைபெற்றதும் தோல்வியுற்றதும் தெரிந்ததே. விசேட பூசைகள் நடைபெறுமலிருக்க காலி வாழ் சைவ இளைஞர்கள் பலரும் பெரு முயற்சி எடுத்துள்ளார்கள் என்று தெரியவருகிறது.

—அம்மான்

## போராட்ட ஒத்திவைப்பு

# ஆட்சியாளருக்கு கிடைத்த கடைசி வாய்ப்பு

## 'தினத்தந்தி' கருத்து

தவறு செய்துவிடலாம். ஆனல், தவறு என்று தெரியும் போது திருத்திக்கொள்ள வேண்டும். இலங்கையின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு பாதகமான முறையில் பல சட்டங்களை இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றை எதிர்த்து, போராட்டத்தில் தமிழர்கள் ஈடுபட்டால், இலங்கை அரசாங்கத்தின் பாடு திண்டாட்டமாகிவிடும். இதை உணர்ந்து சமரசப் பேச்சுக்கு முன்வந்துள்ளது அரசு. தமிழர்கள் போராட்டத்தை ஒத்தி வைத்திருப்பது, இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த கடைசி வாய்ப்பு. இதை நல்ல முறையில் பயன்படுத்தி தகராற்றைத் தீர்க்க முன்வருமா இலங்கை அரசு?

இவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் பிரபல தினசரி ஏடாகிய தினத்தந்தி, தனது 22-2-64-ம் திகதிய இதழில் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத் தலையங்கத்தின் விபரம் வருமாறு:—

இலங்கைத் தமிழர்களுடன் இலங்கை அரசாங்கம் சமரசப் பேச்சு நடத்தி வருகிறது.

நீண்ட காலமாக இருந்து வரும் [illegible] தீர்வு [illegible] இலங்கை அரசாங்கம் விரும்புவதாக, இலங்கை மந்திரி ஒருவர் கூறி இருக்கிறார்.

### சிங்கள ஆதிக்கம்

இலங்கையில், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டத்தை, இலங்கை அரசாங்கம் கொண்டு வந்து நிறை வேற்றியது. இதை எதிர்த்து, சென்ற 17-ம் திகதி முதல் நேரடிப் போராட்டத்தில் ஈடுபட இலங்கைத் தமிழர்கள் முடிவு செய்தார்கள்.

ஆனல் இலங்கை அரசாங்கம் சமரசப் பேச்சு நடத்த முன் வந்ததால், போராட்டத் திட்டத்தை இலங்கைத் தமிழர்கள் ஒத்தி வைத்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர் மாவட்டத்தில் காணி விநியோகம்

## 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முந்திரிகைச் செய்கை

மன்னர் மாவட்டத்திலுள்ள முசலிப்பகுதி கொக்குப் படையான் மறிச்சுக்கட்டி கிராம சேவையாளர் பிரிவில் 25000 ஏக்கர் காணி முந்திரிகைச் செய்கைக்கு விநியோகம் செய்யப்பட விருக்கிறது. தனிப்பட்டவர்கள் மட்டுமன்றி சங்கங்களும் விண்ணப்பிக்கலாம்.

நாட்டின் வறண்ட பகுதிகளில் முந்திரிகைச் செய்கையை விருத்தி செய்வதற்கு காணி, நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. முதலில் மன்னர் மாவட்டத்திலுள்ள முசலிப் பகுதியில் 25000 ஏக்கர் காணி விநியோகம் செய்யப்படவிருக்கிறது.

முந்திரிகை பயிரிட விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் மட்டுமல்லாது சங்கங்கள், பொது நிலையங்கள் போன்ற ஸ்தாபனங்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். காணிக்குச் செலவு செய்யப்படும் பணம் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது. விண்ணப்பங்கள் மன்னர் அரசாங்க அதிபரிடம் இம்மாதம் 21-ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் குருநாகலை பகுதியிலுள்ள குளியாப்பிட்டியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 250 ஏக்கர் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 750 ஏக்கர் இச் சங்கத்திற்கு கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் மன்னர் பகுதியைச் சிங்கள மயமாக்க எடுக்கும் முதல் நடவடிக்கையாக மாற்ற அரசு முயன்று வருவதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்கள் அரசின் இத் திட்டத்தை முறியடிக்க வேண்டும். 21-2-64 அரசாங்க வர்த்தமானியில் இது பற்றிய முழு விபரமும் வெளியாகியுள்ளது.

### பயன்

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் முந்திரிகைக் கொட்டைக்கு அதிக தேவை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முந்திரிகைக் கொட்டையின் வெளிபுறக் கோதிலிருந்து ஒருவித எண்ணெய் தயாரிக்கப்படுகிறது என்றும், இந்த எண்ணெய் பல உற்பத்திகளுக்குப் பயன்படுகிறது என்றும் தெரிகிறது.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

மன்னர் மாவட்டத்தில் முந்திரிகைச் செய்கைக்காக காணி விநியோகம்

அரசாங்க அதிபர், மன்னர்.

1. பெயரும் விலாசமும்—
2. நிரந்தர இருப்பிடம்—
3. தொழில்—
4. இலங்கைப் பிரஜையா—
5. கல்யாணமானவரா? அல்லது இல்லையா? இவரை நம்பியிருப்பவர்களின் தொகை—
6. மாச வருமான சேமிப்பு பணம் உண்டா?—
7. வேறு சொந்தக்காணி உடையவரா? அதன் விபரம்—
8. அரசாங்கக் காணிகளின் விபரம், குத்தகையா? அல்லது காணி அபிவிருத்தித் திட்டத்தின் கீழா? அதன் விபரம் –
9. தேவையான காணியின் விஸ்திரணம்—
10. சங்கம் அல்லது கொம்பெனியென்றால் அதன் அங்கத்தவரின் தொகை பதியப்பட்டதா? இல்லையா?—
11. வேறுவிபரங்கள்—

திகதி—
கையொப்பம்—

> 22—3–64ம் திகதிப் பத்திரிகை, மறைந்த மூதூர் முதல்வர் திரு. த. ஏகாம்பரம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு விசேட இதழாக வெளிவரும்.

கிண்ணியா

## ஆசிரிய மாற்றத்துக்கு அரசியல் காரணமா?

கிண்ணியாவில் பயிற்றும் சில முஸ்லிம் ஆசிரியர்களுக்கு திடீர் இட மாற்றக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இத்திடீர் மாற்றத்துக்கு ஏதோ அரசியல் காரணங்கள் இருப்பதாகவும் தெரிகிறது.

பல ஆண்டு ஆண்டுகளாக வெளியூர்களில் கடமை பார்த்துவிட்டு, சமீபத்தில் சொந்த இடமா கிண்ணியாப் பகுதிகளுக்கு இடமாற்றம் பெற்றுத் திரும்பிய முஸ்லிம் ஆசிரியர்கள் பலருக்கு திடீரென இட மாற்ற உத்தரவுகள் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரியே இப்பகுதிக்கான மாற்றங்களைச் செய்ய அதிகாரம் படைத்தவராக விருப்பினும், மேற்படி மாறுதல் உத்தரவுகள் யாவும் கல்வி அமைச்சு மூலமாக நடைபெற்றமைக்கு ஏதாவது அரசியல் காரணம் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

கிண்ணியா பகுதி பெற்றோர்களும், மூதூர் முதல்வர் ஜனாப் முகமதலி அவர்களும் இந்தமுறைகேடான இடமாற்றத்தைத் தடுக்கும்படி கல்வி அமைச்சரையும் அதிகாரிகளையும் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

# இலங்கை மீது இந்திய ஆக்கிரமிப்பு

## சீன - ஆதரவாளரின் அபாண்டப் பிரசாரம்

“சீனப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்ய ஒன்றரை நாட்களுக்கு முன்பு-கடந்த திங்கட்கிழமை இரவு இந்திய ஆகாயப்படையைச் சேர்ந்த விமானமொன்று பலவந்தமாக இரத்மலானை விமான நிலையத்தில் இறங்கியதின் இரகசியமென்ன? அது ஒரு வேவு பார்க்கும் விமானம் என்பதை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயம் ஒப்புக் கொண்டுள்ளது.”

இவ்வாறு “கம்கருவா” என்னும் வாராந்தப் பத்திரிகை 29-2-64 திகதி பிரசுரித்துள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

திரு. சண்முகதாசன் என்பவரின் தலைமையிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சியின் சீன—ஆதரவாளர் கோஷ்டியால் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது.

இந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இந்திய [illegible] தாங்கிக் கப்பலொன் [illegible] இந்த விமானம் [illegible] ந்ததாம்.

இச் செயல் இலங்கையின் ஆதிபத்தியத்தைப் பகிரங்கமாக மீறுவதாகும். பலவந்தமாக இந்நாட்டில் பிரவேசிப்பதாகும். சுருங்கக் கூறின் இது இலங்கையின் மீது நடத்திய ஆக்கிரமிப்பாகும். இதனால் நமது சுயாதிபத்தியத்துக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது.

முதலில் வந்திறங்கிய விமானம் இரத்மலானை விமான நிலையத்தின் மீது வட்டமிட்டுக் கொண்டிருந்ததேன்? நமக்குரிய ஆகாயப் பகுதிக்குள் பிரவேசிக்க அந்த விமானத்துக்கு உரிமையோ, தேவையோ கிடையாது. இரண்டாவது விமானம் நம் நாட்டின் மீது பச்சை ஆக்கிரமிப்பை நடத்தியுள்ளது.

இது வேவு விமானமாம். இலங்கையுள் அல்லது இலங்கையைச் சுற்றி வேவு பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? இதற்கான தேவைதான் என்ன? இந்தியாவுக்கு இலங்கையால் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளதா? நமது சின்னஞ் சிறு இலங்கை இந்தியாவைப் பிடித்துக்

(9-ம் பக்கம் பார்க்க)

# தபால் சேவை தாமதங்கள்

## தமிழ் பகுதி புறக்கணிக்கப் படுவதாக புகார்

மின் வேகத்தில் நாடுகளில் முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கையின் தபால் சேவையில் தாமதமும், மந்த நிலையும் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கதே. உள்நாட்டு விமானத் தபாலுக்கு மேலதிகமான கட்டணம் வசூலிப்பதும் இந்நாட்டில் மட்டுமே நிகழ்கிறது. தமிழ்ப் பிரதேசங்கள் தபால் விநியோகத்திலும் புறக்கணிக்கப்படுகின்றனவா என்ற ஐயப்பாடு நிலவுகிறது. தமிழ்ப் பகுதிகளுக்கு இரண்டாவது முறை தபால்கள் விநியோகிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தபால் அமைச்சைத் தமிழரசுத் தந்தை கேட்டுள்ளார்.

இலங்கைத் தபால் இலாகாவைப் பற்றிய ஊழல்கள் [illegible] கடந்த பிரதேசங்களுக்கும் [illegible] டி, எள்ளிநகையாடப்படுகிறது. தபாலில் அனுப்பி வைக்கப்படும் பொருட்களும் [illegible] பணமும், முக்கிய த[illegible] [illegible]ஜுக்களும் மாயமாய் மறைவதைத் தவிர, தபால் பட்டுவாடாவிலும் மிகவும் தயக்கமும் தாமதமும் ஏற்பட்டு வருகின்றன.

மிகச் சிறிய தீவான இலங்கையில் தபால் விநியோகத்தில் ஏற்படும் தாமதம், வேகமாக முன்னேறும் உலகத்தில் விசித்திரமான இடத்தை வகிக்கிறது. அனேகமாகக் கடிதங்கள் குறிப்பிட்ட விலாசதாரரை அடைய, பல நாட்கள் தேவைப்படுகிறது. புகையிரதத் தொடர்புள்ள நகரங்களுக்கே கடிதங்கள் போய்ச் சேர மூன்று நாட்களுக்கு மேல் செல்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்லும் தபால்கள் ஆமை வேகத்தில்தான் செல்கின்றன. தமிழ்ப் பிரதேசங்களை அரசாங்கம் புறக்கணிக்கிறதோ தபால் வி[illegible]யத்திலும் என்று பலர் விசனமுறுகின்றனர். வேட்டியல் தபால் வண்டிகளைப் புகையிரதத் தொடரில் இணைத்துச் செயல்பட்டும் கூட தபால் சேவை துரிதமடைவதாயில்லை.

கொழும்புக்கும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போ[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டுக்கு பலவர்ண வேட்டி

“சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 27 லட்சம் யார் துணி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மூலம் மக்களுக்கு விநியோகிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாம். இலங்கை ஜனத்தொகை ஒரு கோடியையும் கடந்து விட்டது. சித்திரைப் புத்தாண்டு சிங்களவர்களுக்கும் இந்துக்களுக்கும் பொதுவானது. எனவே 27 லட்சம் யார் துணியை மக்களிடையே சரிசமமாகப் பங்கிடும் போது ஒருவருக்கு 9 அங்குலம் துணிதான் கிடைக்க முடியும். இது அநேகமாக ஒரு கோவணத்துக்குப் போதுமானதே! இல்லையேல், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் 9 அங்குலத் துண்டுகளை (ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு நிறத்தில் இ[illegible] சாலவும் நன்று) [illegible] சேர்த்துதைத்து [illegible] புதுவருடத்தா[illegible] நவீன தினுசான [illegible] வேட்டியொ[illegible] கிடைக்கும்.

(29-2-64)

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாய ஜோதி
ஊது பத்திகளே
சுகந்த வாசனை
நிலைத்து எரியும் தன்மை
நியாயமான விலை
நவீன [illegible] இறுக்கமாக அடைக்கப்பட்ட [illegible] இப்பொழுது விற்பனையாகிறது.
உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ட்ரீ
128/3, [illegible], கொழும்பு—7

இன்றே எழுதுங்கள்
எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை வி[illegible] அனுப்புங்கள். தெய்வ [illegible]னாலும், [illegible]ஆலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி [illegible] முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட[illegible].
கவர்மெ[illegible] ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
பி. எம். திசாநாயக்க
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அரு[illegible] தலைமை காரியாலயம்
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட பிள்ளைகட்கு கல்வி அறிவின் அவசியம்

## சாமிமலைக் கூட்டத்தில் தலைவர்கள் பேச்சு

சாமிமலையைச் சேர்ந்த பெரியசோலங்கந்தைத் தோட்ட தொ. கழகத் தேர்தல் கூட்டம் (23—2—64) துணைத் தலைவர் ரெ. ம. ராமய்யா தமிழ் முறைப்படி மூவர்ணக் கொடியை ஏற்றி வைக்க, திரு. கே. ஏ. ராமனின் தேசிய கீதத்துடன் ஆரம்பமாயிற்று.

கூட்டத்துக்கு திரு. ஐயாதுரை தலைமை வகித்தார்.

"இந்நாட்டிலே பிறந்து வளர்ந்திருந்துங்கூட இன்று நடைபாதையில் பகிரங்கமாக நடந்து போக முடியாத நிலையில் கள்ளத் தோணியென நம்மவரைக் கைது செய்து துன்புறுத்துகிறது இந்த அரசாங்கம். இந்த வகையில் கண்மூடித்தனமாகத் தமிழ் மக்களிடம் நடந்துகொள்ளும் இந்த அரசாங்கத்திற்கு நல்லதோர் போதனையை நாம் ஓர் மாபெரும் போராட்டத்தின் மூலம் கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று திரு. கெங்கரெத்தினம் பேசுகையில் கூறினார்.

துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமய்யா, இன்று கள்ளத் தோணியெனக் கைது செய்யப்படுவோரின் பரிதாப நிலையையும், அவர்கள் நாடற்றவர்முகாமிலே படும் அவஸ்தைகளையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மஸ்கெலியா மாவட்டப் பிரதிநிதி திரு. கே. பி. செல்லத்துரை பேசுகையில், "எல்லா இன மக்களிலும் பார்க்க நாம் மிக பின்னேற்றமான நிலையிலிருப்பதற்கு நாம் தாழ்மையான மனப்பான்மையைப் பெற்றிருப்பதே காரணம். நாம் உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி எனப் பேதம் பேசாது ஜாதியென்னும் நோயகற்றி எல்லோரும் ஓரினம், ஓர் தாயின் மக்கள் என எண்ணி ஒன்றுபட்டு வாழ்ந்தால் மாத்திரமே நாமும் நல்ல நிலையில் உயர முடியும்" எனக் கூறினுர்.

"இன்று எங்கும் தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்கள மொழி திணிப்பு நடந்து வருகிறது. இந்தச் சிங்கள மொழி அமுலை எதிர்த்து எமது கட்சி தீவிர நடவடிக்கை எடுத்ததின் விளைவாகவே இந்த அரசாங்கம் அடிபணிந்து இன்று எம் மாபெரும் தலைவர்களுடன் சமரசம் பேச முன்வந்திருக்கிறது. தமிழ் மக்களின் பல லட்ச வாக்குகளால் அரியாசனம் ஏறிய இந்த அரசாங்கம், அவர்களையே உதாசீனம் செய்கிறதென்ருல் அது இந்த அரசாங்கத்தின் அழிவையே சுட்டிக்காட்டுகிறது. இந்த சமரச மகாநாடு ஓர் தேர்தல் தந்திரமாகப் பாவிக்கப்பட்டால் நிச்சயம் வீழ்ச்சியேற்படும் என்பது திண்ணம். நாம் அனைவரும் யாவற்றையும் தமிழில் செய்து எம் கட்சியின் ஆரம்ப நடவடிக்கையான எல்லாம் தமிழியக்க வழி நிற்போம்'' என கோ. இ. து. கோவிந்தராஜன் கூறினுர்.

திரு. கே. ஏ. ராமன் பேசும்போது, ஐந்து ஆண்டுகளுக்கு முன் 'மலைநாட்டு வாலிபர்கள், தமிழரசும் ஓர் தொழிற்சங்கம் அமைக்கவேண்டுமெனத் தமிழரசாரைக் கேட்டபோது மறுத்த எம் கட்சி இன்று தொழிற் சங்கம் அமைத்திருக்கிறதென்ருல் நாம் இழந்த உரிமைகளைச் சென்ற காலங்களில் நாம் கட்டி வளர்த்த தொழிற் சங்கங்கள் பெற்றுத் தராததின் விளைவேயாகும்'' என்ருர்.

நமது பிள்ளைகளை நாம் பாடசாலைகளுக்கு அனுப்பாது வீட்டிலே வைத்திருந்து பேர் பதிந்து விடலாம் என நினைப்பது தவறு. நமது பிள்ளைகளுக்குக் கல்வியறிவு முக்கியம். ஆகவே பெற்ருேர்களாகிய நாம் நமது எதிர்காலச் சந்ததியினர் வாழ வழி வகுக்க வேண்டுமெனத் திரு. நடராசா கேட்டுக்கொண்டார்.

பின் பேசிய திரு. தை. கருப்பையா, ஒவ்வொருவரும் விழிப்புணர்ச்சியுடன் இருந்து ஓர் மாபெரும் போராட்டத்தை நடத்தி நாம் இழந்த உரிமையைப் பெறத் தயாராய் இருக்க வேண்டுமெனக் கூறினுர்.

(13-ம் பக்கம் பார்க்க)

## சான்ருேன் பெரிசுந்தரம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அமைச்சுப் பதவியை விட்டபின் 1936ல் அரசாங்க பிரதிநிதியாக வர்த்தகத் தூது கோஷ்டியை இந்தியாவுக்கு அழைத்துச் சென்ருர்.

1936-ல் இலங்கை தெங்கு அபிவிருத்திச் சபையின் நிர்வாகியாகவும், சட்டக் கல்லூரியில் பரீட்சை அதிகாரியாகவும் சேவைபுரிந்தார்.

1940-ல் இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே வருடத்தில் செனட் சபையின் துணைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

1957-ல் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவராகவும் இவர் பதவி ஏற்ருர். இக்காலத்தில் இலங்கை இந்திய பிரச்சினை சம்பந்தமாகப் பண்டித நேருவைச் சந்திக்க இந்தியாவுக்குத் தூது கோஷ்டியுடன் சென்ருர்.

### மலைநாடு

1947-ல் இ. இ. கா வின் தலைவராக இருந்த போது மகாத்மா காந்திஜீயைப் பேட்டி கண்டு இலங்கை இந்தியர் விடயமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்திஞர்.

1950-ல் இலங்கை காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் துணைத் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

1950-ல் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் சார்பில் இங்கைத் தொழிற் சங்கப் பிரதிநிதியாக ஆசிய பிராந்தியக் கூட்டத்தில் இவர் கலந்து கொண்டார். இக் கூட்டம் நுரலையில் நடந்தது.

1951-ல் இவர் மீண்டும் இ. இ. கா. தலைவரானுர். செனட் சபையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1952-ல் இலங்கைச் சட்டக் கல்லூரியில் முதல்வராகப் பதவி ஏற்ருர்.

1952-ல் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவராகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகவும் இவர் பதவியிலிருந்தார்.

### ஆடம்பரமாக வாழ்ந்து காட்டினுர்

இவர் எப்போதும் ஆடம்பரப் பிரியராகவே வாழ்ந்து காட்டினுர். வெள்ளைக்காரர்களுக்குச் சமமான அந்தஸ்த்துடையவராகவும் அவர்

**சக்தீ அ. பாலையா**

களைவிட மேலான நிலையில் உள்ளவர்கள் நிறத்தவர்கள் என்பதைக் காட்டுவதற்காகவும் தனது கல்வி, பட்டப் படிப்பு தராதரத்திற்கு ஒப்ப ஆடம்பர வாழ்வையே நடத்தி வந்தார் எனலாம். இது வெள்ளைக்காரர்களுக்குப் போட்டியாகச் செய்தது எனலாம்.

### வெள்ளையர்கள் திகைப்பு

திரு. பெரிசுந்தரத்தின் எடுப்பான தோற்றமும், தலை வணங்காத உறுதியும் அறிவாற்றலும், சட்ட திட்ட அனுபவங்களும், உயர் பதவிகளிலிருந்த வெள்ளையர்களையே திகைப்படையச் செய்தது.

### புகைவண்டியில்......

இவர் ஒரு சமயம் புகைவண்டியில் பிரயாணஞ் செய்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்ததாம். அக்காலத்தில் புகையிரத உயர் வகுப்புக்களில் வெள்ளைக்காரர்கள் மட்டுமே பிரயாணஞ்செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இதனை முறியடிக்கத் திரு. பெரிசுந்தரம் உயர் வகுப்பில் ஏறிப் பிரயாணஞ் செய்யத் துணிந்தார். ஒரு நாள் இவர் உயர் வகுப்பில் ஏறிய போது அதில் ஏற்கனவே இருந்த இரு வெள்ளையர்கள் இவரை வேறு வகுப்பில் பிரயாணஞ் செய்யும் படி வற்புறுத்தியதால் தகராறு நீதி மன்றம்வரை சென்றது. தீவிரமாக வாதாடி, திரு. பெரிசுந்தரம் வழக்கில் வெற்றி பெற்ருர்.

### இந்தியன் கிளப்

அக்காலத்தில் வெள்ளைக்காரர்களுக்கு மட்டும் உயர் தர போசன விடுதிகளும், ஓய்வுக்கூடங்களும் கொழும்பில் பிரத்தியேக வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தன.

வெள்ளைக்காரரல்லாதவர்களை இப்படியான ஓய்வுக் கூடங்களுக்கோ, போசன விடுதிகளுக்கோ அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த நிறவெறிக் கொள்கை இலங்கையில் வளர்வதற்கு முன்னே வெள்ளையர்களுக்குப் போட்டியாக 'இந்தியா கிளப்' என்ற ஓய்வுக் கூடத்தை ஆரம்பித்து வைத்த கர்த்தாக்களில் திரு. பெரிசுந்தரமும் ஒருவர்.

மலையக மக்கள் எதற்கும் துணிந்தவர்கள், அவர்கள் வேறு எந்த இனத்தவர்க்கும் தாழ்ந்தவரலலர் என்பதை வாழ்நாட்களில் செய்து காட்டிய திரு. பெரிசுந்தரம், தனது 67வது வயதில் 1957ம் ஆண்டு காலமானுர்.

**மலையக அறிஞர்கள்— 5**

இப்போது தந்தையின் சேவையைத் தொடர்ந்து செய்யும் அவரது புத்திரன் திரு. எம். பி. சுந்தரம், தனது சட்டத் தொழிலை மலையக மக்களின் சேமங் கருதி விருத்தி செய்வதில் ஈடுபாடு கொண்டிருக்கிருர் என்பது வரவேற்கப்பாலது.

## ஒரு திருத்தம்

பிரான்சிஸ், ஐயாவு நிதி பற்றிய அறிவித்தலுக்கு ஒரு திருத்தம்.

பொகவந்தலாவையில் தமிழ் மொழிக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த திருவாளர்கள் பிரான்சிஸ், ஐயாவு ஆகியவர்களுக்கு ஞாபகசின்னம் எழுப்பப்படுவதற்கான நன்கொடைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இணைப்பொருளாளர்,
இலங்கைத் தொழிலாளர் கழகம்,
16, அல்பிறட் கவுஸ் தோட்டம்,
கொழும்பு-3.

---

### மம்பட்டிதோட்ட மாதர் குழு

கொட்டகலை மம்பட்டித் தோட்டத்தில் இ தொ. கழகத்தின் மாதர் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

திருமதி பெ. மீனுட்சி தலைவி பொ. செல்லம்மாள் உபதலைவி, பா. செல்லம்மாள காரியதரிசி, சி. லெட்சுமி, தனுதிகாரி.

குழு அங்கத்தினர்கள்:

அ. ஆராய், ச. அந்தோனியம்மாள், மா. வள்ளி, வ. உடையம்மாள். பெ. லெட்சுமி, ம. சிவனும்.

---

### அ.இ.தே.தோ. பாடசாலை ஆசிரியர் சங்க போஷகர்

அகில இலங்கை தேசியத் தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கம், மட்டக்களப்புத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளரும், கிழக்கிலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க உப செயலாளரும், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க சகாய நிதிச் சங்க உப தலைவருமான திரு. டி. எஸ். கே. வணசிங்காவைத் தனது போஷகராகத் தெரிவு செய்துள்ளது.

திரு. வணசிங்க மட்டக்களப்பில் தற்போது வசிப்பவராகவிருந்த போதிலும், மலைநாட்டில் தோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களினது மேம்பாட்டுக்கு அயராது பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



பாட்டாளி முதல்


பட்டாக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522
தந்தி தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யதார்த்தம் என்பது என்ன?

இலக்கியத்தில் உள்ளமையைக் கூறும் வழக்கம் தமிழ் மொழிக்குப் புதியதல்ல. ஆனல் அந்த உள்ளமை காலமும் இடமும் கடந்ததாக விளங்க வேண்டும். இன்று இருந்து நாளை பொய்யாவது உள்ளமையாகாது. அவற்றைப் பொருளாகக் கொண்டால் இலக்கியம் காலத்தையும் இடத்தையும் கடந்து வாழ முடியாது, அழிந்துவிடும். குறள் கூறுவது வாழ்வோடு ஒட்டி பின்னிப் பிணைந்த உள்ளமை. எனவே தான் குறள் காலத்தைக் கடந்து அமரத்துவம் பெற்று வாழ முடிகிறது. இலக்கியத்தின் தன்மையைப் புரியாத சிலர் குறிப்பிட்ட இடத்திற்கும் காலத்திற்கும் உண்மையாக இருப்பவற்றை, இலக்கியத்தில் வைத்துப் பொதிந்து விட்டு உள்ளமை இலக்கியம் படைத்து விட்டதாகக் கூறித்திரிகிருர்கள், அத்தகையவர்களுக்கு, உள்ளமை என்றல் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள இது உதவும்.

பண்டிதர். க. சச்சிதானந்தன் பீ. ஏ.

'யதார்த்தம்' என்னும் சொல் யதா-அர்த்தம் என்னும் இரு வடமொழிப் பதங்களால் ஆன ஒரு கூட்டுப் பதம். யதா என்பதன் பொருள் எப்படியோ, அர்த்தம் என்பதன் கருத்து 'பொருள்' என்று ஆகும். எனவே யதார்த்தம் என்பது, பொருள் எப்படியிருக்கிறதோ அந்தத் தன்மையைக் கூறுதல் என்று கருத்துப்படும். இதற்குச் சுருங்கிய அழகான தீந்தமிழ்ச் சொல் இருக்கின்றது. உண்மை, உள்ளமை என்றுஇரு சொற்களாற் குறிப்பிடலாமெனினும், உண்மை பரந்த கருத்திற் பிரயோகிக்கப் படுதலால், உள்ளமை என்ற சொல்லை இக் கருத்திற் பிரயோகிக்கலாம்.

இலக்கியத்திலே உள்ளமையைக் கூறும் வழக்கம் மேனுடுகளிற் புதிதாகத் தோன்றியதாயிருக்கலாம். ஆனல், தமிழிலக்கியத்தில் உள்ளமையைத் தவிர வேறு எதையும் எக்காலத்திலும் கூறியதேயில்லை. விஞ்ஞானத்திலே உள்ளமை இருக்கின்றது. E=MC2 என்ற ஐன்ஸ்ரைனின் உள்ளமை, விஞ்ஞானத்துள்ளது. அது என்றும், எங்கும் உள்ளமையானது; அழியாதது; அது போன்று கணித உண்மைகள் பல உள்ளன. உளநூலில் ஒருவனின் விவேக ஈவு-மானத வயது/கால வயது என்பது ஒரு உண்மை.

வானசாத்திரத்தில் நியூற்றனும், டொப்ளரும் கண்டுபிடித்தவை அழியாஉண்மைகள். உள்ளமைக்கு என்றும், எங்கும் ஒரேமாதிரி அழியாதிருக்கும் தன்மையுண்டு; அப்படிஎங்கும்,என்றும் ஒரே பெற்றித்தாய் இராமல், ஒரு காலத்தில் ஒரு இடத்தில் மாத்திரம் நிலைக்கக்கூடியன உள்ளமைகள் ஆகா. ஐன்ஸ்ரைனின் கொள்கை, அவர் கூறிய ஆண்டிலே, ஜெர்மனியின் ஒரு சிற்றூரிலே மாத்திரம், உள்ளமையாக இருக்கவில்லை. அன்றும் இன்றும், ஜெர்மனியிலும் அகில உலகத்திலும் உள்ளமையாக இருக்கின்றது. அதனலேயே அது வாழுகின்றது.

### உள்ளமை இலக்கியம்

இந்த உண்மையின், கால இடங்களைக் கடந்த அமரத் தன்மை இலக்கியங்களிலும் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் செய்யப்பட்ட குறள் இன்று ஒவ்வொரு இளைஞனதும் உள்ளத்திலே, வாழ்க்கையிலே வாழ்கின்றது. இடத்தையிழந்து, றசியாவிலும், பிரான்சிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், சீனவிலும், ஜப்பானிலும் வாழ்கின்றது. சிலப்பதிகாரம்கால வெள்ளத்துக்கு எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு இன்றும் கிராமங்களில் வாழ்கின்றது; இங்கிலாந்தில் வாழ்கின்றது. பிரான்சிய குடிசையிலே, ஆர்வத்தோடு மொழிபெயர்க்கப்படுகிறது. கம்பராமாயணம் வாழாத தமிழன் நெஞ்சு எங்கே இருக்கிறது; அதிலிருந்து ஒரு கவியையேனும் கூருத மேடை எங்கேயிருக்கிறது. இங்கிலாந்திய மண்ணிலே பிறந்து ஆங்கில மணத்திலே யூறிக்கிடந்த போப்பை ஆட்கொண்டதே திருவாசகம். இத்தாலியிலேயிருந்து சமயத்தொண்டு செய்யவந்த வீரமாமுனிவரின் நெஞ்சை அள்ளினவே திருக்குறளும், கம்பராமாயணமும். காலத்தையும், இடத்தையும் கடந்து அமரத்துவம் அடைந்து நிற்கும் இவ்விலக்கியங்களிலே இருக்கும் மந்திரசக்தி என்ன? அவை உள்ளமையைத் தம்மகத்தே பொதிந்துள்ளன. அந்த உள்ளமை அழியாது ஆகவே, உள்ளமையை இறுகப் பொதிந்த இலக்கியங்களும் அழியாதனவாயின. யதார்த்தத்தைப் பொதிந்துள்ள இவை, அழியா இலக்கியமாயின.

### இலக்கிய கர்த்தாவின் பணி

உலகத்திலே பலவிதமான அனுபவங்களும் ஓடிச் செல்கின்றன. வேடனக மனிதன் வாழ்ந்தகாலம் முதல் அணுவின் சக்தி அகன்றகாலம் வரை மனித இனம் இடைவிடாது மாறிக்கொண்டேயிருக்கின்றது; இன்று நமக்குள்ளேயே பல்லாயிரம் சம்பவங்களும், போராட்டங்களும், அனுபவங்களும் பறந்து செல்கின்றன. இவற்றினிடையே, மாறி மாறிச் செல்லும் மனிதவாழ்வின் அனுபவங்களுக்கிடையே மாருத ஒரு உள்ளமையைக் காண்பதே இலக்கிய கர்த்தாக்களின் பணியாகும்.

உலகம்பிறந்தநாட்டொட்டு மனிதன்தோன்றிய காலம்தொட்டு அப்பிள் மரங்களிலிருந்து விழுந்தது; மனிதர்கள் பார்த்தார்கள் தான். ஆனல் நியூற்றனுக்குத்தான் அதனிடையே உள்ளமை புலப்பட்டது. அது பூமியின் கவர்ச்சியால் விழுகின்றதென்றும், அவ் விழுகைக்கு ஒரு கணித விதி உள்ளதென்றும் அவனே கண்டுபிடித்தான். மனித குலம் தோன்றிய காலம் தொட்டே மக்கள் பூமியில் வாழ்ந்தார்கள். ஆனல் உருண்டை என்பது எப்போது கண்டு பிடிக்கப்பட்டது? எல்லாருமே கண்டு பிடித்தார்களா? அஃதே போல், வாழ்விலே குவியல் குவியலாகத் தாறுமாருகப் பல்லாயிரங் கோடி கோடி அனுபவங்கள் செல்கின்றன. இவற்றினிடையே ஓடும் உள்ளமையைத்தான் புலவன், இலக்கிய கர்த்தா, நாவலாசிரியன், கலைஞன் என்போர் கண்டு பிடிக்க வேண்டும்.

தேரான் தெளிவும்
தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை
தரும்.

என்பதில் ஒரு உண்மை பொதிந்திருக்கிறது.

### உள்ளமை அழிவற்றது

சமுதாயத்தின் பல அனுபவக் குவியல்களிடையேயும் மாறிச் செல்லும் அனுபவங்களையெல்லாம் கண்டவிடத்து வள்ளுவன் ஒருவனுக்குத்தான் இவ்வுண்மை புலப்பட்டது. மனித சமுதாயத்தின் மாற்றம் இரும்புக் காலத்திலிருந்து அணுக் காலத்துக்கு மிகப் பெரிய அளவில் மாறலாம். ஆனல், அதன் அடியிலே, ஆணிவேரிலே, இந்த உண்மை ஓடும் என எண்ணி இரு அடிகளிலே பொதிந்து [illegible] அவ்வுண்மை [illegible] வாழும்.

செறி கழல் அரக்கர் தம்
அரசு சீரியோர்
நெறியல தாகலின் நிலைக்
கலாமையும்

என்ற அடிகளில் தருமத்திற் கட்டுப்படாத இராவணன் அரசு அழியும் என்ற உண்மையை வீடணன் வாயிலாகக் கம்பர் கூறினர். அது சோழர் காலத்திலே காவிரி நாட்டிலே சொல்லப்பட்ட உண்மை. ஜேர்மானிய தேசத்தில் இட்லர் காலத்திலே அவ்வுண்மை பொய்த்ததா? யப்பானிய தேசத்திலே இருபது வருடங்களுக்கு முன் பொய்த்ததா? இந்தியாவிலே பொய்த்ததா? இலங்கையிலே இன்று பொய்க்குமா? சுருங்கக் கூறினல், மாறிவரும் மனித வாழ்விலே மாருத அடி உண்மைகள் சில இருக்கின்றன. வளர்ந்து செழித்துப் பல உருவமெடுக்கும் மரத்தின் நடுவிலே ஒரு வைரம் இருக்கின்றது. அந்த வைரத்தைப் போன்றவை அவை. அந்த உள்ளமைகளை அடக்கிய இலக்கியங்களே அழியாமை பெற்று வாழ முடியும்.

# இலக்கியத்திற்கு உள்ளமையும் வேண்டும்

இன்று இருந்து நாளை பொய்யாவது உள்ளமை ஆகாது. அவற்றைப் பொருளாகக் கொண்டால் இலக்கியம் அழியத்தானே செய்யும். இலங்கையின் ஒரு கிராமத்திலே, ஒரு காலத்திலே, அடுத்த கிராமத்துக்கு உள்ளமையாகாத ஒரு விடயத்தை இலக்கியப் பொருளாகக் கொண்டால் அடுத்த கிராமத்திலே அது வாழாது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுமா? அந்தக் கிராமத்திலே பத்து வருடங்களின் பின் வாழாது, என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுமா?

# உணர்ச்சியூட்டும் உயிர்த் தன்மையும் வேண்டும்

ஆனல், ஒரு பேதத்தை நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நாட்டிலே ஒரு அரசியற் காலத்திலே, ஒரு வாழ்க்கைப் பின்னணியிலே சிறு கதையோ, காவியமோ, நாவலோ, பரணியோ அமையலாம். அந்தப் பின்னணி வருணனை தான் இலக்கியப் பொருளல்ல. அந்தப் பின்னணியிலே மாறிச் செல்லும் சம்பவங்களுக்குள்ளே காட்டப்படும் [illegible] உள்ளமையே இலக்கியப் பொருளாக அமைதல் வேண்டும். அந்த பின்னணியின் வர்ணனையே இலக்கியப் பொருளாகாது. அவ்வருணனைதான் பொருளானல், அப்பின்னணி மாற இலக்கியம் அழிந்து விடும். ஆகவே, சம்பவமும் சூழ்நிலையும் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் உள்ளமையாகக் கொள்ளலாம்.

ஆனல், அந்தச் சம்பவங்கள் சூழ்நிலைகளுக்கூடாகக் காட்டப்படும் உள்ளமை என்ன என்பது தான் கேள்வி. செகசிற்பியாரின் கசியசும், கம்பரின் கூனியும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வாழ்க்கை முறைகளிற் தோன்றியவர்கள். கசியசும், கூனியும் இன்றும் கரவெட்டியிலே வாழ்கிருர்கள். கொழும்பிலே வாழ்கிருர்கள். இதைத்தான் கால தேசத்தைக் கடந்த உள்ளமைஎன்று கூறுகிறேம்.

மனித வாழ்வில் தொடர்பில்லாமல்கண்டபடிகுவிந்து வரும் அனுபவங்களினூடே அழியாத உண்மையைக் காண உயர்ந்த மன ஆற்றல் வேண்டும். ஒரு நியூற்றன்தான், விழும் பொருள்களிலிருந்து கவர்ச்சி விதியைக் கண்டான். ஒரு செகசிற்பிதான் கசியசைக் கண்டான். கம்பனல்தான் கூனியைக் காணமுடியும். ஒழுங்கற்று நிலைமாறும் சம்பவங்களைத் தெரிந்து அவற்றினூடே ஒரு பொது விதியைக் காண மேதாவி ஒருவனுற்றுன் முடியும்.

### அறிவும் உணர்வும்

இது இவ்வாருக விஞ்ஞான உள்ளமைகளும், இலக்கிய உண்மைகளும் ஒரே தன்மைத் தாயின் அவற்றைச் சொல்லும் விதமும் ஒரே தன்மைத்தா என்னும் கேள்வி எழுகின்றது. மனித ஆற்றலிலும், அடிப்படையிலும் இரண்டு பேதமானவற்றைக் காண்கிறேம். ஒன்று அறிவு, மற்றது உணர்வு. சந்திரன் நீலக்கடலின் மேல் எழுந்து வருகின்றன். அதனை இருவர் நோக்குகின்றனர்கள். சந்திரனின் ஒளி சுய ஒளியா அல்லது சூரியனின் பிரதிவிம்பித்த ஒளியா? அங்கு களங்கமாகத் தோற்றுவது மலையா? முயலா? கடலா என்று ஆராய்கிருன் மற்றவன். வெள்ளி நிலவின் மோகனத்தில் அள்ளுண்டு உணர்ச்சி வசப்படுகின்றன். உள்ளத்திலே இன்பம் பொங்க அவன் கண்கள் மலருகின்றன. இரத்த ஓட்ட நடை மாறுகின்றது. "சிதமணி நடை வானக் குளத்திடை வெண்ணிலாவே" என்று வாய்விட்டுப் பாடுகின்றன்.

மதியாகிய ஒரே பொருளை மனிதர் இருவரும் நோக்கும் விதம் ஒன்றல்லவே. ஒரு தாமரை மலர் இருவர் கண் முன்னே தோற்றுகிறது. ஒருவன் அது நீர்ப்பூ வகையைச் சேர்ந்ததா, நிலப் பூ வகையைச் சேர்ந்ததா? வருக்க விருத்தியில் அதன் மகரந்தப்பை எங்கே அமைந்திருக்கிறது அது தன்னினத்தைப் பெருக்குவது எவ்வாறு என்றெல்லாம் ஆராய்கிருன். மற்றவன் பூவைக் கண்டு உள்ளம் பொலிகிருன். மனம் மலருகிருன். உணர்ச்சி வசப்படுகின்றன். ஒரே மலர் ஒருவனில் ஆராய்வைத் தூண்டுகிறது. இன்னெருவனில் உணர்ச்சியைத் தூண்டுகிறது. இது இயல்பு. மாங்கிளையிற் றேனிசை வடிக்கும் பூங்குயிலின் கானத்தைக் கேட்டதும், ஒருவன் அதில் எத்தனை இருத்தல் இறைச்சி எடுக்கலாம் என்று துப்பாக்கியை உயர்த்துகிருன். இன்னெருவன் அதன் கானத்திலே சொக்கிப் போய் உணர்ச்சி வசப்படுகின்றன். குயிலின் கீதமாகிய தீபனம் இருவேறு பதிலியக்கங்களை மனிதனிடத்திலே ஆக்குகின்றது. குயிலின் கீதத்தைக் கேட்டும், மலரின் பொலிவைக் கண்டும், தென்றலின் இனிமையை உணர்ந்தும், ரோஜாவின் மணத்தை நுகர்ந்தும் மனிதன் உணர்ச்சியடைகிருன் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இது ஒரு தேசத்துக்கோ மொழிக்கோ கிராமத்துக்கோ சிறப்பான இயல்பன்று. குயிலின் கீதத்தை தமிழ்ப் புலவன் பாடினல் வானம்பாடியைப் பற்றி ஆங்கிலப் புலவன் பாடுகிருன். மதியைப் பாடாத புலவனில்லை மதியைப் பற்றிப் பாடலில்லாத மொழியேயில்லை. பெண்ணின் அன்பைப் பேசாத புலவனுமில்லை, மொழியுமில்லை. தண்ணீர் குளிர்வதும், தீ சுடுவதும் எப்படி உண்மையோ அது போலவே சில பொருள்கள் மனிதனுக்கு உணர்ச்சியைக் கொடுக்கின்றன என்பதும் உண்மை. ஆனல், இவ்வுணர்ச்சியை இலகுவாக அளந்தறிய முடியாதிருக்கின்றது என்பதற்காக அப்படி ஒன்றேயில்லையென்று கூறுவது உண்மையை மறுப்பதாகும். தொலையாடியினல் (Telescope) சந்திரனில் உள்ள பள்ளங்களைப் பார்க்க முடிவது போல பூதக் கண்ணடியினல் இரத்தத்தின் அணுக்களைப் பார்ப்பது போலச் சந்திரனின் நிலவைக் கண்டு மகிழும் ஒருவனின் உணர்ச்சியைப் பார்க்க முடியாது தான். அதனல், அவ்வுணர்ச்சியை இல்லையென்று கூற முடியாது.

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 மார்ச் மாதம் 8-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கெடுபிடி வேண்டாம்!

தனிச் சிங்களச் சட்டம் நாட்டை அழிவின் விளிம்புக்கே இழுத்துச் சென்றுள்ளது. இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கெல்லாம் மூலகாரணம் இச் சட்டமே. சட்ட அமுலைத் தடுத்து நிறுத்தினாலன்றி, தமிழ் மொழியைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டதால் மக்கள் போர் முரசு கொட்டினர்.

அரசாங்கம் விழித்துக் கொண்டது. தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளின் அடிப்படையிலே பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வந்தது. அத்தோடு, சுதந்திரக் கட்சியின் பிரச்சினையாக இருந்து வந்த மொழிப் பிரச்சினையைத் தேசியப் பிரச்சினையாக்கி, தேசிய அடிப்படையில் தீர்வு காண்பதென மந்திரிசபை முடிவு செய்தது.

இந்த முடிவு மொழிச் சிக்கலுக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதை எளிதாக்கிவிட்டதென அரசியல் வட்டாரங்கள் நம்பின.

பிரதமர் தனது முயற்சிக்கு அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் சம்மதத்தையும் பெற்றுள்ளார். இடதுசாரித் தலைவர்களையும், ஐ. தே. கட்சித் தலைவரையும் தனித் தனியாக அழைத்துப் பேசி, பின்னர் தமிழரசுத் தலைவர்களின் கருத்தையும் அறிந்து, சர்வ கட்சி மாநாடொன்றினைக் கூட்டித் தீர்வு காண்பதே பிரதமரின் திட்டம் என்று செய்திகள் கூறுகின்றன.

மொழிச் சிக்கல் நாட்டின் அபிவிருத்திக்குப் பெருந் தடையாக இருப்பதால், அதனை இறுதியாகத் தீர்த்து வைத்து விட வேண்டும் என்ற ஆவல் சிங்கள மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

இதன் விளைவாக, பத்திரிகைகளும்—குறிப்பாகச் சிங்களப் பத்திரிகைகள்—சுருதியை மாற்றிச் சமரச முறையில் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென வற்புறுத்தத் தொடங்கியுள்ளன. மறியற் போராட்டம் நிறுத்தியதைப் பாராட்டாவிட்டாலும் தமிழரசுக் கட்சிமீது வசைமாரி பொழிவதைப் பத்திரிகைகள் பெருமளவு நிறுத்திவிட்டன. பிரதமரின் முயற்சிக்கும் ஊக்கமளிக்கின்றன.

பத்திரிகைகளின் மனமாற்றம் சமரசப் பேச்சுக்கான சுமுகச் சூழ்நிலையை உருவாக்குவதில் உதவியுள்ளது என்று கூறலாம்.

இந்த நிலையில் இடதுசாரித் தலைவர்களோ, ஐ. தே. கட்சித் தலைவர்களோ சமரசத் திட்டத்துக்கு மாருகச் செல்வது எளிதன்று.

சமரசத் திட்டத்தை முறியடித்து, தமிழ் பேசும் மக்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாக்கப்பட்டால், அதற்குப் பொறுப்பான சிங்களத் தலைவர்கள் சிங்களப் பொது மக்களின் கோபத்துக்கு ஆளாவார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்றுள்ள சூழ்நிலையில் சிங்கள வகுப்புவாதிகள் கூட தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை எதிர்த்து நிற்பது சாத்தியமன்று. அவர்களின் வகுப்புவாதக் கூச்சல் சிங்கள மக்களிடம் இனிமேலும் பலிக்குமென்று கூறுவதற்கில்லை.

அரசாங்க அலுவலகங்களில் தீவிர வகுப்புவாதிகள் குறித்து நிதிமந்திரி அனுப்பிய சுற்றறிக்கை ஓரளவு பயனளித்துள்ளதென்று கூறலாம். அலுவலகங்களில் பேயாட்டமாடி, தமிழ் பேசும் ஊழியர்களுக்கு இன்னல்கள் விளைவித்து கெடுபிடிப்போர் நடத்திய சிங்கள வகுப்புவாத ஊழியர்கள் நிதி மந்திரியின் சுற்றறிக்கைக்குப்பின்னர் ஓரளவு அடங்கியுள்ளனரென்றே தெரிகிறது.

சிங்களத்தில் தேர்ச்சி பெற இரு வருட 'கால அவகாசம் அளிப்பதென அரசாங்கம் முடிவு செய்வதற்கு முன்னர், ஓய்வு பெறுவதற்காக மனுப்பத்திரம் அனுப்பியவர்கள் அதனை வாபஸ் பெறலாம் என்றும் அரசாங்கம் சிறிது விட்டுக் கொடுத்துள்ளது. இவ்விரு நடவடிக்கைகளும் மொழிச் சிக்கலைத் தீர்க்கும் பேச்சுக்களை நடத்த ஓரளவு சுமுகச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

ஆனால் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்ததைப் போன்று திறைசேரி, திடீரென ஒரு விபரீத சுற்றறிக்கையை விடுத்துள்ளது. சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ருத அரசாங்க ஊழியர்கள் மூன்று மாத அறிவித்தலுடன் வேலை நீக்கம் செய்யப்படுவார்களென்பதே அந்த அறிக்கை.

இது தமிழ் பேசும் ஊழியர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் செயலின் ஒரு பகுதி என்பது ஒரு புறமிருக்க, அரசாங்கம் செய்யும் சமரச முயற்சியில் சிறுபான்மை மக்கள் நம்பிக்கை இழக்கவும் இச்செயல் வழிவகுக்கிறது. ஒரு புறம் தமிழ் பேசும் ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதாகப் பயமுறுத்திக் கொண்டு, மறுபுறம் சமரசப் பேச்சு நடத்துவதென்றால், அந்தப் பேச்சுவார்த்தைகளின் மீது தமிழ் பேசும் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

கொடுத்த வாக்குறுதிகளை மீறுபவர்கள் என்ற கெட்ட பெயர் ஏற்கனவே ஆட்சியாளருக்கு உண்டு. இன்று அவர்கள் நடத்தும் சமரசப் பேச்சுகளையும் மக்கள் ஓரளவு சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்குப் பழைய அனுபவங்களே காரணம்!

இந்த நிலையில், திறைசேரிச் சுற்றறிக்கையால் அவர்களின் அந்தரங்க சுத்தியில் ஐயப்பாடு வேறு தோன்றியுள்ளது.

பேச்சுவார்த்தைக்கான சுமுகச் சூழ்நிலையை உருவாக்குவதற்காக தமிழரசுக்கட்சி நேரடி நடவடிக்கையை நிறுத்தி வைத்தது. அதுபோல அரசாங்கமும் தனிச் சிங்களத்தின் தீவிர அமுலை நிறுத்திவைத்தாலன்றி சாதகமான சூழ்நிலையை எப்படி உருவாக்க முடியும்? சுமுகச் சூழ்நிலையைச் சிருஷ்டிக்கும் பொறுப்பு ஒரு சாராருடையது மட்டுமன்று... இரு சாராரும் அதனை மனமுவந்து செய்யவேண்டும். இன்றேல் சூழ்நிலை மாறி, கொந்தளிப்பு தோன்றவழி பிறக்கும்.

சிறுபான்மையோருக்கு மொழியுரிமை வழங்குவதைச் சிங்கள வகுப்புவாதிகளும், சிங்கள வகுப்புவாத ஸ்தாபனங்களும் எதிர்த்து வருகின்றனர். அவர்கள் மொழிச் சிக்கலைத் தீர்க்கும் முயற்சிகளை முறியடிக்கப் பல்வேறு உபாயங்களையும் தந்திரங்களையும் கையாளுவார்கள் என்பது உண்மையே. திறைசேரி சுற்றறிக்கையும் அத்தகைய சதிச் செயலில் ஒரு பகுதிதான் என்று நம்புவதற்கு நாம் தயாரில்லை.

பின்னர் சுற்றறிக்கையை வாபஸ் வாங்கி, தாங்கள் ஒரு பெரிய சலுகையை வழங்கிவிட்டதாகப் பறைசாற்றும் நோக்கத்துடனும் இச் சுற்றறிக்கையை விடுத்திருக்கலாம் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

திறைசேரி அறிக்கையின் முழுப் பொறுப்பும் குறிப்பாக நிதிமந்திரியையும், பொதுவாக மந்திரி சபையையும் சார்ந்ததே. தனது முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் இத்தகைய சுற்றறிக்கைகளைப் பிரதம மந்திரி இச் சந்தர்ப்பத்தில் அனுமதிக்கிருரா என்று கேட்க விரும்புகின்றோம்.

மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சுமுகச் சூழ்நிலையை உருவாக்கப் பிரதமர் விரும்பினால், தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கள் மீது கைவைக்கும் சுற்றறிக்கைகளை வாபஸ்பெற வேண்டும்—மற்றும் சிங்களத்திணிப்பு கெடுபிடிகளையும் கைவிடவேண்டும். உடனடியாகக் கைவிட முடியாதவற்றை நிறுத்திவைக்கவேண்டும். இல்லையேல், பிரதமரின் முயற்சியின்மீது சிறுபான்மை மக்களுக்குப் பூரண நம்பிக்கை ஏற்படுவது சாத்தியமன்று.

# நேரு பிக்குவைத் தூது அனுப்பியது உண்மையா

மலை நாட்டுத் தோட்ட மக்களைச் சிறு சிறு கோஷ்டிகளாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தால் தாம் மகிழ்ச்சியடைவதாக நேருஜி இந்திய பௌத்த சங்கத்தின் நாயக்க தேரோவிடம் கூறியதாகவும், அவர் இலங்கைக்குத் தூது வந்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. இலங்கை-இந்தியப் பிரச்சினையின் அடிப்படையையே இது தகர்க்கக் கூடியதாயிருப்பதால் இச் செய்தியின் உண்மையை விளக்கவேண்டியது இந்தியத் தூதராலயத்தின் கடமையாகும்.

"இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரைச் சிறு சிறு கோஷ்டிகளாகக் கூச்சல் கிளர்ச்சி எதுவுமின்றி மாதா மாதம் இந்தியாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தால் நேரு மகிழ்ச்சியடைவார்" என்று நேருவைச் சந்தித்துவிட்டு, இலங்கைப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கைக்கு வந்துள்ள சாஞ்சிபௌத்தாலயஅதிபதி ஹெடிகல்லே பஞ்ஞாதிஸ்ஸ தேரோ கூறியதாகச் சிங்களப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

'நாடற்ற' மக்களை இந்தியா ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்று பாரதப் பிரதமர் ஏற்கனவே திட்டவட்டமாக இலங்கைக்குத் தெரிவித்துள்ளாரே! அப்படியானால் இது என்ன ஏற்பாடு? பிக்குவைத் தூது அனுப்பிய நோக்கமென்ன?

வண. ஹெடிகல்லே பஞ்ஞாதிஸ்ஸ இந்திய பௌத்த சங்கத்தின் நாயக தேரோவாகப் பதவிவகிப்பவர். பௌத்த புண்ணிய ஸ்தலமான சாஞ்சி விகாரையின் அதிபதி. நேருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். வகுப்புவாதத்துக்குஅப்பாற்பட்ட உத்தமர். அத்தகைய ஒரு மதகுரு கூறுவது தவருகவோ, பொய்யாகவோ இருக்கமுடியாது.

## சீன ஆதரவாளர் பிரசாரம்

சீனப் பிரதமர் இலங்கைக்கு வருவதையொட்டி இந்தியத் தூதராலயத்தால் இந்த நாயக்க தேரோ இலங்கைக்கு அழைக்கப்பட்டாரென்றும் இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஒரு விசேட விமானத்தில் அவர் இலங்கைக்கு வந்தாரென்றும் இங்குள்ள சீன-ஆதரவாளர் கோஷ்டியினர் ஒரு வதந்தியைப் பரப்பியுள்ளனர்.

சீனப் பிரதமரின் விஜயத்தால் சீனுவின்மீது சிங்களமக்களுக்கு ஏற்படும் அனுதாபத்தையும் ஆதரவையும் இந்தியாவின்பால் திருப்பவே இந்தியத் தூதராலயம் இந்த ஏற்பாட்டைச்செய்துள்ளது என்று சீன ஆதரவாளர் கோஷ்டி பிரசாரம் செய்கிறது.

## நோக்கம் என்ன?

நாயக்க தேரோ கூறுவதைப் போன்ற திட்டம் இருக்குமாயின், நேருஜி அதனை உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்துக்கு ஏன் தெரிவிக்கக் கூடாது?

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

இலங்கையிலுள்ள சிங்கள வகுப்புவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகப் பாரதப் பிரதமர் இந்த முயற்சியைச் செய்கிருரா?

நேருஜியின் நோக்கம் எதுவாக இருந்தாலும் சரி, 'நாடற்றவர்கள்' என்போர் இந்நாட்டுக் குடிமக்கள்.

ஒரு பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் அவர்களின் குடியுரிமைபறிக்கப்பட்டது. 110 இலட்சம் மக்களில் சுமார் 30 லட்சம் பேர் (தமிழ் பேசும் மக்கள்) இச் சட்டத்தை எதிர்த்தனர்—எதிர்க்கின்றனர். எனவே இது சட்டபூர்வமான சட்டமல்ல. சட்டமற்ற சட்டத்தின்மூலம் குடியுரிமையைப் பறித்தல் சட்டவிரோதமாகும்.

10 இலட்சத்துக்கு மேற்பட்ட மலைநாட்டுத் தோட்ட மக்கள் இந்நாட்டைத் தாயகமாகக்கொண்ட குடிமக்களே. அவர்களின் குடியுரிமையை நயவஞ்சகமான முறையில் பறிப்பதற்காகப் பெரிய சேனநாயக்கா இயற்றியகுடியுரிமைச்சட்டத்தை கிழித்தெறிய வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களை இரண்டாம் பேருக்குத் தெரியாமல் மாதா மாதம் சிறு சிறு கோஷ்டிகளாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கும் முயற்சி நிச்சயம் பலிக்காது.

## மறைமுக முயற்சிகள் வேண்டாம்

அம்மாதிரி மறைமுக முயற்சி எதையும் மலையக மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை இந்தியத் தூதராலயம் பாரதப் பிரதமருக்கு இப்போதே அறிவித்துவிடவேண்டும்: அத்துடன் வண. பஞ்ஞா திஸ்ஸ நாயக தேரோவின் கூற்றுபற்றி இந்தியத் தூதராலயம் நிலைமையை விளக்கி ஓர் அறிக்கை விடவேண்டும். இல்லையேல் பலவித தப்பபிப்பிராயங்களுக்கு இடம் ஏற்படுமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

ஃ ஃ ஃ ஃ

சீனப் பிரதமர் சௌ-என்லாய் இலங்கைக்கு விஜயம் செய்ததேன்?

சௌவுடன் பேசி, நேரு--சௌ சந்திப்பை ஏற்படுத்தி எல்லைத் தகராறைத் தீர்க்க வழிதேடப் போவதாக நம்பிக்கையுடன் கூறினர் திருமதி சிறிமாவோ. ஆனல் இதுபற்றி அவர்களின் கூட்டறிக்கையில் இருப்பதெல்லாம் ஒரு சில இராஜதந்திர பதங்கள்மட்டுமே. திருமதியின் முயற்சி புஷ்வாணமாகிவிட்டதா?

கொழும்புத் திட்டத்தை சௌ ஏற்றுக்கொள்ளவில்லை. அதைக் கொள்கையளவில் மட்டுமே ஏற்றுக்கொண்டாராம். அதனல் யாருக்கு என்ன பயன்? வெறுங் கண்துடைப்பு. லடாக் பிரதேசத்திலுள்ள சீனக் காவல் நிலையங்களை வாபஸ் செய்ய சௌ சம்மதிக்கவில்லை. அதற்குப் பதிலாக சௌவின் ஆட்கள் அங்கே எல்லைக் கல் நாட்டுகிருர்களாம்.

## சமரசம் தேவையில்லை

இவற்றிலிருந்து இந்தியாவுடன் சமரசம் செய்ய சீனு தயாரில்லை என்பது தெளிவாகிறதல்லவா? சமரசப் பேச்சு நிபந்தனையின்றி நடைபெறவேண்டும் என்று பீகிங் 'மக்கள் தினசரி' இவ்வாரம் தலையங்கம் தீட்டியுள்ளது.

பாகிஸ்தானுக்குச் சென்ற சௌ, காஷ்மீர் பற்றிய பாக். கொள்கையைப் பூரணமாக ஆதரித்தார். அப்படிச் செய்தல் இந்தியாவுடன் சமரசம் பேசுவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்குமென்பது சௌவுக்குத்தெரியாமலிருக்க முடியாது. தெரிந்தும் காஷ்மீரில் பாகிஸ்தான் நிலையை ஏன் ஆதரித்தார்? அதற்கு ஒரே காரணம் இந்தியாவுடன் சமரசம் பேச அவர் விரும்பாததுதான்.

திருமதி சிறிமாவின் சமரசப் பேச்சுக்குச் சௌ அளித்த பதில், 'நீங்களே நேருவுக்கு எழுதிக் கேளுங்கள்'-என்பதுதான். எனவே எல்லைப்பிரச்சினை பற்றிப் பேச சௌ இலங்கைக்கு வரவில்லை என்பது தெளிவு.

மற்ருேர் ஆசிய-ஆபிரிக்க மகாநாடு பற்றி சௌ வற்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பினர் பாதிக்கப்பட்டால் நடவடிக்கை

## எழுது வினைஞர் சங்க செயலாளர் அறிவிப்பு

சிங்களப் பரீட்சை எதற்கும் தோற்றுதவர்கள் பதவியிலிருந்து கட்டாயமாக ஒய்வு பெற வேண்டும் என்று திறைசேரி விடுத்துள்ள அறிக்கையைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. எப்பொழுதோ இதை எதிர்பார்த்திருந்தோம். எமது சங்க உறுப்பினர் பாதிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்க சங்கம் எப்பொழுதும் ஆயத்தமாகவிருக்கிறது என்று அரசாங்க எழுது வினைஞர் சங்க செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை எதற்கும் தோற்றுதவர்களும், அதற்கு வேண்டிய திருப்திகரமான விளக்கம் கொடுக்காதவர்களுமான பழைய அரசாங்க ஊழியர்கள், மூன்று மாத முன்னறிவித்தலுடன் நிர்ப்பந்தமாக ஒய்வு பெறும்படி கோரப்படுவர். சென்ற வருடம் நவம்பர் மாதம் 4ம் திகதி வெளியிட்ட திறைசேரி 560ம் இலக்க சுற்று நிருபத்தின் அடிப்படையிலேயே இப் புதிய சுற்று நிருபம் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.



திரு. இ. பாலசுப்பிரமணியம்

### செயலாளர் கருத்து

இச்சுற்று நிருபம் பற்றி அரசாங்க எழுது வினைஞர் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் நமது நிருபரிடம் மேலும் கூறியதாவது:

இச் சுற்று நிருபத்தையிட்டு நாம் ஆச்சரியப்படவுமில்லை-பீதியடையவுமில்லை. ஜனவரி மாதத்தில் வர வேண்டியது இரு மாதங்களின் பின் வந்திருக்கிறது. சங்கம் விளக்கம் கொடுத்த ஒவ்வொரு உறுப்பினரும் இப்படியான ஒரு நிலை உருவாகும் என்று எதிர்பார்த்தேயிருந்தனர். எமது உறுப்பினர் இதனுல் பாதிக்கப்பட்டவுடன் சங்கம் உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கிறது. அதே நேரத்தில இவ்விடயத்தில் தலையிடுதல் தமது கடமையாகக் கருதும் வேறு இயக்கங்களும் தலைவர்களும் உடனடியாக, உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேம்.

தியாகம் என்பது வெறும் பேச்சளவிலேயே நிற்கும் இக்காலத்தில் தமது இனத்தின் உரிமையை நிலைநாட்ட சில அரசாங்க ஊழியர்கள் எடுத்துள்ள இவ்வுறுதியான நிலை இனியாவது ஏனைய தமிழ் பேசும் மக்களையும் மற்றும் தலைவர்களையும் விழிப்படையச் செய்தால் இவர்கள் செய்துள்ள தியாகம் வீண் போகாது.

## துரோகச் செயல் புரியும் தமிழ் ஆசிரியர்கள்

சிங்களத்தில் அனுப்பி வைக்கப்படும் காசோலைகளைக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பல திருப்பி அனுப்பிக் கொண்டுவரும் அதே வேலையில், ஆசிரியர்களுடைய கட்டுக்கோப்பைக் குலைக்கும் தன்மையில் சில சுயநலவாதிகள் பின்புறத்தால் துரோகம் புரிந்து வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாதச் சம்பளக் காசோலைகளைக் கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரி சிங்களத்திலேயே அனுப்பியிருக்கிருர். இதை ஆட்சேபித்து ஆசிரியர்கள் காசோலைகளைத் திருப்பி அனுப்பிக் கொண்டே வருகின்றனர்.

ஆசிரியர்கள் தங்கள் உரிமைக்காகப் போராட்டம் நடத்திக் கொண்டு வரும் இவ்வேளையில், சில ஆசிரியர்கள் சுயநல நோக்கோடு ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

தாங்கள் விரும்பும் பகுதிகளுக்கு மாற்றங்களைப் பெற விரும்புவோரும், தமது நெருங்கிய உறவினர்களுக்கு அரசாங்கத்தில் சலுகைகள் பெற்றுத் தர முயலுபவர்களும் பின் கதவால் நுழைந்து ஆசிரிய சமூகத்துக்கே இழுக்குத் தேட முனைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது

கல்வி அதிகாரியைப் பேட்டி காணச் சென்ற சில தமிழ் ஆசிரியர்கள் சிங்களத்தில் பேச்சுவார்த்தைகள் நடாத்திய வெட்கக்கேடான சம்பவமொன்றும் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

ஆசிரிய சங்கமாகப் பதிவு பெற்று இயங்கி, பின்னர் பதிவு ரத்தாக்கப்பட்ட சங்கமொன்றும் இந்தக் காட்டிக் கொடுக்கும் முயற்சியில் முன்னிலை வகிப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலிருந்து மொத்தம் நூற்றுக்கும் அதிகமான காசோலைகள் திரும்பி வந்துள்ளனவென்றும், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் சம்பளம் பெருதிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் உள்ள உதவி கல்வி அதிகாரியைச் சிங்களத்தில் காசோலைகளை அனுப்பத் தூண்டுபவர், அதே காரியாலயத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ளவரும், முதன் முதலில் சிங்களம் படியாத தமிழ் ஆசிரியர்களுக்குச் சம்பளம் நிறுத்த வேண்டுமென்று செயலாற்றியவரு[illegible] என்று சொல்லப்படுகிறது.

### சிங்கள மயமாக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கா திட்டமிட்டுள்ளதாகவும், பலரிடம் இதையிட்டு ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு பகுதியில் எந்தவிதமான தொடர்புமற்ற ஒரு பொதுவுடைமைவாதி இதற்கான நடவடிக்கையில் திரு. முணசிங்காவுக்கு அடிக்கடி ஆலோசனைகள் கூறிவருவதாகவும் கூறப்படுகிறது.

தமிழ் ஆசிரியர்களாகப் பயிற்சிபெறுவோரின் தொகையினை படிப்படியாக கல்வி அமைச்சு குறைத்துக் கொண்டுவந்தது, இக்கலாசாலையை இறுதியில் சிங்கள மயமாக்கத்தானே என்று பலர் இப்பொழுது ஐயுறுகின்றனர்.

மட்டக்களப்பிலுள்ள தமிழ் ஆசிரிய கலாசாலையை தமிழ்பேசும் மக்களிடமிருந்து அபகரித்துவிட அரசாங்கமும் கல்விஇலாகாவும் முற்படுமானுல் மட்டக்களப்பு வாழ் தமிழ்பேசும் மக்கள் தீவிரமாகப் போராடத் தயங்கப்போவதில்லை என்று ஒரு ஆசிரியப் பிரமுகர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

### இலங்கைமீது..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப் பயமுறுத்துகிறது என்பதற்கு ஆதாரங்கள் உண்டா? கிடையாதே!

அப்படியானுல், நம் நாட்டின் மீது இந்தியா தன் கழுகுப் பார்வையைச் செலுத்தியுள்ளது என்றும், என்ருவது ஒரு நாள் நம் நாட்டை ஆக்கிரமித்து விழுங்கிவிடத் தயாராகிறது என்றும், அதற்கான தகவல்களைத் திரட்ட வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருக்கிறதென்றும் நாம் கருதுகின்றேம்.

இது நம் கைக்குச் சிக்கிய முதற்தடவையாகும். நமக்குத் தெரியாமல் இப்படி எத்தனை தடவைகள் செய்திருக்கிறதோ!

அமெரிக்க ஏகாதிபத்தியம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், நமது நாட்டைத்தனது தென் திசைக் குடியேற்ற நாடாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அபிலாஷையுடன் எதிர்காலத்தில் நமது கொடிய எதிரியாகக் கூடிய இந்திய ஏகாதிபத்தியம் ஆகியவை ஒன்று சேர்ந்து கொண்டு நடத்தும் கூட்டு யுத்தப் பயிற்சியின் ஆரம்பமா இது?"

### கட்சிக் கிளைகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சிரீதியாகப்பங்கு பற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதெனவும் கட்சி தீர்மானித்துள்ளது.

எது எவ்வாறுயினும் சிங்களக் காசோலைகளை இறுதிவரை ஏற்கப் போவதில்லை என்று தமிழ் ஆசிரியர்களில் தன்மானமிக்க பலர் உறுதி[illegible] நமது நிருபர் வர்ணிக்கிருர்.

## நேரு பிக்குவைத்.....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

புறுத்தினுர்-ஆனுல் மண்டல சார்பற்ற மகாநாட்டையும் ஆதரித்தார். மற்றொரு ம. சா. மகாநாடுபற்றி சிறிமாவற் புறுத்தினுர்-ஆனுல் அ-ஆ. மகாநாட்டையும் ஆதரித்தார். இருவரும் பரஸ்பரம் இரு மகாநாடுகளையும் ஆதரித்துக்கொண்டனர். எனவே அதற்காக சௌ இங்கு வரவேண்டிய அவசியமிருக்கவில்லை.

அப்படியானுல் ஏன் இந்த விஜயம்? மறுபடியும் அதே கேள்வி.

அடுத்துள்ளது உதவி--துணி, அரிசி, வழங்கி இலங்கைக்கு உதவிபுரிய அவர் ஓடோடியும் வந்தாரா? நெருக்கடியான வேளையில் செய்யப்படும் அந்த உதவிகளை வரவேற்கின்றேம், அது இலங்கையின் தன்மானத்தைச் சோதித்தாலும்கூட.

ஆனுல் கருணைமூர்த்திபுத்த பகவானுக்குக்கூட ஏற்பட முடியாத கருணை உள்ளம் சௌவுக்கு மட்டும் எப்படி ஏற்பட்டது? இதில்தான் விஜயத்தின் மர்மம் மறைந்துள்ளது.

தனக்குப் போட்டியாகத் தலைதூக்கி நிற்கும் இந்தியாவை அடித்து வீழ்த்திவிட்டு தென்கிழக்கு ஆசியாவிலே சீனத்தின் ஆதிபத்தியத்தைப் பரப்பும் நீண்ட கால ஆழ்ந்த திட்டம் ஒன்று சீனத்தலைவர்களிடம் உண்டு.

அந்த நோக்கத்தை நிறைவேற்ற இப்பொழுது அத்திவாரம் அமைக்கப்படுகிறது. இந்தியாவைச் சுற்றிய மூன்று நாடுகளுக்கும் சௌ விஜயம் செய்ததின் நோக்கம் அதுவே. பாகிஸ்தான் ஆதரவைப் பெற்ருகிவிட்டது. இலங்கையின் ஆதரவும் இனி நிச்சயமே. இவ்வளவு உதவிகளையும் வழங்கிய பின்னர் இலங்கை சீனுவின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்க முடியுமா என்ன? ஐம்பது பேர்களுடன் இங்குவந்து, இலங்கைக்கு உதவிகளை வாரிவழங்கிவிட்டு வெறுங்கையுடன் சௌ திரும்பிச் சென்ருரென்றுயாரேனும் எதிர்பார்த்தால் அவர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள்.

### பாரிஸ் தளமாகிறது......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை எதிர்ப்பவர்கள், இவ்வாறு களையெடுக்கப்படுவார்கள்.

1954 ல் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியில் நடந்த முக்கிய களையெடுப்பைப் போல இப்போதைய நடவடிக்கை இருக்கும் என்று கருதப்படுகிறது.


முன்னர் நடந்த களையெடுப்பின் போது இரு முக்கிய அதிகாரிகள் வெளியேற்றப்பட்டு பின்னர் தூக்கிலிடப்பட்டனர். கட்சியின் தலைமையைக் கைப்பற்ற முயற்சித்ததாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

### சிங்களத்தில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகநாதன் அவர்களும் கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியுடன் கதைத்துள்ளார் என்றும் தெரிகிறது.

இதையிட்டு கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதியுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுமாறு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. ம. சிவநேசராசா அவர்களைத் திரு. இராசமாணிக்கம் தந்தி மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்


ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கறையான்

எங்களுடைய வீட்டிற்கு இடது பக்கத்தில் இருப்பது பாத்துமுத்துவின் வீடு. பேருக்கென்று, இடையே ஒரு வேலி இருக்கிறது. 'இருக்கிறது' என்று சொல்வதை விட, இருந்தது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

அந்த வேலியின் ஒரு பாகத்தைக் கறையான் அரித்தெடுத்துக் கொண்டு போய் விட்டது. மற்றொரு பாகம், அடுப்புக்குள் எரிந்து ஒழிந்து போயிற்று.

பத்து வருஷங்களுக்குமுன் பாத்துமுத்துக்குக் கலியாணம் நடந்தது. அப்போது கடைசித்தடவையாக அந்த வேலி கட்டப்பட்டது.

கலியாணம் நடந்த மூன்றுவது வருஷமே அவளுடைய கணவன், ஒரு லொறி விபத்திற் சிக்கி இறந்துவிட்டான். அதற்குப் பிறகு ஒருவராவது அந்த வேலியை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அதற்கு அவசியமும் ஏற்படவில்லை. வேலியில்லாத குறை தெரிந்தாற்தானே!

இப்பொழுது சில தழை கம்புகள் தான் கிளைத்துத் தழைத்து, "இவ்விடத்தில் வேலி இருந்தது" என்று சொல்லிக் கொண்டு நிற்கின்றன. அவையும் இல்லாவிட்டால் 'ஒரு வளவுக்குள் இரண்டு வீடுகள் இருக்கின்றன' என்றுதான் மற்றவர்கள் நினைப்பார்கள்.

பாத்துமுத்து எங்களுக்குச் சொந்தக்காரியல்ல. நாங்கள், 'ஆலங்குடியில் கோணவாயன் கத்தறை'. அவள் மோதின் குடி. ஆலங்குடிக்கும், மோதின் குடிக்கும் உறவு தேடும் முயற்சி, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சி.

மோதின் குடியில் பெண்ணெடுப்பதை ஆலங் குடியார் இகழ்வாகக் கருதினர். ஆலங்குடியில் பெண்ணெடுப்பதை மோதின் குடியார் தாழ்வாக நினைத்தனர்.

'இந்த வேற்றுமை ஏன் உண்டானது! எப்போதுண்டானது?' இந்தக் கேள்விகளை எழுப்பி விட்டு, விடை காண முயல்வது பகீரதப் பிரயத்தனம் தான். மூளையைக் கலக்கும் இப் பிரச்சினை இப்போது நமக்கு அவசியமுமில்லை. ஆனால் ஒன்று—

இவ்விரு குடிகளும் ஒன்றுக்கொன்று தாழ்ந்தது என்று சொல்லி விட முடியாது. ஏதோ ஒரு உணர்வு தெரியாத வெறுப்பு, அவ்வளவுதான். முன்னே சென்ற மாட்டை, பின்னால் செல்லும் மாட்டுப்பட்டி பின்பற்றவில்லையா? அப்படிப்பட்ட ஒரு பழக்கம்.

நல்லதோ கெட்டதோ, பழங்காலத்தில் இருந்தவர்கள் இந்தப் பிரிவினையைச் செய்து வைத்தார்கள், நாங்களும் கண்ணை மூடிக் கொண்டு அதையே செய்கிறோம்.

பாத்துமுத்து மோதின் குடிதான். என்றாலும் அவளை ஒதுக்கி வைத்து விட்டு எங்களால் வாழ முடியவில்லை. நான் சிறிசில் இருந்தே, அவளைத் தாத்தா, தாத்தா என்று அழைத்துப் பழகி விட்டேன். அவள் என்மீது காட்டிய பரிவும், பாசமும் எங்களை உடன் பிறந்தவர்களாகவே வளர்த்து விட்டன. இப்பொழுது தாய், தந்தை உற்றார், உறவு எல்லாம் நாங்கள்தான். அவளுடைய அடுப்பு எரிந்தாற்றான் எங்களுடைய அடுப்பு எரியும், என்னுடைய பெற்றோருக்கு அவள் மீது அத்தனை அன்பு. மனித ஜென்மம் எடுத்த பாத்துமுத்து ஈன ஜென்மமும் அனுபவிக்காத கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து விட்டாளே, என்ற கழிவிரக்கம்.

குழந்தைப் பருவத்தில் தந்தையை இழந்தாள். மொக்காடு போடவேண்டிய குமரானதும் தாயையும் பறி கொடுத்து விட்டுத் தனித்து நின்றாள். பக்கத்திலிருந்து இப்பரிதாபத்தைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க எங்கள் மனம் கல்லாக இல்லை.

என்னுடைய பெற்றோர் அவளை அரவணைத்து, திருமணமும் செய்து வைத்தனர். அவளுடைய நஸீபு, சரியாக இல்லை, மூன்றாவது வருஷமே கைம்மை அடைந்துவிட்டாள்.

ஆசிரிய பயிற்சிபெற, அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைக்குச் சென்றிருந்த நான்; மூன்று மாதங்களுக்குப் பின் விடுமுறையில் வீட்டிற்கு வந்தேன்.

அந்தப் பழைய வேலி இருந்த இடத்தில், ஒரு புதிய வேலி எழுந்து நின்று கொண்டிருந்தது. பாத்துமுத்துத் தாத்தாவின் வீட்டை அந்தவேலி விழுங்கி விட்டதா! எங்களுடைய வீட்டிலிருந்து பார்க்கும் போது இப்போது பாத்துமுத்துவின் வீடு தெரியவில்லை.

வேலிவரை சென்ற என் கண்கள், அப்பால் செல்ல முடியாது தவித்தன. வெறுமையில் லயித்தன. மனதில் ஏக்கம் நிலைத்தது, அழுதுவிடவேண்டும் என்ற ஒரு சிலிர்ப்பு.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு இந்த இடத்தில் ஒரு வேலிச்சனியன் எழுந்து நின்று பாகப்பிரிவினை செய்ய வேண்டிய அவசியம் ஏன் வந்தது? மூளையே குழம்பி விடும் போலிருந்தது.

இராச்சாப்பாடு நடக்கும் பொழுது தான் அந்தப் புதிருக்கு விடை கிடைத்தது.

'பிறை பதினாலுக்கு, பாத்துமுத்துக்குக் கலியாணம்'. என் அம்மா சொன்னதும் வயிறு நிறையுமுன்பே மனம் நிறைந்துவிட்டது, மகிழ்ச்சி.

கைபடாத கன்னிக் குமர்களைக்கூட கலியாணம்செய்வதென்றால்கூட சீதனபாதம் கேட்கும் இந்தக்காலத்தில் பாத்திமாவைப்போன்ற கைம் பெண்களுக்கும்வாழ்வு கிடைக்குமா? அவர்களுள்ளத்திலே கருகிக் கரைந்து போன இன்ப நினைவுகளும், இளமை ஆசைகளும் மீண்டும் பசுமைபெற முடியுமா? ஆச்சரியத்தின் உதைப்பால்--கேள்விகள் அலைபோல் எழுந்தன.

'கிடுகுகளும், கம்புகளும் அழிந்து விட்டாலும் நாங்கள் மட்டும் பசுமையாக இருக்கவில்லையா? இயற்கையின் அரவணைப்பில் கிளைத்துச் செழிக்கவில்லையா! காலனுக்கு உயிர்களைப் பறிக்கத்தான் தெரியுமே யொழிய உள்ளங்களை வற்றடிக்கத் தெரியாது. சக்தியுமில்லை.'


அந்த வேலியில் நின்ற பழைய தழை மரங்கள் இப்படிக் கூறிக்கொண்டு சலசலவென்று சிரிப்பது போலிருந்தது எனக்கு.

உண்மையில் பாத்துமுத்துக்கு வாழ்வளிக்க வந்தவன் ஒரு தியாகி ஆகத்தான் இருக்க வேண்டும். யார் அந்த நல்லவன்?

'மாப்பிள்ளை யார்?'

தாயிடமே கேட்டேன், ஆச்சரியங்களின் அடுக்கால் பாரித்த உள்ளச் சுமையை மறைத்துக் கொண்டு.

'சின்ன லெப்பை பக்கிரு சாகிபு தான் மாப்பிள்ளை——வேலி கூரை கட்டுற செலவும் அவர்தான் குடுக்கிறார். அடுப்படிச் செலவும், காவின் செலவும் கையிலேயே குடுத்துட்டார். ஹயாத்துப் பெத்த சீதேவி, நல்லாயிருப்பான்.'



பக்கீர் சாகிப் சின்ன லெவ்வையைத் தெரியாதவர்கள் எங்களூரிலேயே இருக்கமாட்டார்கள். றபான் கட்டையை எடுத்துக்கொண்டு 'சபர்' செய்யப் புறப்பட்டு விட்டாரானால் கிராமமே இசை லாகிரியில் மூழ்கி உபாதைப்படும். அவருடைய பாட்டுக்கும், றபானுக்கும் அப்படிப் பட்ட ஒரு வன்மை இருக்கிறது.

தொழில் என்னமோ பிச்சைக்காரத் தொழில்தான். ஆனால் வருமானம் அப்படிப் பட்டதல்ல.

டமர...டமர...டமர... ...டம்...டம்.

'காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா.

டமர...டமர...டம்...டம்'. ...டம்.

றபானைத் தாளத்திற் கமையத்தட்டி மஸ்தான் பாடலை ஆனந்த பைரவியில் தோய்த்து இழுத்தாரானால் தொண்டுகிழங்கள் தம்மை மறந்து 'சுப்ஹானல்ல' போட்டுக்கொள்ளுவர்.

[illegible] இருந்திக்கொண்டிருக்கும் போது திடீரென முகாரி ராகம் எழும். கண்ணீர் நம் கண்களில் ஆறாகப் பெருக்கெடுத்தோடும். பக்கீர்தொழிலில் அவருக்கு நிகர் அவர் தான். அதனால் எங்கள் கிராமத்தில் நல்ல மௌசுப் பேர் வழியாகிவிட்டார்.

இத்தனைக்கும் அவர் இந்த ஊரில்தான் பிறந்துவளர்ந்தவரல்ல. மூன்று வருடங்களுக்குமுன் எங்கிருந்தோ வந்து பள்ளிவாசலில் 'ஆண்டவனே' என்று குடியேறி விட்டார். பிறகு எங்கும் போகவே இல்லை. அவர் தொழிலுக்கு இங்கிருந்த கிராக்கிதான் போலும்.

கிராமத்து மக்களுக்கும் அவரால் ஒரு உபத்திரவமும் இல்லை. பள்ளிவாசலைச் சுத்தமாக வைத்திருப்பது முதல், பாங்கு சொல்வதுவரை 'முஅத்தினுக்'கு அவர் பெரும் உதவியாளராக இருந்தார். சம்பளமற்ற உதவியாளர். அதனால் நாங்களும் ஊர்ப் பிறவிபோலவே கருதிவருகிறோம்.

முப்பத்தொருவயது. கட்டு மஸ்தான உடம்பு. கறுப்புச் சேலையினால் வரிந்து கட்டப்பட்ட தலைப்பாகை; 'நல்லவனுக்கு நாலுமயிர்' என்பார்களே, அதுபோல முகத்தில் தாடி என்ற பெயருக்கு நாலைந்து ஆட்டுமீசை. கறுத்தக் குல்லாச் சட்டை, கடுக்காய் மாலையால் கழுத்து வளையம், வலது தோளில் சோளியல், இடது கையில் றபான் கட்டை.

சாதாரணமாக, பக்கீர் சாகிப் சின்னலெப்பையை இந்தக் கோலத்தில் தான் நாம் பார்க்கமுடியும்.

அல்லாவையும், வலிமார்களையும் ஏப்பம் விடுவது போல இரைந்து நினைவுபடுத்திக்கொள்ளுவார். ஐங்காலத் தொழுகையையும், சமய அனுஷ்டானங்களையும்குறைவின்றிச் செய்து வந்தார். மார்க்கப்பிரச்சினைகளை மற்றவர்களுடன் விவாதிப்பதில் மகா சமர்த்தர். மஸ்தான் சாகிப் பாடலையும், பதினெண் சித்தர் பாடலையும் மேற்கோளுக்காகப் பாடித் தன் கட்சியை எப்படியோ நிலைநாட்டி விடுவார்.

இளவட்டங்கள் பாட்டுக் கேட்பதற்காகவே அவருடைய வாயைச் சீண்டிவிடுவது வழக்கம். ஒரு நாள் நானும் என் நண்பர்கள் சிலரும் அவருடன்பேசிக்கொண்டிருந்தோம்.

'என்ன ஹபீப்! ஒண்டிக் கட்டையாக எத்தனை நாளைக்கிருப்பது? ஒரு கலியாணம் செய்து குடியும், குடித்தனமுமாக வாழ்ந்தாலென்ன?'

கதையோடு கதையாக இப்படி ஒரு கதையைக் கேட்டுவைத்தேன். அவ்வளவுதான். எடுத்த எடுப்பிலேயே,

'[illegible]ண்டாட்டி கால்விலங்கு
பிள்ளை (இ)ரண்டும்
சுள்ளாணி
சுள்ளாணிக் குள்ளிருந்து.

சுகம் பெறுவதெக்காலம்" என்று பதினெண்சித்தர் பாடலை முகவுரைபோல் பாடி ஒரு நீண்ட பிரசங்கமே செய்து விட்டார்.

நாங்கள் அவருடைய புத்திக் கூர்மையை வியந்து மூக்கின்மேல் விரலை வைத்தோம்.

வேதாந்தப் போர்வையைப் போர்த்திக்கொண்டிருக்கும் அதே பக்கீர்சாகிப் தான் என்னுடைய தாத்தாவைக் கலியாணம் செய்து கொள்ளமுன்வந்திருக்கிறார்.

ஆச்சரியம் மட்டுமல்ல அதிசயமும்தான். வேறொரு சம்பந்தமாக இருந்தால் அவர் வாக்குமாறியதைக் குத்திக்காட்டிப் பிய்த்து எடுத்துவிடலாம்.

இப்பொழுது அவருடைய துறவறத்துறவு என்னுடைய பாத்துமுத்துத் தாத்தாவுக் கல்லவா வாழ்வுதரப் போகிறது? வாயைக்கட்டிக்கொண்டேன்.

அன்றுபிறை பதினாறு. பாத்துமுத்துத் தாத்தாவுக்குக் கலியாணம். காலையிலேயே வண்ணான் வந்து வீட்டிற்கு வெள்ளையைக்கட்டினான். நான் குருத்தோலை வெட்டி, பந்தலை அலங்கரித்தேன். பக்கத்து வீட்டுப் பெண்கள் வளவு நிறைய இறைந்து கிடந்தனர்.

வழமைபோல மருதோன்றியும் மாற்றிக்கொண்டாகி விட்டது. நிகாஹ் எழுத வேண்டிய நேரமும் நெருங்கிக்கொண்டிருந்தது. பள்ளி முஅத்தினும், பெரிய மரக்காயரும், கதீபும் வந்துவிட்டனர்.

கலியாணக் களரியில் பாத்துமுத்துவுக்காகக் கதைக்கவேண்டிய மோதின் குடி மரக்காயரும், கலியாணப் பதிவுக்காரரும் வந்து தத்தமக்குரிய இடங்களில் இருந்து களரிக்கு மெருகு கொடுத்தனர்.

வெற்றிலை வட்டா அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தது. எல்லாருடைய வாய்களும் வெற்றிலைத் திரணையால் 'தம்' மாகி இருந்தன. சிலர் வெற்றிலைச் சாறைப் படிகத்துக்குள் உமிழ்ந்துவிட்டு உதட்டை உள்ளங்கையால் துடைத்துக்கொண்டனர்.

பாத்துமுத்துத் தாத்தாவைக் குளிப்பாட்டிக் கூறையுடுத்து நகைகளும் போட்டு மூலைக்குள்வைத்து விட்டனர். (மணப்பெண்களை ஏன் மூலைக்குள் வைக்கின்றனர் என்பது எனக்குத் தெரியாது).

மாப்பிள்ளை வரவேண்டியதுதான் பாக்கி. இடைக்கிடை பட்டாசு வெடிகளும், குரவை ஒலியும் எழுந்து சோர்ந்த உள்ளங்களை முறுக்கி உசார்படுத்தின.

'லுகறு' தொழவேண்டுமென்று கதீப் ஆலாய்ப் பறந்தார். தொழுகைக் கதையை எடுத்தவுடனேயே பள்ளிப்பெரிய மரைக்காயருக்கு முகம் சுண்டிப் போயிற்று. தொழுகையென்றால் அவருக்கு எட்டிக்காய்.

பட்டுச்சாரன் 'சரக், சரக்' கென்று ஓசையெழுப்ப, புதிய சப்பாத்து காலைக் கடிக்க, முழுக்கைச்சேட்டும், துருக்கித் தொப்பியும் அணிந்து; நிகாஹ் களரிக்கு வந்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று சொல்லிவிட்டுக் 'கதீபு'க்கு முன்னால் விரிக்கப் பட்டிருந்த வெண்துகிலில் கால்மடித்து இருந்துவிட்டார் மாப்பிள்ளை.

இதுவரை பக்கீர்க்கோலத்திலேயே பார்த்துப் பழகிய அவரை, மாப்பிள்ளைக் கோலத்தில் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. அவருடைய நடையே இன்றைக்கு அலாதிதான். அவரை வரவேற்ற குரவை

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தி வெறியர் துடுக்கடக்கிய வீரர் பேராசிரியர் சேதுப்பிள்ளை

# செந்தமிழைச் சந்தமுடன் பேசிய சொல்லின் செல்வர்

“தாளாண்மையால் வன்னிலத்தை நன்னிலமாக்கி, வேளாண்மையால் வளம் பல பெருக்கி, வாளாண்மையால் வீரம் விளைத்தவன் தமிழன்” என்ற அடுக்கு மொழிகளைக் கேட்டால் அறிஞர் அண்ணு பேசுகிருர் அல்லது அவர் கழகத்தவர்களில் ஒருவர் பேசுகிருர் என்றுதான் யாரும் நினைப்பார்கள். ஆனுல் இவர்களுக்கு முன்னதாகவே செந்தமிழைச் சந்தமுடன் பேசி மக்கள் மனதிற் சொல்லின செல்வரென நிலைத்துவிட்டவர் ரா. பி. சேதுப்பிள்ளையவாகள்.

அண்ணுவின் பேச்சில் அரசியல் மணக்கும்; சமூக சீர்திருத்தம் கலக்கும். பொடி போட்டுக் கொண்டே பொடிவைத்துப் பேசுவார்; அரசியல் எதிரிகளைச் சாடுவார். ஆனுல் சேதுப்பிள்ளையின் பேச்சிலோ செந்தமிழ்த் தேன் பிலிற்றும்; இலக்கியம் மணக்கும்; அவரின் ஒவ்வொரு மூச்சிலும் தமிழ்ப்பண்பாடு பிறக்கும். சேதுவின் செந்தமிழ்ப் பேச்சென்ற போதினிலே இன்பத் தேன்வந்து பாயும் காதினிலே. இவரின் நினைவு தினத்தையொட்டி (2-3-64) இக்கட்டுரை பிரசுரமாகிறது.

திருநெல்வேலியில் பிறவிப் பெருமாள் பிள்ளைக்கு ஒன்பது ஆண் மக்கள் ஒருவர் பின் ஒருவராகப் பிறந்து இறந்துவிட்டனர். பத்தாவதாகப் பிறந்தது பெண் குழந்தை. பின் பத்தாண்டுகள் கழிந்ததும்—1896ம் ஆண்டு மார்ச்சு இரண்டில்--பதினேராவதுபிள்ளையாகப் பிறந்தவர்தான் சேதுப்பிள்ளை. இவரது ஐந்தாவது வயதிலே தமக்கையாரும் இறந்துவிடவே ஒரே அருமைக் குழந்தையாக வளர்ந்தார்.

### படிப்பு

திண்ணைப் பள்ளியில் தொடங்கிப் பின்னர் பாளையங்கோட்டைச் சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் படித்துட பட்டம்பெற்ருர். பச்சையப்பன் கல்லூரியிலேயே விரிவுரையாளராக இருந்துகொண்டு சட்டக்கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ருர். பின்னர் திருநெல்வேலியிலே சட்டத்தொழிலைத் தொடங்கினுர். சிறு வயது முதல் தீந்தமிழின் எழிலில் மயங்கியிருந்த சேதுப்பிள்ளைக்குச் செந்தமிழ்ப் பணியிலேயே மனம் சென்றது. கம்பகாவியத்திலே மூழ்கிச் சொற்பொழிவுகள் மூலம் தான்பெற்ற இன்பத்தைப் பிறரும்பெறச் செய்தார்.

### அண்ணுமலையில்....

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அழைத்தது. விரிவுரையாளராகப் பணியேற்ருர். அக்காலத்தில், உலகம் வியக்க ஆங்கிலம் பேசுபவரான மகாகனம் சீனிவாச சாத்திரியாரின் பேச்சுக்குப் பெருமதிப்பிருந்தது. தமிழ்க் கூட்டத்திற்குப் போவது அநாகரிகம் என மக்கள் எண்ணியிருந்த காலம். ஆனுல் சேதுப்பிள்ளை அண்ணுமலையிற் கால்வைத்த பின்னர், சீனிவாச சாத்திரியாரின் பேச்சு வேருேர் மண்டபத்திலிருந்தாலும், இவர் பேச்சுக்கே மக்கள் திரளுவர். 'அன்பர்களே! நான் நெல்லையிற் பிறந்து தில்லையில் வாழ்கிறேன்' என்று தொடங்கிச் செந்தமிழ் முழக்கம் இடுவார். எள்ளுப்போட இடமிருக்காது. ஊசிபோட்டால் சத்தமிருக்காது.

### பெற்ற பரிசுகள்

பின்னர் சென்னைப் பல்கலைக்கழகம் அழைத்தது. ரெவரண்ட் லாசரஸ் தமிழ் பேராசிரியர் பீடத்திற்கு முதலில் நியமிக்கப்பட்ட பெருமை இவருக்குண்டு. தமிழ்வளர்ச்சிக்கழகம் தோன்றியபோது முதல் அளித்தபரிசுஇவரது 'ஊரும் பேரும்' என்ற நூலுக்கே கிடைத்தது. பாரதம் விடுதலை பெற்ற பின்னர் கலைக் கழகத்தைத் தொடக்கியது. 'தமிழின்பம்' என்ற இவரது நூலுக்கே அக்கழகத்தின் முதற் பரிசு கிடைத்தது. இருபதாண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த இவருக்கு, அதன் நூற்ருண்டு விழாவிலே, நேரு, டாக்டர் இராதா

**மு. சிவானந்தம் எம். ஏ.**

கிருஷ்ணன் முதலிய பேரறிஞர்களின் முன்னிலையிலே இலக்கியப் பேரறிஞர் [Doctor of Literature] என்ற பட்டம் வழங்கப்பட்டது.

### துக்கதினமும் அனுதாபமும்

ஈழத்தமிழர் பற்றி]அறிவதில் அவர் ஆவலுடையவர். சென்னையிலே படித்த ஈழத் தமிழ் மாணவரிடம் தனியன்பு செலுத்திஞர். திருநெல்வேலித் தமிழ்ப் பேச்சு வழக்கிற்கும் யாழ்ப்பாணப் பேச்சிற்கும் அதிக ஒற்றுமையுண்டு என்று விளக்குவார்.

1957ம் ஆண்டு பெப்பிரவரி 4ந் திகதி தாம்பரத்திலேயுள்ள கிறித்தவக் கல்லூரியின் ஈழத் தமிழ் மாணவா துக்கதினம் அனுட்டித்தனர். உண்ணுவிரதம் கறுப்புச்சின்னம், மாலையிலே நடந்தகூட்டம் முதலியனபெரும் பரபரப்பை ஏற்படுத்தின. சென்



னையிலிருந்த சேதுப்பிள்ளைக்கு எப்படியோ இது தெரிந்துவிட்டது. சில நாட்களுக்குப் பின் நான் அவரைச் சந்தித்தபோது, மிகுந்த அனுதாபத்தோடு ஈழத்து அரசியல் நிலைபற்றி விசாரித்தறிந்தார்.

கலைச்சொல்லாக்கத்திற்காகப் பல்வேறு மொழிப் பேராசிரியர்களையும் பாரத அரசாங்கம் டெல்லிக்கு அழைத்து மகாநாடுகள் நடத்துவது வழக்கம். ஒருமுறை அவரைச் சந்தித்த போது, அத்தகைய மகாநாடொன்றிலிருந்து திரும்பியிருந்தார். இந்தி மொழி வெறியினர் தமிழ்மொழியைச் சீர்குலைக்கவே முனைவதைச் சொல்லி மனம்வருந்திஞர். Water-way என்பதற்கு 'ஜலபாதை' என்றே எழுதவேண்டுமென்று வற்புறுத்திஞர்களாம். 'ஜலபாதை' என்ருல் தமிழ் நாட்டிலே வேறுபொருள் படும் என்பதை நகைச்சுவையோடும் குத்தலும் கேலியும் நிரம்பிய சொற்களோடும் கூறி இந்தி வெறியரை அடக்கிஞராம். அதேபோல Tax என்ற சொல்லை மொழி பெயர்க்கும்போது, இறை, திறை, ஆயம், வரி, தீர்வை என வெவ்வேறு வரிகளுக்கெல்லாம் வெவ்வேறு தமிழ்ச் சொற்கள்பண்டைக் காலம்முதல் தமிழில் உண்டு என்றுஆணித்தரமாகப்பேசி அவர்கள் வாயை அடக்கிஞராம். சொந்த நாடு, சொந்த மொழி என்பவற்றிற்கு ஆபத்து வரும்போது ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல் என்றவிதமான பேச்சிற்கே இடமில்லை என வலியுறுத்திக்கூறிஞர்.

### மறைவு

இத்தகைய மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும்மிகுந்த சேதுப்பிள்ளையவர்கள் 1961ம் ஆண்டு ஏப்பிரல் திங்களிற் காலமாஞர். 'ஊரும் பேரும்', 'தமிழின்பம்', 'தமிழர்வீரம்', 'வேலும் வில்லும்', வழி வழி வள்ளுவர்', 'வேலின் வெற்றி', 'தமிழ் விருந்து', 'தமிழ் நாட்டு நவமணிகள்', 'கடற்கரையிலே', 'வள்ளுவர் நூல் நயம்', 'கிறித்தவத் தமிழ்த் தொண்டர்', 'அலையும் கலையும்', 'ஆற்றங் கரையிலே', முதலிய இறவாத புகழுடைய நூல்கள் அவர் விட்டுப்போன தமிழ்ச் செல்வங்கள். அண்ணுமலை, சென்னை முதலிய பல்கலைக் கழகங்களிலே தமிழ்ப் பணிக்காக அவர் கொடுத்த ஐம்பதினுயிரமும் பல லட்சங்களுக்குச் சமம். மக்கட் செல்வம் இல்லாத குறையினுலோ என்னவோ அவர் திருநெல்வேலி மகப்பேறு மருத்துவமனைக்குக் கொடுத்த நிதியுதவி ஏழைகள் பலருக்குப் பலன் தருகின்றது. தமிழ் உள்ளளவும் அவர் புகழ் நிலவும்.

---

“சுதந்திர விழாவை”

## வேல், ஆனந்தன் பகிஷ்கரித்தார்

கடந்த 4-2-64ம் திகதி காலியில் நடந்த சுதந்திர தின விழாவில் பங்குபற்றுமாறு ஈழத்தின் பிரபல ஆடற்கலைஞரும், குரு கோபிநாத் அவர்களின் மாணவனுமாகிய 'கலாநிகேதன்' வேல் ஆனந்தன், யாழ். அரசாங்க அதிபரால் நெடுந்தீவு காரியாதிகாரி மூலம் கேட்கப்பட்டிருந்தார். பத்து நிமிட நடனநிகழ்ச்சிக்கு 300 ரூபாயும், புகையிரத பிரயாணச் சீட்டும், வழங்கப்படுமென்று அறிவித்திருந்தார்கள். அந்த வேண்டுகோளை வேல், ஆனந்தன் பகிஷ்கரித்ததோடு வந்த பணத்தையும் கலாச் சாரப் பகுதிக்குத் திருப்பியனுப்பிவிட்டாராம். கலாச் சாரப் பகுதிக்குஅவர் அனுப்பிய கடிதத்தில் 'எனது மொழி பாதிக்கப்பட்டுள்ள இடத்தில் எனது கலையை யார் ரசிக்கப்போகிருர்கள்' என்று குறிப்பிட்டிருந்தாராம்.

கடந்த 14-2-64 முதல், 16-2-64 வரை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடந்த கலைவிழாவில், வேல், ஆனந்தனின் நடனங்களும், நவரசமும் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரின் மொழியுணர்வும் கலைத் தொண்டும் வாழ்க.

---

### கனக-செந்திநாதனுக்கு பாராட்டு

சமீபத்தில்வெளியிடப்பட்டுள்ள, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற வரலாற்று-ஆராய்ச்சி நூலில், தமிழுக்குத்தொண்டாற்றிய ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களை மிகவும் விரிவான முறையில் அறிமுகப்படுத்தியுள்ளமை குறித்து, நூலின் ஆசிரியர் திரு. கனகசெந்திநாதன் அவர்களுக்கு 'முஸ்லிம்எழுத்தாளர் சங்கம்' தங்களது மனப்பூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளதென சங்கத்தின் இணைச் செயலாளர் ஜனுப் எம். எம். மக்கீன் அறிவித்துள்ளார்.

திரு. கனகசெந்திநாதனுக்கு சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தின் முக்கிய குறிப்புரை பின்வருமாறு: 'தங்க

(13-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் குரல்

### திருகோணமலையினிலே ....

8-2-64ல் திருகோணமலை நகரபிதா சிவானந்தன் கூட்டிய வடகிழக்கு மாகாண மாநகர சபை-பட்டின சபை—கிராமச் சபைத் தலைவர்களடங்கிய மாநாட்டில் கலந்து கொள்ள வந்த என்னைத் திருகோணமலை திடுக்கிட வைத்தது. எங்கும் சிங்கள வராதிக்கம் என்னைக் கலங்க வைத்தது.

புனித பூமியாகிய திருகோணமலையைக் “கோணகம்”என்று பெயர் சூட்டுமளவிற்கு அவர்களது வெறி இயங்குகின்றது. அவர்களது ஒரே ஆசை நகரசபையைக் கைப்பற்ற வேண்டும், பாராளுமன்றப் பிரதிநிதியாக ஒரு சிங்களவர் வரவேண்டும் என்பதே.

ஆனுல் அவ்வளவு தூரம் நாங்கள் முட்டாள்களல்ல. எங்களிடையில் எவ்வளவுதான் கட்சி, கருத்து வேற்றுமை இருந்த போதிலும் சமயம் வரும் போது எல்லோரும் பகை மறந்து ஒன்ருகிவிடுவோம் என 'திருக்கோணமலைக்கவிராயர்' கூறியது மகிழ்ச்சியைத்தந்தது.

அபயபுர—சிறிமாபுர போன்றபலாத்காரப்பெயர்களை அகற்றி நல்லதொரு தமிழ்ப் பெயர்புனைய வேண்டும் என்பதே நான் தலைவர் சிவானந்தனிடம் விடுக்கும் அன்பு வேண்டுகோளாகும். இதை நிறைவேற்றித்தர வேண்டும் என்பது எனது பேரவா.

இருள் சூழ்ந்த வாழ்க்கை ஒளிமிக்கதாக இருக்க வேண்டுமானுல் முதலில் தமிழ்ப்பகுதிகளிலுள்ள சிங்களக்குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் வாழ வந்தவர்களாக அங்கு இல்லை. ஆளவந்தவர்களாக காட்சியளிப்பது வேதனைக்குரிய விஷயமாகும். எல்லாம் வல்ல கோணேசர் பூமியிலே இன்று சிங்கள வகுப்பு வாதிகளால் நிலவும் பயங்கர சூழ் நிலை என்று ஒயுமோ அந்நாளே திருக்கோணமலை மக்களின் விடுதலை நாள்.

சோ. வீரக்குட்டி
தலைவர்
கிராம சபை
கரவாகு மேற்கு

---

### வேண்டும் தமிழியக்கம்

தமிழ் பேசும் இனம் தனிச் சிங்களச் சட்டத்திஞல், பிறந்த நாட்டிலேயே உரிமைகள் இழந்து இரண்டாம் தர குடி மக்களாக்கப்பட்டு, அவ்விதமே அரசாள்வோரால் நடாத்தப்பட்டு வருவது உலகறிந்த உண்மை.

சிங்களச் சட்டத்தை வெறும் மொழிப் பிரச்சினையாக மட்டும் கருதாமல், தமிழினத்தை அழித்தொழித்துக்கட்ட அதையொரு சக்தி வாய்ந்த அரசியல் ஆயுதமாக நாடாள்வோர் பாவித்து வருகிருர் [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)




ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், இரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூபா 3-00
30 நாள் டின் ரூபா 5-75

தபால் செலவு /-95

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜியின் பேரன் இலங்கை வருகிறார்?

## தார்மீகக் கலைக் குழுவும் இங்கு வருகிறது

**மகாத்மா காந்தியின் பேரப்பிள்ளையான ராஜ் மோகன் காந்தி ஒரு கலைக் குழுவினருடன் இம் மாத இறுதியில் இலங்கைக்கு வரவிருப்பதாகத் தெரிகிறது. இலங்கையின் பல பாகங்களிலும் இவர்கள் சமாதானத்தை வலியுறுத்தும் நாடகங்கள் நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது**

காந்தி அடிகளின் பேரப் பிள்ளையான ராஜ் மோகன் காந்தி, ராஜாஜிக்கும் பேரனுவார். காந்திஜியின் குமாரரான மணிலால் காந்தி ராஜாஜியின் மகளை மணந்தவர் அவர்களின் குமாரரே ராஜ் மோகன்.

உலகெங்கும் சமாதானத்தையும் செளஜன்ய உறவையும் பலப்படுத்தும் எம். ஆர். ஏ. என்ற நிறுவனத்தினருடன் ராஜ் மோகன் நெருங்கிய உறவு கொண்டுழைப்பவர். தார்மீகப் புனருத்தாரண வேலைகளை அடிப்படையாகக் கொண்ட, கலை அம்சம் பொருந்திய நாடகங்களை இவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் நடாத்துவார்களென்று தெரிகிறது.

## நாடகப் போட்டி
## உங்கள் தீர்ப்பே எங்கள் முடிவு

25-2-64 வரை எமக்குக் கிடைத்த வாக்கு விபரங்களின்படி கலைஞர்களையும் நாடகங்களையும் கடந்த வாரம் வரிசைப்படுத்தியிருந்தோம். இவற்றைக் கண்ணுற்ற பலகலைஞர்கள் எமக்குப் பலதரப்பட்ட கடிதங்களை எழுதியுள்ளார்கள். நாம் காட்டிய விபரங்களைப் பார்த்து பல கலைஞர்களும் இரசிகர்களும் ஏமாற்றமடைந்திருப்பதாக எழுதியுள்ளனர். நாம்வாராவாரம் பிரசுரிக்கும் வாக்குச்சீட்டுகளை நிரப்பி அனுப்பி வாசக இரசிகர்கள் எமக்குப் பணித்துள்ள முடிவுகளையே நாம் வெளியிட்டோமே தவிர, அவை எமது தீர்ப்பு அல்லது 'சுதந்திர'னின் தீர்ப்பு என்று கூறுவதற்கில்லை.

வாசகர்களே எமது எஜமானர்கள். அவர்கள் இடும் பணியினையே நாம் பொறுப்பேற்று நடாத்துகின்றோம்.

மேலை நாடுகளிலெல்லாம், வாசகர்களைக் கொண்டே ஒவ்வொருவருடத்துப் பிரமுகர்களையும் தேர்ந்தெடுப்பது வழக்கமாகவிருந்து வருகிறது. இலங்கையிலும் பல ஆங்கிலப்பத்திரிகைகள் இம்முறையினை அனுசரித்து வந்துள்ளன. தமிழில்முதன்முதலாக 'சுதந்திர'னே இப்பணியினை ஆரம்பித்தது. இப் போட்டிபற்றி போதுமான அளவு விபரங்களையும் வாராவாரம் கொடுத்து வந்துள்ளோம்.

இரசிகப்பெருமக்கள்வழங்கும் தீர்ப்புக்குஎதிராக நாம் எமது எண்ணத்தை இப் போட்டியில் வலியுறுத்தப் போவதில்லை என்பது மட்டும் திண்ணம். இரசிகர்களாகிய நீங்கள் எத்தகைய தீர்ப்பையும்வழங்குங்கள். இறுதியில் எந்தெந்தக் கலைஞர்களுக்கு இரசிகர்களின் வாக்குகள் அதிகமாகக் கிடைக்கின்றனவோ அவர்களே இரசிகர்களின் தீர்ப்புப்படி முதலிடங்களைப் பெறுவர். உங்கள் அபிமான கலைஞர்கள் உரிய இடம்பெற வழிவகுக்க உங்களுக்கு 1-4-64 வரை அவகாசமிருக்கிறது. உங்கள் தீர்ப்பை அளியுங்கள்.

வெளியூர் நாடகங்களுக்கான விபரங்கள் இவ்வாரம் இடம் பெறவில்லை. அடுத்த வாரம் வெளிவரும்.

**முடிவுத் திகதி 1-4-64.**

### நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்.................................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்.................................................

சிறந்த நடிகர் .................................................

சிறந்த நடிகை.................................................

சிறந்த நகைச்சுவையாளர்...................................

சிறந்த கதாசிரியர்..............................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)................................

சிறந்த தயாரிப்பாளர்...........................................

சிறந்த வெளியீட்டாளர்........................................

ஒப்பம்:.........................

முகவரி..................................

..................................

..................................



சினிமாஸ் திரைகளில் வெற்றிப் பவனி வந்து கொண்டிருக்கும் 'பார் மகளே பார்' படத்தின் மூலம் முத்துராமன் புகழ் வான் முட்ட உயர்ந்து விட்டது போலும்.

## குழந்தையில்லாத குறை- படத்தில் குறைநீங்க ஆசி-நிஜத்தில்

"ஐயோ! ஐயோ!...ஒரே பிரசவத்தில் நாலு குழந்தையா... ஐயைய்யோ..." என்று அலறினார் தங்கவேலு. தங்கவேலுவின் அவலக்குரலைக்கேட்ட எம் சரோஜா துள்ளிக்குதித்து ஓடிவந்தார். தீயை மிதித்தவன் போல் தங்கவேலு தாண்டவமாடினார்.

"பாத்தியா நமக்குப்பிறகு கலியாணம் பண்ணினவனுகளுக்கெல்லாம் குழந்தை பிறந்திடிச்சு நமக்கு ஒண்ணுமே பிறக்கலியே. இங்க பாத்தியா ஒருவனுக்கு ஒரே பிரசவத்தில் நாலு குழந்தை பிறந்திருக்குதாம். என்ன அநியாயம்," என்று தான்பத்திரிகையில் படித்த செய்தியை சரோஜாவிடம் காண்பித்தார்தங்கவேலு. அதற்கு சரோஜா "ஆமாம் நமக்கும் கலியாணம் ஆகி 11 வருசம் ஆகுது நமக்கு ஒரு குழந்தையும் பிறக்கல்லை. இதை நாலு பேர் கேட்டால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டியதுதான்," என்று கூறினார்.

"அடேயப்பா எனக்கு சாகும்போதும் கையில் நாக்கு வேண்டுமா?" என்று தங்கவேலு தமாஷாக ஒரு போடு போட்டார்.

தங்கவேலுவும் சரோஜாவும் நிஜவாழ்க்கையிலேயும் சோடிதான். தங்கவேலுவின் முதல் மனைவிக்கு ஒரு குழந்தை உண்டு ஆனால் சரோஜாவுக்குக் குழந்தையில்லை.

இலங்கை எழுத்தாளர் நவம் அண்மையில் சென்னை சென்றிருந்தபோது மேற்படி கட்டம் சாந்திபிலிம் சுக்காக கடப்பட்டுக்கொண்டிருந்ததாம். படப்பிடிப்பு முடிந்ததும் சரோஜா, திருமதி நவத்தின் கையில் இருந்த குழந்தையைவாங்கி முத்தமிட்டாராம். குழந்தைகளின்மேல் சரோஜாவுக்கிருந்த ஆசையைக் கண்ணுற்ற திரு. நவத்தின் தாயார், 'அடுத்தவருடமே இப்படி ஒருபயல் பிறப்பான்' என்று சரோஜாவை ஆசீர்வதித்தாராம்.

*

## நானா பார்த்தேன்? நானா ரசித்தேன்?

"நானா பார்த்தேன்? நானா ரசித்தேன்? நானா கண்வலை விரித்தேன்?" என்ற கேள்விக் குறியுடன் செளந்தரராசன் பாட, 'நீதான் பார்த்தாய் நீதான் சிரித்தாய், நெஞ்சைப் பூப்போல பறித்தாய்' என்று பதிலுக்குப்பாடினார் சுசீலா!

இப்பாட்டு நிச்சி கல்யாணியின் படத்துக்காக மெஜஸ்டிக் ஸ்டூடியோவில் பதிவு செய்யப்பட்டது.

வாலி எழுதிய இப்பாட்டுக்கு கே. வி. மகாதேவன் இசை அமைக்கிறார் எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, கிருஷ்ணகுமாரி, [illegible] பியார், நாகேஷ் மற்றும் [illegible] நடித்து வருகிறார்கள். [illegible] ஏ. [illegible] டைரக்ட் [illegible] மையாற்றுகிறார்

## நடந்த நாடகம்:- "அரிச்சந்திரா"

தென் கருணை சந்திரா கலாமன்றத்தனரின் முதல் தயாரிப்பான 'அரிச்சந்திரா' 14-2-64ல் அரங்கேற்றப்பட்டது. இம் மன்றச் செயலாளரான சி. செல்வன் அரிச்சந்திரனாக நடித்தார். மாணிக்கம், சிவபாதம், ஆகியோர் முக்கிய பாகமேற்று நடித்தார்கள் இந் நாடகத்தை இயற்றியவர் 'சங்கீத பூஷணம' ச. கந்தையா. இவர்களது இரண்டாவது தயாரிப்பான 'அரிச்சந்திரா மயான காண்டம்' பங்குனி மாதம் 25ம் திகதி அரங்கேற்றப்படும்.

### ஹஜ் பெருநாளன்று கலைவிழா

முஸ்லிம் மக்களின் ஹஜ்ஜிப் பெருநாளை முன்னிட்டு அன்று மாலை விவேகானந்த மண்டபத்தில் பிரபல நாடக நடிகர் ஏ. கிதார் அவர்களின் சகோதரர் ஏ. நெய்னாவின் தயாரிப்பில் கலை நிகழ்ச்சியொன்று நடைபெறுகின்றது.

இதில் எம். எம். முக்த்தார், எச் முஸ்தபா, குழுவினரின்--சிலம்பம், வாள், கத்தி, சீனடி ஆகிய வீரவிளையாட்டுகளும், ஏ. நெய்னா அவர்களால் எழுதப்பட்ட 'முத்து என் சொத்து' 'பெற்ற பாசம்' ஆகிய இரு நாடகங்களும், இசை, நடனம், முதலியனவும் இடம்பெறும். இரு நாடகங்களிலும், பி. எம். சேகர், எம். ஏ. லத்தீப், ஏ. நெய்னா, எம். சர்த்தார், குமாரிகள் மணிமேகலை, மல்லிகா ஆகியோர் நடிக்கின்றார்கள்.

பேபி மல்லிகா நடனமாடுகிறார் ஏ நெய்னா எழுதிய இரு நாடகங்களுக்கும் இசையமைப்பதோடு பயிற்சிப் பொறுப்பையும் நடிகவேள் லடிஸ் வீரமணி அவர்கள் ஏற்றுள்ளார்கள்.

## பைத்தியத்துக்கு ஒரு விளக்கம் சிவாஜி தருகிறார்

இளமையும் அழகும்வாய்ந்த ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு ஒருபொலீஸ்காரர் உள் நுழைந்து விட்டார். 'டாக்டர் சார் இவளைக் கொஞ்சம் பாருங்கள். இவளுடன் நாங்க பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல நீங்கள் எப்படித்தான் சமாளிக்கப்போகின்றீர்களோ?' என்று பொலீஸ் காரர் கூறிமுடிக்கிறார்.

அமைதியே உருவான டாக்டர் பதிலளிக்கிறார்:—

'புத்திசுவாதீனமில்லாதவங்களோட பழகிறதுக்கு ரொம்பபொறுமை வேணும். அதைவிட கருணை அவசியம். ஒரு சமயம் ரொம்ப சந்தோஷமா பேசுவாங்க திடீண்னு ஆத்திரத்தோட எல்லாரையும் [illegible] சிலர் சிந்தனையிலே காலத்தை ஓட்டுவாங்க [illegible] த்தனை [illegible] ஒருத்தரை ஒருத் [illegible] உங்க சட்டப்படி அது குற்றமா மதிக்கப்பட [illegible] சாரியத்தை [illegible] செய் [illegible] குழந்தை கள் [illegible] குற்றமா நினைச்சு [illegible] வெளி [illegible] இருக்கிறவங்க [illegible] நோக்கிவாழ் [illegible] இருக்கிறவங்க [illegible] இலேயே நிக்கிறாங்க. உங்க உலகத்துக்கும், எங்க உலகத்துக்கும் இதுதான் வித்தியாசம்,



இந்தக்காட்சி ஸ்ரீ விஜயலட்சுமி பிக்சர்ஸாரின் 'நவராத்திரி'க்காக பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. நவரசங்களில் கருணை என்ற ரசத்தில் டாக்டராக சிவாஜி நடித்தார். பைத்தியக்காரப் பெண்ணாக சாவித்திரியும், பொலீஸ் காரனாக கரிக்கோல் ராஜுவும் நடித்தார்கள்.

ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றியும், உள்ளமையை அறிவதற்கு அறிவு விவேகம் மாத்திரமன்றி உணர்வும் ஒரு கருவிதான். விஞ்ஞான ஆராய்ச்சிக் கண் கொண்டு உணர்ச்சி வசப்படாது உலகத்தைக் காண்பவன் சட உலகத்தையே காண்கிறான். ஒரு பௌதிக சாஸ்த்திரி மின்சாரத்தைப் பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் ஆராயும் போது, இரக்கங்கொள்வதோ, கோபங் கொள்வதோ வேதனைப்படுவதோ அவன் ஆராய்வுக்கு ஒரு போதும் உதவி புரியாது—பிரச்சினையையும் தீர்க்காது.

அவ்வாறே, புத்தம் புதுத் தம்பதிகள் ஒவ்வொரு உடலிலும் எத்தனை பங்கு சுண்ணகம் இருக்கிறது. எத்தனை பங்கு மாப் பொருள் இருக்கின்றது என்று ஆராய்ந்தால் மண வாழ்விற்கு இன்றியமையாத அன்பு, இன்பம் ஆதியவற்றைப் பெற முடியாது. ஆராய்வும், உணர்வும் மனிதன் அறிவைப் பெறும் இரு கண்கள். அவற்றில் ஒன்றை மாத்திரம் கொண்டு உலகத்தின் முழு உண்மையையும் காண முடியாது. அப்படிப் பார்ப்பவன் பூரண மனிதனுமாகான். அதனாலேயே, ஔவைப் பிராட்டியார் எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார். இங்கே எண்ணென்பது கணிதத்தையும், எழுத்தென்பது இலக்கியத்தையும் குறிக்கும்.

## வேறுபாடு

விவேகத்தையும், அறிவையும் ஆராய்வு முறைகளாற் பண்படுத்துவதுபோல, ஒருவனின் உணர்ச்சிகளையும் பண்படுத்த வேண்டும். பெற்ற பிள்ளை திடீரென்று இறந்து போகக் கண்ணீர் விடாத தாயையும், அந்தியின் செம்மையில் மனத்தைப் பறிகொடுக்காதவனையும், குழவியின் மழலைக்குக் கரையாதனையும் மனிதவினத்தின் ஒரு வேறுபாடு என்று தான் நாம் கொள்வோம். அது போலவே, அற்ப காரியங்களுக்கும் உணர்ச்சி வசப்படுவர்களும் மனிதவினத்தின் வேறுபாடே.

உணர்ச்சிப் பண்பாடு இலக்கியத்தின் ஜீவநாடி. அதின்றி இலக்கியம் வெறும் சடப் பொருளாய் விடும். கணித வாய்ப்பாடுகள் உண்மைகள். ஆனால் அவற்றிற்கு மனிதனில் உணர்ச்சியூட்டும் தன்மை கிடையாது. மனிதனில் உணர்ச்சியையூட்டுவதால் இலக்கியம் உயிர் பெறுகிறது. இதுவே இலக்கியத்திற்கும் ஏனையவற்றிற்கும் உள்ள பேதம். கலைக்கும் கணிதத்துக்குமுள்ள பேதம்.

## உண்மையும் உணர்ச்சியும் வேண்டும்

ஆகவே இலக்கியத்தில் உண்மை இருக்க வேண்டும்; உணர்ச்சி யூட்டும் உயிர்த் தன்மை இருக்க வேண்டும்.

இவ்வுணர்ச்சிகள் பல வேனும் அவற்றை எண் பெரும் பிரிவாகத் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.

"நகையே யழுகை, இளிவால் மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி உவகை"

என்பன அவை. ஒரு நாடகத்திலோ, காவியத்திலோ, கவியிலோ, நாவலிலோ, சிறுகதையிலோ என்ன உண்மை பொதிந்திருக்கின்றது என்ன சுவையை எழுப்புகின்றது என்பவை மிக முக்கியமானவை.

---

# (10) செல்வி கிருஷ்ணகுமாரி



பத்து வயதுச் சிறுமி ஒருத்தி மேடையில் எவ்விதமான கூச்சமுமின்றித் துடிப்பாக வசனம் பேசி சபையோரைக் கொள்ளை கொண்டு விட்டாள். அவளுடைய அன்றைய தோற்றத்தையும், அங்க அசைவுகளையும், அபிநயம் காட்டும் கலை பொருந்திய முகத்தையும் கண்ட இரசிகர்கள் வருங் காலத்தில் ஒரு சிறந்த நடிகையாக வேண்டிய சர்வ லட்சணங்களும் பொருந்தியவள் என்று ஆருடம் கணித்து விட்டார்கள்.

'நூதன லஞ்சம்' என்ற இஸ்லாமிய நாடகத்தில் சிறுமியாகத் தோன்றி 'மரணப் பரிசு' மூலம் புகழேணியில் தாவி ஏறி விட்ட குமாரி கிருஷ்ண குமாரி, கொள்ளுப்பிட்டி சென்ற். அந்தனிஸ் பாடசாலையில் எஸ். எஸ். சி. வரை படித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய அறிவு பெற்ற இவர் சில சிங்களப் படங்களிலும் தோன்றி வருகிறார்.

வானொலி அறிவிப்பாளர் ஜனாப் எம். ஏ. கபூர் தான் முதன் முதலாகக் கிருஷ்ண குமாரியை மேடை ஏற்றியவர். வானொலி நாடகங்களிலும் நடித்து வருகின்றார். நாடகத்தில் எப்பாகத்தைக் கொடுத்தாலும் சிறப்பாக நடிக்கும் பண்புள்ளவர். ஓரளவு நடனமும் கற்றுக் கொண்டு, இயல்பாகப் பாடவும் தெரிந்து கொண்டிருக்கும் இவரை நடிப்புக் கலை பிடித்துக் கொண்டு விட்டது.

இலங்கை நடிகர்கள் பென் மேலும் முயன்று முன்னுக்கு வரவேண்டுமென்று கூறும் இவர், தானே நாடகங்களையும்

**அறிமுகப்படுத்துகிறோம்**

எழுத முயன்று வருகிறார். 'உரிமை இழந்தவள்', 'தங்கத் தாய்' ஆகிய நாடகங்களில் இப்பொழுது நடித்து வருகிறார்.

★

# (11) செல்வி வி. கமலலோஜனி



தமிழகத்தில் பிரசித்தி பெற்ற இசைத் துறை ஆசான் பாப்பா வெங்கட்ராமையாவின் சிஷ்யையான திருமதி வி. ரங்கநாயகி அம்மை, திருமதி எஸ். லலிதா ஆகியோரிடம் வாய்ப்பாட்டும் வயலினும் முறைப்படி கற்றுத்தேறியவர் செல்வி வி. கமலலோஜினி. எட்டு வயதுச் சிறுமியாகவிருந்த போதே இசைக் கலையில் ஆர்வம் காட்ட ஆரம்பித்த இவருக்குத் தமிழகம் சென்று அத்துறையில் பயிற்சி பெறவும் சங்கீத ஆசிரியைப் பரீட்சையில் சித்தி பெறவும் முடிந்தது.

இனிமையான சாரீர அமைவுடன் கூடவே இனிய சுபாவமுமுடைய கமலலோஜினியிடம் இப்பொழுது பல மாணவர்கள் வாய்ப்பாட்டும், வயலினும் கற்று வருகிறார்கள். அண்மையில் 'அரங்கு' அளித்த 'மேகலை' நாடகத்தில் பின்னணிக் குரலளித்த இவரை எவரும் மறந்து விட முடியாது.

இலங்கை இசை அமைப்பாளர் திரு ஆர். முத்துசாமி மூலம் இவர் திரைப் படங்களுக்கும் பின்னணி பாட ஒப்பந்தமாக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

இலங்கையில் தலைசிறந்த கலைஞர்கள் பலர் இருந்தும், வளர்ச்சி பெறுமல் நசுங்கி விடுகின்றனரே என்று மனம் வருந்தும் இவ்விளம் கலைஞர், வசதி படைத்தோர் கலை வளர, கலைஞர் முன்னேற உதவி புரிய வேண்டும் என்றும் கோருகிறார்.

இலங்கையில் தமிழ்க் கலைகள் வளர எல்லாக் கலைஞர்களும் திரிகரண சுத்தியுடன் பாடுபட வேண்டுமென்று ஆசைப் படுகிறார்.

---

# மக்கள் குரல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய கொடுமைகளுக்கு ஒரு முடிவு காண பல வழிகளில் நாம் போராடவேண்டுமென்றாலும் அரசியல் கலப்பற்ற ஒரு சுலபமான அதே நேரத்தில் சிறந்த வழியும் உண்டு. அது தான் எல்லாம் தமிழியக்கம்.

தமிழ் பேசும் இனம் தங்கள் தொடர்புகளை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தனித் தமிழில் வைத்துக் கொள்வதென்று வைராக்கிய விரதம் பூண்டால், தங்கள் உள்ளங்களை பாராளுமன்றம் எனக் கருதிக் கொண்டு, அங்கே தனித் தமிழ் சட்டத்தை ஒரு மனதாக நிறை வேற்றி அதைப் பூரணமாக அமுல் செய்துகொண்டால், தனிச் சிங்களச் சட்டத்தின் கூர்மையை நிச்சயமாக மழுங்கச் செய்யலாம்.

இதையேதான் தமிழ் தலைவர்கள், தமிழ் ஏடுகள் பன்னிப் பன்னிச் சொல்லி வருகின்றன.

இருந்தும் தமிழியக்கம் பூரணத்துவம் அடையவில்லை.

ஒரேயொரு உதாரணம். கொழும்பில் உள்ள ஒரு திணைக்களத்தில் தமிழில் வரும் கடிதங்களை மொழி பெயர்க்க ஒரு எழுது வினைஞர் 1-10-63 தொடக்கம் நியமனம் பெற்றார். ஆனால் அந்தத் திணைக்களத்துக்கு நான்கு முழுத் திங்கள் வந்து சேர்ந்த தமிழ்க்கடிதங்களின் எண்ணிக்கை, எண்ணி இரண்டே இரண்டு! இப்போது அந்த எழுது வினைஞரின் சேவை தேவையற்றது என்று சொல்லி, அவர் வெளியூருக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டார். பல திணைக்களங்களில் இதே கதைதான்.

இனிமேலாவது தமிழினம் தமிழ்ப் பற்றுக் கொண்டு விழித்தெழல் வேண்டும்.

—க. ஞானசேகரம்,
கொழும்பு.

குறிப்பு:

தமிழ் பேசும் மக்கள் தங்கள் கருமங்களைத் தமிழில் செய்வதற்குத் தயங்குகிறார்கள் என்று பல அரசாங்க ஊழியர்கள் தினே தினே குறை கூறி வருகிறார்கள். குறிப்பாக தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள வைத்தியர்கள் வைத்திய விடுமுறை அத்தாட்சிப் பத்திரங்களை ஆங்கிலத்தில் வழங்குகிறார்களாம். சில உள்ளூர் வைத்தியர் தமிழில் எழுதிக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்களாம. இந்நிலை மாற வேண்டும். இதற்குத் தமிழ் உணர்ச்சி உள்ளவர்கள் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் தமிழுணர்ச்சியைப் பரப்ப ஆவன செய்ய வேண்டும்.

—ஆசிரியர்

---

## கனக-செந்திநாதனுக்கு..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுடைய நூலில், முஸ்லிம் எழுத்தாளர்களுக்கென்றே ஒரு தனிப்பகுதியை எழுதி, முதிய முஸ்லிம் எழுத்தாளர்களையும், இளம் எழுத்தாளர்களையும், கவிஞர்கள், கட்டுரையாசிரியர்கள், நாடகாசிரியர்கள், விமர்சகர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று மிகவும் நுணுக்கமாகப் பிரித்து, அவர்களது ஆக்கங்களையெல்லாம் இலக்கிய உலகத்திற்கு அறிமுகம் செய்து பெருமைப் படுத்திய தங்களுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

---

# தபால் சேவை தாமதங்கள்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் இடையில் நடைபெறும் தபால் சேவை ஒரு நாளைக்கு ஒரு முறைதான நடைபெறுகிறது. வேறு பல பகுதிகளுக்கு இரு முறைகள் நடைபெறுகின்ற போது தமிழ்ப் பிரதேசங்களுக்கு இத்தகைய பாரபட்ச மேனோ தெரியவில்லை என்று ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் முறையிட்டார்.

யாழ்ப்பாணம்— கொழும்பு இரு இடங்களுக்குமிடையில் விமானத் தபால் சேவை நடைபெறுகிறது. இதற்காக மேலதிகமான கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. உள்நாட்டுத் தபால் வினியோகத்தில் விமானத் தபாலுக்கு மேலதிகக் கட்டணம் வசூலிப்பது வேறு எந்த நாட்டிலும் நிலவுவதாகத் தெரியவில்லை.

அண்டை நாடான இந்தியாவிலும் முக்கிய நகரங்களுக்கிடையில் தபால் பட்டுவாடா விமானத் துணையுடன்தான் நடைபெற்று வருகிறது. ஆனால் இதற்காக மேலதிகக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. சென்னையிலிருந்து டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய தொலைவு நகரங்களுக்கு அனுப்பப்படும் சாதாரண தபால்கள் மேலதிகக் கட்டணம் எதுவுமின்றி 24 மணி நேரத்துள் விநியோகிக்கப் படுகின்றன.

மிகச் சின்னஞ் சிறு தீவான இலங்கையின் தபால் 'ரொக்கட்' வேக காலத்திலும் மிகவும் மந்தமடைந்திருப்பது துர்திர்ஷ்டமாகும் என்றவாறு ஒரு அரசியல் பிரமுகர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலைபோன்ற தமிழ்ப் பிரதேசங்களுக்கு இரண்டாவது முறை தபால்கள் வினியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் தபால், தகவல் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

---

# இலங்கை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் யாழ்ப்பாணத்தில் வீரப் போர் நடாத்திய இந்த மகாசூரர் அடுத்த வினாடி அடங்கி விட்டாராம். சத்தியாக்கிரகிகளுடன் போரிட்டவர் மூன்று துப்பாக்கிகளுக்கு எதிரே என்ன செய்வார்? உடனே பின் வாங்கி விட்டாராம்.

தூதுவராலயத்தோர் வந்த பின் பெரிய பரிசோதனை நடந்ததாம். பரிசோதனையின் போது சத்தியாக்கிரகத்தில் சட்டை கிழிந்த மற்றொரு பெரிய புள்ளியும் நின்றதாக அவ்வீரன் கூறினான்.

அது மட்டுமா? இந்திய விமானங்கள் ஒருபுறம்; மறுபுறம் சிங்கப்பூர் பிரதமர் லி டுவான் யு வும் புதன்கிழமை இலங்கைக்கு வர முயன்றார். பின்னர் அரசாங்கம் அதை நிறுத்தியதாம். இவையெல்லாம் திட்டமிட்டு நடந்தனவா — இலங்கையைக் கைப்பற்ற இந்தியாவும் மலேசியாவும் இட்ட திட்டமா என்று பல முக்கிய பிரமுகர்கள் தங்கள் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கின்றனர் என்றும் இந்தச் சிங்கள இராணுவ வீரன் மேலும் தெரிவித்தான்.

---

# தோட்டப்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. முருகையாவும் மற்றும் பலரும் பேசினார்கள்.

கீழ்க் காண்போர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ரா. ராஜூ, உப தலைவர்: திரு. என். கிட்னன், காரியதரிசி: திரு. எஸ். பிச்சை, உப காரியதரிசி: திரு. சுப்பையா, பொருளாளர்: திரு. எஸ். சிவனடியான.

### கமிட்டி அங்கத்தினர்கள்

திருவாளர்கள்: கே. அம்மாசி, ஜெபமாலை, வி. அம்மாசி, கனகசபை, கோவிந்தராசு, கந்தையா.

### தொண்டர்கள்

தலைவர்: திரு. பழனிசாமி, திருவாளர்கள்: எஸ். பெருமாள், மாரிமுத்து, முத்துக் கருப்பன், ராஜூ, கருப்பையா, கந்தையா. வ. பெருமாள், எஸ். நடராசு.

---

## தேனமுத இலக்கிய மன்றம

சமீபத்தில் நடைபெற்ற தேனமுத இலக்கிய மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. தியிலை மகாலிங்கம், உப தலைவர்: திரு. ந. கா. அருள்ராசா, இணைச் செயலாளர்கள்: திரு. செ. இராஜேந்திரன், திரு. க. சித்திரவேல், பொருளாளர்: திரு தி. சக்திதாசன் இவர்கள் உட்பட பதின்மரைக் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் தொடர்கதை:

## மந்திரக் கண்ணாடி

'சுதந்திரன்'

(7)

பாலு கறுப்பு உருவத்தை யானையென்றே நினைத்தான். உண்மையில் அது யானையல்ல—ஒரு சிறிய பாறையே யானை உருவத்தில் காட்சியளித்தது. பாலு மின் விளக்கின் (டார்ச் லைட்) சுவிட்சைத் தட்டி, அதன் ஒளியின் உதவியால் பாறையருகே சென்று, பாறையிலிருந்த பொந்தின் வழியாக உள்ளே சென்றான்.

பாலு பாறையினுள்ளே போவதை மரத்திலிருந்தவாறே பார்த்தான் ராமு. மிருகங்கள் வசிக்கும் குகையினுள்ளேதான் பாலு செல்கின்றான், என நினைத்து ஏங்கினான் ராமு.

பாறையினுள் நுழைந்த பாலு, அங்கிருந்த கதவைத் தன்னாலியன்றமட்டும் தள்ளிப் பார்த்தான். வெகு காலத்திற்கு முன்பு பூட்டப்பட்ட அக்கதவை அவனால் திறக்க முடியவில்லை. வெளியில் வந்து ராமுவைக்கூட்டிக் கொண்டு சென்று, கதவைத் தள்ளினான். கதவு அசைந்து கொடுக்கவில்லை.

பாலு, ராமுவிடம் கைத்துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு, மின் விளக்கின் உதவியால் பாறையின் முழுப் பகுதிகளையும் பார்வையிட்டான்.

பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த ராமுவின் கைகளிலிருந்த துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு இவர்களால் திறக்க முடியாத கதவின் பூட்டை உடைத்தது.

பாலு கதவை அசைத்ததும் அது தானாகவே திறந்து கொண்டது.

ராமுவை வெளியே நிறுத்திவிட்டு, மின் விளக்கினால் ஒளி பரப்பிக் கொண்டு, கதவைத் திறந்து உள்ளே சென்றான் பாலு. அவன் உள்ளே சென்றதும் ராமுவும், மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து பாலுவைப் பின் தொடர்ந்தான்.

(8)

பாலுவும் ராமுவும் சென்ற இடம் ஒரு பயங்கரக் குகை போலக் காட்சியளித்தது. அக் குகையினுள் பல பழைய அலுமாரிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அலுமாரிகளை ராமுவும் பாலுவும் திறந்து பார்த்தார்கள். அவை வெறும் அலுமாரிகளாகவே காட்சியளித்தன.

குகையின் ஒரு பகுதியில் ஒரு சிறிய பொந்து காணப்பட்டது. அப் பொந்தை ராமுவும் பாலுவும் பார்த்தார்கள். அவர்களால் அதை நம்பவே முடியவில்லை. காரணம் இரு விலை மதிப்பற்ற முத்துக்கள் கண்ணைப் பறிக்கும் வண்ணம் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

ராமுவும் பாலுவும் ஆளுக்கொவ்வொரு முத்தாக எடுத்து அவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

அந்தக் குகையின் மறு பக்கத்தில் இன்னொரு கதவு காணப்பட்டது. அக் கதவை ராமு வெகு சுலபமாகத் திறந்தான். பல படிக்கட்டுக்கள் கதவுக்கு வெளியால் காணப்பட்டன.

"உடுப்பிட்டிக்குச் செல்லும் சுருங்கை", என்று அப் படிக் கட்டொன்றில் எழுதப்பட்டிருந்தது. மந்திரக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வந்து, சுரங்கப் பாதை வழியாகவே உடுப்பிட்டிக்குச் செல்லலாம் என ராமுவும் பாலுவும் யோசித்தனர்.

அவர்களிருவரும் குகையிலேயே வியாழக்கிழமை இரவைக் கழித்தார்கள்.

—(தொடரும்)

## பொன் மொழிகள்

பழங்கால இரும்பில் துருப்பிடிக்கும். தேங்கிய தண்ணீர் அசுத்தமடையும். அதே போல சோம்பலால் உள்ளத்தின் விறுவிறுப்பு மறைந்துவிடும்.

கடமைகளைச் செய்வதிலிருந்து தான் உரிமைகள் பிறக்கின்றன. எனவே உன் கடமைகளைச் சரிவரச் செய். உரிமைகள் கட்டாயம் கிட்டும்.

உறுதியாக இரு. நல்லவனாக இரு. தூய்மையான உள்ளம் உடையவனாக இரு. நேர்மை கட்டாயம் நிலைக்கும்.

பொருள் மூலதனத்திலும் பார்க்க தொழிலாற்றல் என்னும் மூலதனமே சிறந்தது. எனவே தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்து தன்னம்பிக்கையுடன் உன் கருமத்தை ஆற்று.

நீ ஒரு அபாயத்தில் சிக்கி உனக்குச் சிறிது காயமேற்பட்டால் நீ சாகாது தப்பி விட்டேன் என்று சந்தோஷப்படு. அப்பொழுது தான் உன் மனம் அமைதியடையும்.

ஒரு நாடு முன்னேற ஒரு தனி மனிதன் முன்னேற வேண்டும். காரணம் தனி மனிதன் முன்னேறினால் சூழல் முன்னேறும். சூழல் முன்னேறினால் சமூகம் முன்னேறும். சமூகம் முன்னேறினால் இனம் முன்னேறும். ஒரு இனம் முன்னேறினால் பல இனமும் முன்னேற முடியும். பல இனங்களும் முன்னேறிநாற் தான் ஒரு நாடு முன்னேற முடியும்.

இன்பமான வாழ்க்கைக்கு அன்புதான் அடிப்படை. அன்பும் இன்பமும் உடையவர்களாக வாழ, ஆண்டவனை வழிபட வேண்டும்.

தொகுத்தவர்:
மு. சுவாமிநாதன்

நகைச்சுவைக் கட்டுரை:

## இப்படியும் பெயர்கள் உண்டா?

-தெளிவத்தை சேவியர்-

ஒரு ஊரில் கணவனும் மனைவியும் இருந்தனர். கணவன் பெயர் வாழைப்பழம், மனைவியின் பெயர் இடியப்பம் இவர்கள் ஒரு நாயையும் ஒரு பசுவையும் வளர்த்து வந்தனர். நாயின் பெயர் குடுமி பசுவின் பெயர் விருந்தாளி. இப்படி இருக்க ஒரு நாள்....

திருவாளர் வாழைப்பழம், வீட்டில் இருந்து சிறிது தூரத்துக்கப்பால் நின்று கொண்டிருந்தார். அப்போது ஒரு பிச்சைக்காரன் அவரிடம் வந்து 'ஐயா! பசிக்கிறது...!' என்றான். அவர் உடனே தனது வீட்டைக் காண்பித்து 'வீட்டில் இடியப்பம் இருக்கிறது. போய் வாங்கிச் சாப்பிடு' என்றார். பிச்சைக்காரனுக்கு ஒரே சந்தோஷம், இடியப்பம் என்ற சொல்லைக் கேட்டதும். அது அவர் மனைவியின் பெயர் என்பது அவனுக்குத் தெரியுமா? அவன் வீட்டை அடைந்து 'அம்மா பசிக்கிறது. சாப்பிட ஏதாவது!...' என்றான். 'கொஞ்சம் இரு' வாழைப்பழம் வரட்டும். என்றாள். பிச்சைக்காரனுடைய சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. வாழைப் பழமும் இடியப்பமும்; நாக்கை வாய் வட்டத்தில் ஓட்டிக் கொண்டான். வாழைப்பழம் என்பது அவள் கணவர் பெயர் என்பது அவனுக்குத் தெரியாது.

சிறிது நேரத்தின் பின் திருவாளர் வாழைப்பழம் வீட்டுக்கு வந்தார். அவர் வரும்போது அவர் வளர்த்த பசு வீட்டுத் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. 'ஏன் இன்னும் விருந்தாளியைப் பிடித்துக் கட்டவில்லை' என்று கோபத்துடன் கேட்டார். இது பிச்சைக்காரன் காதில் விழுந்தது. 'இங்கு விருந்தாளியாக வந்திருப்பது நாம் தானே! நம்மை தான் பிடித்துக் கட்டச் சொல்கிறார்' என்று எண்ணி மெதுவாக வெளியே வந்து ஓட்டம் பிடித்தான். அவன் ஓடுவதைக் கண்டு நாய் அவனைத் துரத்தியது. இதைக் கண்ட வாழைப்பழம் 'குடுமியைப் பிடி; குடுமியைப் பிடி' என்று கத்தினார். தன் குடுமியைத்தான் பிடிக்கச் சொல்கிறார் என்று நினைத்த பிச்சைக்காரன் தன் குடுமியையும் ஒரு கையால் பிடித்துக் கொண்டு வாயு வேகமாக ஓடி மறைந்தான்.

## அன்னை நீயே என் தெய்வம்

—வே. கிருஷ்ணபிள்ளை, மட்டக்களப்பு—

அம்மா என்னைப் பெற்றாயே!
அன்புடன் என்னை
அழைப்பாயே!
அள்ளி முத்தம் தருவாயே!
தின்னப் பட்சணம் தருவாயே!
தின்றதும் மகிழ்ச்சி
யடைவாயே!
தினமும் என்னைக்கடிவாயே!
அன்னை நீயேஎன் தெய்வம்!

விசேடக் கட்டுரை

## வாழ்க்கைக்கு வழிகாட்டிய வள்ளுவப் பெருந்தகை

—க. சிவகாருண்யம்—

வாழ்க்கைக் கலையை உணர்த்திய பெரும் புலவர் திருவள்ளுவரேயாகும். இவருடைய திருக்குறள் என்னும் செந்தமிழ் நூல் அமிழ்தினும் இனியது. வள்ளுவர் தம் முள்ளத்திலிருந்த இனிய கருத்துக்களை எல்லாம் குறளில் வடித்தார். இவருடைய கருத்துக்களால் மக்கள் வாழ்வை மாண்புடையதாக்கினார். எனவே பாரதம் தந்த உத்தமக் கவிஞர் பாரதியாரும் "வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று இனிமையாகக் கவிதை புனைந்திருக்கின்றார்.

இவர் தமது இனிய கருத்துக்களை குறள் மூலம் பிழைகள் இல்லாமல் மரபு வழி நின்று நற்றமிழுடன் இயற்றியுள்ளார். இவருடைய கருத்துக்களைக்கண்ட பெரியோர்கள் நீதி தவறாமல் வாழ்கின்றனர். இவர் உயர்ந்த கருத்துக்களை உணர்த்துவதில் இறைவனுக்கு ஒப்பானவர். வள்ளுவர் கூறும் பண்புகளில் மிகச் சிறந்தது அன்பு. தன்னலத்தை அகற்றிப் பிறரும் வாழ வேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்குவதே அன்பு. எனவே வள்ளுவர் அன்பை ஆழ்ந்து அளந்தார். அடுத்ததாக வள்ளுவர் கூறுவது கல்வி. கல்வியைப் போன்ற ஓர் செல்வம் இவ்வுலகில் இல்லை; இது கற்றோரும் மற்றோரும் கண்டறிந்த உண்மையே.

வள்ளுவர் குறள், படிப்பவர் மனதில் உணர்ச்சியையும் ஆழ்ந்த அறிவையும் கொடுக்கின்றது. வள்ளுவர் மக்கட்பேறு பற்றிக் குறிப்பிடும் போது மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். மக்கள் இவ்வுலகில் எத்தனையோ இசைகளைக் கேட்கின்றனர். நுகருகின்றனர். இது நல்லது அது கூடாது என்று சொல்வதன் காரணம் தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டு அதனை நுகராததேயாகும். எனவே வள்ளுவர்........

குழல் இனிது யாழ் இனிது
என்ப தம் மக்கள்
மழலைச் சொல்
கேளாதவர்.

என்று கூறுகின்றார். இவ்வுலகில் வள்ளுவப் பெருந்தகை தோன்றியது வாழ்க்கைக்கு வழிகாட்டவே. வள்ளுவரின் திருக்குறளைப் படித்தால் தெரியும் வள்ளுவரின் நுண்ணிய அறிவு. குறிப்பாகக் கூறுமிடத்து வள்ளுவர் தற்போது மக்களிடையே ஒரு தெய்வமாக விளங்குகின்றார்.

எனவே தேனொழுகும் இனிய கருத்துக்களை வெளியிடுவதில் வள்ளுவரைப் போல் ஒருவருமில்லை. வள்ளுவருடைய திருக்குறளில் எத்தனையோ உவமைகள் இருக்கின்றன. வள்ளுவர் கூறிய உவமைகளில் ஒன்றை எடுத்து ஆராய்வோம். இனியவை கூறல் என்னும் பகுதியில் இனிய சொற்கள் இருக்கக் கடுமையான சொற்களைப் பாவிப்பதை வள்ளுவர் கனி இருக்கக் காய் கவர்ந்தற்று என்பதற்கு உவமையாகக் கூறுகின்றார்.

வள்ளுவர் கற்பனை அளவு கடந்தது. வள்ளுவர் ஓர் அறிவுக் கடவுள்; அன்புத் தெய்வம். வள்ளுவர் கடவுளிடத்தில் நீங்காத பக்தியுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் விளங்கினார். இவருடைய குறளில் குறுகிய சொற்களும் நீண்ட கருத்துக்களும் இடம் பெற்று இருக்கின்றன.

அன்பும் அறனும் வள்ளுவர் காட்டும் அரும் பெருஞ் செல்வங்கள். எனவே இப் பெரியார் கூறிய செவ்விய வார்த்தைகளையே நாமும் சிந்தை தனில் கொண்டு வாழ்வைச் சிறப்படையச் செய்வோமாக!

## சின்ன வயதில் [7]

விடிந்ததும் பாடசாலை சென்று அங்கே உட்கார்ந்து படிப்பதென்பது வேம்பாகக் கசந்தது. இவ்வளவு பாடங்களையும் ஏன் கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டும்? என்று தோன்றியது அப் பையனுக்கு. உடனே பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டு தந்தை நடத்தி வந்த இரும்புப் பட்டறையில் வேலை செய்யத் தொடங்கினான். தந்தையின் கடை என்பதால் அவன் செய்த வேலைக்குச் சம்பளம் கிடைக்கவில்லை. ஆகவே வேறு ஒரு கடையில் சேர்ந்தான். அங்கே அவன் பட்ட கஷ்டம்——வேலையின் பளு—அப்பப்பா! எவ்வளவு கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

இப்படிச் சிறு வயதிலே கஷ்டப்பட்டு, இரும்புப் பட்டறையில் வேலை செய்து பழக்கப்பட்ட அப்பையன் தான் இன்று யூகோஸ்லோவியா ஜனாதிபதியாக விளங்கும் மார்ஷல் டிட்டோவாக விளங்குகிறான்.

— ராஜா ஆனந்தம், மண்டூர்.

## வண்ணாத்தி

—"இளங்கோன்"—

வண்ணாத்தி உந்தன்
வடிவான சிறகினிலே
வண்ண நிறச்சித்திரத்தை
வரைந்தவன் யாரோ?

கதிரவனைக் கண்டு
கட்டவிழ்ந்த பூக்களையே
முற்றாய் முகர்வதுமேன்
முழுதும் பருகுவதேன்!

அன்பின் பிணைப்பால்
ஆனந்தங் கொண்டேன்
சின்னழகுக் கைகளிலே
இருப்பதற்கும் வெட்கமோ?

சோம்பலில்லா உன்னை
சொகுசாய் வளர்த்திடுவேன்
பூம்பொழில் தந்திடுவேன்
பூரிப்படைந் திடுவாய்!

## விகடத் துணுக்கு

எஜமானி: ஏய் வேலைக்காரி! என்ன சத்தம் பலமாகக் கேட்டதே! சத்தம் இடாமல் வேலை செய்ய முடியாதா?

வேலைக்காரி: அம்மா நீங்களும் ஒரு பானையை உடைத்துப் பாருங்களேன், சத்தம் வருகிறதா இல்லையா பார்க்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

# மொழிவழித் தொழிற் சங்கம் உருவான வரலாறு

## வாழைச்சேனை தாளாலைக் கூட்டரவில் திரு. கோடீசுவரன் விளக்கம்

முற்போக்கு வாதம் பேசக் கூடிய சகல தொழிற் சங்கங்களும் 56ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வகுப்பு வாதச் சட்டமாகிய சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே தான் தமிழ் பேசும் ஊழியர்களாகிய நாம் மொழிவழித் தொழிச் சங்கம் நிறுவினோம்.

இவ்வாறு திங்கட்கிழமை மாலை வாழைச்சேனை தாள் ஆலைக் கூட்டரவுத் தொழிலாளர்கள் கூட்டமொன்றில் உரையாற்றிய திரு. செ. கோடீசுவரன் பி.ஏ., தலைவர் அ. எ. வி. சங்கம் குறிப்பிட்டார்.

வாழைச்சேனை தாள் ஆலைக் கூட்டரவைச் சேர்ந்த பல தொழிலாளர்களின் அழைப்பின் பேரில் திரு. கோடீசுவரனும், 'எழுச்சி' ஆசிரியர் திரு.வே.தங்கவேல் அவர்களும் அங்கு வருகை தந்திருந்தார்கள்.

திரு. கோடீசுவரன் மேலும் கூறியதாவது:

'1956-ல் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் தமிழ் ஊழியர்களது உரிமைகள் அனைத்தையும் பறித்து, அவர்களை அரசாங்க சேவையிலிருந்து வெளியேற்றுவதற்கு இந்த நாட்டு வகுப்புவாத அரசாங்கத்தால் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இதே வகுப்புவாத சட்டத்தைத்தான் இந்த நாட்டிலுள்ள சகல முற்போக்குச் சங்கங்களும் குறிப்பாக நாங்கள் அன்று அங்கம் வகித்த அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், சமசமாஜிக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஒரு தொழிற் சங்கம், வாழ்த்தி வரவேற்றன.

எந்த தொழிற் சங்கம் தமிழ் பேசும் தொழிலாளிகளின் உரிமைக்காக சிங்களச் சட்டத்துக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்த வேண்டுமோ அதே தொழிற் சங்கம் சிங்களச் சட்டத்தை வரவேற்று வாழ்த்தியதின் மூலம் தமிழ் பேசும் தொழிலாளர்களை அரசாங்கத்துக்கு காட்டிக் கொடுத்துவிட்டது. இந்தக் கசப்பான அனுபவமே இனவேற்றுமைகள் கடந்தவர்க்க ஒற்றுமையில் எம்மை நம்பிக்கை இழக்கச் செய்து, தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு மொழிவழித் தொழிற் சங்கம் அமைக்க வைத்தது.

இதே அனுபவம் இன்று உங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. எனவே நீங்களும் மொழி வழியில் இயங்கும் தொழிற் சங்கத்தில் சேர்ந்து, தமிழ் பேசும் தொழிலாளர்களது ஐக்கியத்துக்கும் அவர்கள் இழந்துவிட்ட உரிமைக்கும் பாடுபட வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன்.'

திரு. கோடீசுவரன் மேலும் தொடர்ந்து பேசிய பொழுது தமிழ் பேசும் தொழிலாளர்கள் முற்போக்குவாதம் பேசும் தலைவர்களின் எடுபிடிகளாக இருக்கக் கூடாதென்றும், அவர்களது உரிமைக்கு அவர்களே பாடுபட முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. வே. தங்கவேல் அவர்கள் பேசும் பொழுது தமிழ் பேசும் தொழிலாளர்களது தலைவிதி, தமிழ் பேசும் இனத்தின் விடுதலையோடு பிணைக்கப்பட்டு இருப்பதாகவும், ஆகவே இந்த இன விடுதலையை இலக்காக வைத்து தமிழ் பேசும் தொழிலாளர்கள் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.



திரு. செ. கோடீசுவரன் பி. ஏ.

திரு. நல்லதம்பி அவர்கள் பேசும் பொழுது, பொதுவுடைமை தொழிற்சங்கங்களிலும், வர்க்க ஒற்றுமையிலும் நம்பிக்கை வைத்து பணியாற்றிய காலம் போய்விட்டதென்றும், பொதுவுடைமைபேசுகின்ற டாக்டர் என். எம். பெரேரா அவர்களோ, பீட்டர் கெனமன் அவர்களோ அல்லது தோழர் சண்முகதாசன் அவர்களோ இன்று சிங்களத் தொழிலாளர்கள் மத்தியில் தமிழ் பேசும் தொழிலாளர்களது உரிமைபற்றி பேச முடியாது—பேச மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

திரு. எஸ். டி. செல்வரத்தினம், எஸ். சுப்பிரமணியம், சௌந்தரலிங்கம் மற்றும் பலரும் பேசினர். திரு. கோவிந்தசாமி நன்றியுரை நல்கினர்.

### சின்னச் செட்டிகுளம் கிழக்கு கிராமச்சபை தேர்தல்

1-ம் வட்டாரம் ஐ. பொன்னம்பலம் (சூரியன்), செ. சந்தாம்பிள்ளை (சைக்கிள்.

2-ம் வட்டாரம் அ. அருளப்பு (போட்டியில்லை)

3-ம் வட்டாரம் சி. நடராசா (சூரியன்) ச. தவரெத்தினராசா (சைக்கிள்), அ. சுலுத்தான் (கண்).

4-ம் வட்டாரம் சி. கணபதிப்பிள்ளை (மரம்), வ. மரியநாயகம் (சைக்கிள்), செ. அந்தோனிப்பிள்ளை (மணி).

5-ம் வட்டாரம் பொ. செல்வநாயகம் (போட்டியில்லை)

6-ம் வட்டாரம் த. மயில்வாகனம் (போட்டியில்லை).

7-ம் வட்டாரம் எஸ். எல். சவுந்தரநாயகம் (போட்டியில்லை).

8-ம் வட்டாரம் மெ. நாகூர்க்கனி (சைக்கிள்) மு. சாகுல்கமீது (மரம்).

9-ம் வட்டாரம் அ. அப்துல் மஜீது (போட்டியில்லை)

10-ம் வட்டாரம் சூ. பிலுப்பையா (போட்டியில்லை).

11-ம் வட்டாரம் ச. ஐயம்பிள்ளை (சூரியன்) ஐ. அமபலவாணி (மணி) க. மாரிமுத்து (லாம்பு), சி. சுப்பையா (மரம்), அ. சிவகுருநாதன் (கப்பல்) சி. தருமலிங்கம் (சைக்கிள்).

சின்னச் செட்டிக்குளம் கிழக்கு கிராம சபை மண்டபத்திலே 25-2-64 பிற்பகல் 2-மணிக்கு வவுனியா தேர்தல் அதிகாரி முன்னிலையிலே மேற் சொல்லப்பட்ட அபேட்சகர்களுடைய நியமன முறைப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எஸ்.எல். சவுந்தரநாயகம், சூ. பிலுப்பையா, சி. கணபதிப்பிள்ளை, ச. ஐயம்பிள்ளை ஆகியோர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆதரவாளர்களுமாகும்.

### போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்

25-2-64 பிற்பகல் 2 மணிக்கு சின்னச் செட்டிகுளம் கிழக்குக் கிராமச் சபையின் தேர்தல் அபேட்சகர் நியமன முறைப் பத்திரங்கள், குறித்த கி. ச. காரியாலயத்தில் வவுனியாத் தேர்தல் அதிகாரி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

அவ்வமயம் குறித்த கிராமச் சங்கத்தின் ஏழாம் வட்டார உறுப்பினராக, பிரபல கவிஞரும் சிறுகதைச் சிற்பியுமான இலுப்பைக் குளம் திரு. எஸ். எல். சவுந்தரநாயகம் ("வன்னியூர்க் கவிராயர்") அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். அவரின் கட்டுப்பணத்தையும் குறித்த வட்டாரத்து மக்களே சேர்த்துக் கட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

### களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை.

களுவாஞ்சிக்குடி சைவ மகா சபையின் 12-வது ஆண்டு நிறைவு விழாவை 24-4-64-ல் வழமைபோல் இம்முறையும் விமரிசையாகக் கொண்டாடுவதென்று சபைத் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விழாவை [illegible] சொற்பொழிவு, கதா காலாட்சேபம், சங்கீதக் கச்சேரி, கூட்டுப்பிரார்த்தனைகள் நடாத்துவதுடன், மாணவர்களுக்கு, தேவார மனன இசைப் போட்டி சமய பாடப் பரீட்சைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, என்பனவும், மாணவரல்லாதாருக்கு பேச்சுப் போட்டி மாத்திரமும் வைத்து, புத்தகப் பரிசுகள் வழங்குவதென்ற பிரேரணை காரியதரிசியால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. பின் இப்போட்டிகளின் பொறுப்பாளராகவும் தலைவராகவும் தனுதிகாரி திரு. வி. விஸ்வலிங்கம் ஆசிரியர் அவர்கள், தெரிவு செய்யப்பட்டதுடன் மத்தியஸ்தர்களாக வெளியூர் பிரமுகர்கள் மூவர் அடங்கிய குழுவொன்றும் தெரியப்பட்டது.

தேவார மனன இசைப் போட்டி, பேச்சுப் போட்டி 17-4-64 பி. ப. 4 மணிக்கு விக்கினேஸ்வரர் ஆலயத்திலும், சமய பாடப் பரீட்சைப் போட்டி, கட்டுரைப் போட்டி 4-4-64 மு. ப. 9.00 முதல் 10-30 வரையும் பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடாத்துவதென்றும் போட்டிகளுக்கு மனுப்பண்ணும் கடைசித் திகதி 20-3-64 என்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், சுவாமி நடராசானந்தா, சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேல், திரு. எஸ். கனகேந்திரன் (ஈழவேந்தன்) திரு. சீ. நாகையா ஆசிரியர், திரு. வி. விஸ்வலிங்கம் ஆசிரியர், திரு. மகாலிங்கம் சங்கீத ஆசிரியர் அவர்களுக்கு அழைப்பு விடுவதென்றும் இதன் பொறுப்பை காரியதரிசி திரு கோ. பாக்கியராசா கையேற்று இதற்கானவை செய்யவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானித்ததுடன், அங்கத்தவர்களின் சந்தா அறிவித்தல் வழங்கும்படியும் தீர்மானித்தனர். இத்துடன் களுவாஞ்சிக் குடியில் இருக்கும் இந்து மாதர் மன்றம், சாரதா மாதர் சங்கம், என்பவற்றிலிருந்தும், அழைப்பு விடுத்து ஒவ்வொரு நிகழ்ச்சி பெறுவதென்று தீர்மானித்து, கூட்டம் இனிது திரு. க. கந்தசாமி அவர்களின் தேவாரத்துடன் முடிவடைந்தது.

—

### புலவர் மன்றம்

20-2-64 வியாழக்கிழமை 'செல்லம்ஸ்' புகைப்பட நிலையத்தில் மன்றத் தலைவர் தலைமையில் புலவர் மன்றம் கூடியது. ஒரு தலைவர் மூலமாகக் கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டு இலங்கையிலே வேலையற்றிருக்கும் எட்டுப் புலவர் பட்டதாரிகளுக்கும் வேலை கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவது என்ற தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

புலவர் அ. திருநாவுக்கரசு தலைவராகவும் புலவர் சோ. கனகரத்தினம் செயலாளராகவும் புலவர் கா. கந்தையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

"மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அமைய வெகு விரைவில் மகஜர் ஒன்று தயாரித்து ஒரு தலைவர் மூலமாகக் கல்வி அமைச்சரைப் பேட்டி காண்போம். எங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி நீதி வழங்கும்படி போராடுவோம்." எனச் செயலாளர் தெரிவித்தார். இத்துடன் கூட்டம் முடிவுற்றது.

—

### தேசிய கைத்தொழில் புரட்சி

23-2-64 ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணியளவில் தேசிய கைத்தொழில் இயக்கத்தின் தலைவர் திரு. தா. சண்முகநாதன் அவர்களுடைய இல்லத்தில் மேற்படி இயக்க நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

செயலாளராக திரு. வே. சண்முகலிங்கமும் பொருளாளராக: திரு. இ. விஞயகலிங்கமும் துணைச் செயலாளராக திரு. சி. சண்முகவடிவேலும், தெரிவு செய்யப்பட்டனர். அமைப்புக் கூட்டத்தில் தலைவர் பேசுகையில் "அங்கத்தவர்கள் அனைவரும் தேசிய கைதொழில் வளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க இன்றே சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

—

### உடுவில் கிராம சபை

உடுவில் கிராம சபை உப-தலைவர் தேர்தலில் திருவாளர் நாகமுத்து சின்னத்துரை ஏகமனதாகத் தெர்வு செய்யப்பட்டுள்ளார். இவரே முதன் முதல் இக் கிராம சபைக்கு சிறுபான்மை உப-தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கறையான்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலி அடங்கிவிட்டது. களரியில் அமைதி நிலவுகிறது. கதீப் விவாகச் சடங்கைத் தொடங்கிவைத்தார்.

எங்கோ இரண்டுநாய்கள் சமய சந்தர்ப்பம் தெரியாமல் இழுபறிப்பட்டுக் கொண்டு 'வாள், வாள்' என்று கத்தின. காலநேரம் அறியாத கோழி ஒன்று கலியாண வீட்டின் முகட்டில் நின்று சிறகடித்துக்கேவியது.

விவாகச் சடங்கு நடந்து கொண்டுதானிருந்தது. திடீரென்று வாசலில் பரபரப்பும், அமைதியின்மையும் தென்பட்டது. எல்லாரும் வாசலையே திரும்பிப்பார்த்தனர். கலியாணத்திற்கு வந்திருந்த கிராமத்துப் பெண்கள் வேலியைத் துளைத்துக் கொண்டு 'குசு குசு' மந்திரம் ஓதினர்.

எல்லாருடைய கண்களும் கலியாணக் களரிக்கு நேரே வாசலில் நிலைத்திருந்தன.

அங்கே—

ஆறுவயதுப் பையனையும், நான்குவயதுச் சிறுமியையும் கையில் பிடித்துக் கொண்டு ஒரு நடுத்தர வயது மாது நின்று அழுது கொண்டு இருந்தாள். கறுப்பாக இருந்தாலும் கருங்காலியில் கடைந்தெடுத்த சிற்பம் போலிருந்தாள். அவளுடைய உடையும் நகையும் அவள் எங்களூர்க்காரியில்லை என்பதை டமாரமடித்தன.

'ஆருபுள்ளை நீ! ஏன் ஒப்பாரிவைக்கிருய்?' மோதின் குடி மரைக்கார், தனக்குமட்டுமே சொந்தமான வெண்கலக் குரலில் ஒருகேள்வியை வீசிவிட்டுவாய்க்குள் இருந்த வெற்றிலைத் திரணையைக் குபீர் என்று காறிவிட்டார்.

'என்ர ஊர் பொத்துவில். மூணுவருசத்துக்கு முன் அவர் என்னை உட்டுட்டு ஒளிச்சிட்டார். இஞ்சேதானிருக்காரெண்டு நேத்துத்தான் கேள்விப்பட்டேன்...'

அவளுடைய கதை முடியவில்லை. அவளுடைய மகன் 'வாப்பா' என்ற அலறிக் கொண்டு மாப்பிள்ளையின் மடியில் போய் விழுந்தான். 'காவின்' களரியே செயலிழந்துவிட்டது போன்ற அமைதி. புதிதாக எழுந்த அந்த வேலியைக் கறையான் பட்டாளம் அரித்து அழித்துவிடலாம், பாத்திமாவின் மனதில்எழுந்த ஆசைத் தீயை எப்படித் தணிக்கலாம்?

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாழக்கிழமை 12ம் திகதி தொடக்கம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) கொபிட்டல் வின்ஸர் (யாழ்ப்பாணம்)

நெல்சன் (திருகோணமலை) தாஜ்மஹால் (மாத்தளை) ரீகல் (கம்பளை)

இம்பீரியல் (மட்டக்களப்பு) அசோகா (புத்தளம்)

எஸ். எஸ். ராஜேந்திரன், முத்துராமன், சகஸ்ரநாமம், தேவிகா, புஷ்பலதா, டி. ஆர். ராமச்சந்திரன், கமலஹாசன், ஷீலாதேவி, டி. ஆர். ராஜகுமாரி தோன்றும்

# வானம்பாடி

இசை: கே. வி. மகாதேவன் பாடல்கள்: கண்ணதாசன், பி. அருணாசலம்

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், சுசீலா, ராகவன், ஈஸ்வரி

கெபிட்டல்

ஐந்தாவதும், கடைசி வாரமும்!

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, தங்கவேலு, பாலையா நடித்த

## வளர்பிறை

விரைவில் திரையிடப்படும்!

எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஆர். ராதா, அசோகன், ஜாவர் சீதாராமன், மனோரமா, கமலஹாசன் நடித்த

## ஆனந்த ஜோதி

கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கருத்துப் படையல்!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

மொடர்ன் (பதுளை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)



கஸ்தூரி பிலிம்ஸ்

# பார் மகளே பார்

டைரக்ஷன்: ஏ. பீம்சிங் இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பணத்துக்கும் போலிக் கௌரவத்துக்கும் அடிமையாகி தன் ஆருயிர் மக்களையும் உற்ற மனைவியையும் ஓயாத சஞ்சலத்துள்ளாக்கி தானும் ஆறாத துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் கோடீஸ்வரன் ஒருவனின் பரிதாப வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம்!

உள்ளத்தைத் தொடும் 4வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)

லிபர்ட்டி (பதுளை) சீகிரி (பண்டாரவளை) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) பிரீதி (அட்டன்)



சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, பாலாஜி, ரங்கராவ், பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி, ஏ. ராமராவ் முதலியோர் நடித்த

பிரசாத் மூவீஸ் அளிக்கும்

# இருவர் உள்ளம்



பணத்தால் மட்டும் சகல பாவையரின் உள்ளங்களையும் கவர்ந்துவிட முடியுமா? பாவையரின் உளப்பாங்கைச் சித்தரிக்கும் பண்பு நிறைந்த ஓவியம்!

மூலக்கதை: டாக்டர் லட்சுமி  திரைக் கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி  இசையமைப்பு: கே. வி. மகாதேவன்  டைரக்ஷன்: பிரசாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் அச்சியந்திரசாலையில் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மார்ச் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.